# தாய்வீடு

214

THAIVEEDU JANUARY 2025 ஜனவரி www.thaiveedu.com



## மூத்த பத்திரிகையாளர் ஈ.கே. ராஜகோபால்

சிறப்பிதழ்

ISSN 2369-3657

மூத்த பத்திரிகையாளர்
## ஈ.கே. ராஜகோபால்!



# வரலாறு வாழ்த்தும் ராஜகோபால்

– எஸ். ஜெகதீசன்

**க**டந்த 65 வருடங்களுக்கும் மேலான ஈ.கே. ராஜகோபாலின் வரலாறு, அதுவும் புகழ் பூத்த முன்னணித் தமிழ்ப் பத்திரிகை யாளராக அவரது வரலாறு, சாதாரண வரலாறு அல்ல! செய்திகளை எடுப்பதிலும் அவற்றை ஏற்ற முறையில் தயா ரிப்பதிலும் ஏற்றமுடன் வாசகரிடம் சேர்ப்பிப்பதிலும் அவரிடம் தனித்துவமும் இருந்தது. கலைத்துவமும் இருந்தது.

செய்திகளுக்கு உயிரூட்டினார். கலைஞர்களுக்கு உயிர் கொடுத்தார். காகிதங்கள் அவரால் கௌரவப்பட்டன. அவரு டனான முதலாவது சந்திப்புக்கூட நிரந்தரமாக எனது மூளைக்குள் முகாமிட்டுள்ளது.

ஈழநாடு பத்திரிகையின் ஆசிரிய பகுதி! அவர் அங்கு தேர்ந்த உதவி ஆசிரியர். பத்திரிகை வாழ்வின் முதல் நாள் எனக்கு.

உறுத்தாத எளிமை அவரிடம் இருந்ததை அவர் பழகிய விதம் காட்டியது. உறுத்தாத எளிமை அவரது எழுத்தில் இருந்ததை அவர் எழுதிய விதம் காட்டியது.

அசந்து போனேன். அன்று தொட்டு அந்த அன்பும் அந்த மதிப்பும் அடர்த்தியாகி அவருடன் நெருக்கமாக நெருங்க வைத்தன.

ஊடகத்துள் அவர் இருக்கின்றாரா அல்லது அவருக்குள் ஊடகம் இருக்கின்றதா என நான் விதந்தது பல காலம் நீடித்தது.

செய்திகளுக்கும், செய்தி அறிக்கைகளுக்கும், உலக விவகாரங்களுக்கும், உள்நாட்டு நடப்புகளுக்கும், முக்கியமளித்தது அவரது அன்றாட வாழ்வு.

அவற்றுடன் கலை, இலக்கியம், கலாசாரம், பண்பாட்டுக்கோலங்கள், சிறுகதை, தொடர்கதை போன்ற பிற பலவும் எந்நேரமும் ராஜனின் நினைவின் எல்லைக்குள் மேலதிக சேர்க்கையாக வாழ்ந்து கொண்டிருந்ததும் தெரிந்தவர்களுக்கு தெரியும்.

இலக்கியம், அரசியல், வரலாறு, கலை, கல்வி, ஆன்மீகம், அறிவியல், பொருளாதாரம், தொழில் நுட்பம், சினிமா, விளையாட்டு என பற்பல துறைகளிலும் உள்ள அறிவும் சரளமாகவும் சாமர்த்தியமாகவும் உரையாடும் ஆற்றலும் பல மக்களின் - விசேடமாக பல பிரமுகர்களின் இதயங்களில் இலகுவாக குடிபுக வைத்தது.

பத்திரிகையாளர்களையும், படிப்பாளர்களையும், படைப்பாளர்களையும் அரவணைத்து சமுதாயத்தை மேம்படுத்தும் சாதுரியமும் அவரிடமிருந்தது.

அற்புதமான, ஆழமான செய்திகளை அழகு தமிழில் இனிய நடையில் கவரும் தலைப்புகளில் பதியமிடும் நிமிடங்களும் அவரோடிருந்தது.

இளையதம்பி குமாரசாமி ராஜ கோபால் என்பது அவரது முழுப் பெயர். குமாரசாமி விசாலாட்சி இணையரின் மூத்த மகனாக டிசம்பர் 25, 1944-இல் வல்வெட்டியில் பிறந்தார். ஊரார் அவரது தந்தையாரை அப்பா த்துரை என்ற செல்லப் பெயரிலும் அழைத்தனர். சந்திரகோபால், பவானி, பத்மினி, நளினி, மாலினி ஆகியோர் அவரது உடன்பிறப்புகளாயினர். சர்வதேச புகழ் பூத்த நடன ஆசிரியையும், லண்டன் நாட்டியாலயா அதிபருமான ராகினி அவரது மனைவி. ஷர்மினியும், ஷியாம் ராஜுஂம் அவரது பிள்ளைகள்.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன், கந்தரோடை ஸ்கந்தவரோதயா ஆகிய கல்லூரிகளின் மாணவர்களின் அன்றைய வரவுப் பதிவேடுகளில் அவரது பெயரும் இருக்கும். கல்லூரி காலத்தில் அவரது வார இறுதி நாட்களை கலைச் செல்வி சஞ்சிகை தனதாக்கிக் கொண்டது. வசந்தம், எரிமலை, வாடா மல்லிகை ஆகிய மூன்று கையெழுத்துச் சஞ்சிகைகளை தயாரித்து வெளியிட்ட சிறப்பும் அவரது மாணவப் பிராயத்துக்கு உண்டு. வராந்தரியாக வெளிவந்துகொண்டிருந்த வரதரின் புதினம் பத்திரிகையும், வரதரின் பல குறிப்பும் அவரது எழுத்தாற்றல் பரந்து விரிய களம் காட்டின. அவரது ஆற்றலில் கவரப்பட்ட விவேகி சஞ்சிகை பொறுப்பாசிரியராக்கி தன்னை மெருகேற்றிக் கொண்டது. கலைச்செல்வியில் பல காலம் அவர் எழுதியது பலதும் பத்தும். அதில் ஒரு புதிர். எந்த விளையாட்டிலும் முன்னோக்கிச் சென்றால்தான் வெல்லலாம். ஆனால் எந்த விளையாட்டில் பின் நோக்கி செல்பவர்கள் வெற்றியீட்டுவார்கள் என்றிருந்தது. 1964-ஆம் ஆண்டு கேட்கப்பட்ட இக் கேள்விக்கான சரியான பதிலாகிய கயிறிழுத்தல் என்பதனை 2024-ஆம் ஆண்டிலும் எத்தனை பேரால் ‘இழுத்தடிக்காமல்’ சொல்ல முடியும்?

**எந்த விளையாட்டிலும் முன்னோக்கிச் சென்றால்தான் வெல்லலாம். ஆனால் எந்த விளையாட்டில் பின் நோக்கி செல்பவர்கள் வெற்றியீட்டுவார்கள் ? இதற்கான சரியான பதிலை எத்தனை பேரால் ‘இழுத்தடிக்காமல்’ சொல்ல முடியும்?**

விவேகி சஞ்சிகையில் வந்த கேள்வி பதில் பகுதிக்கு ‘டக் டக்’! என்பதே அவர் இட்ட பெயர். வாசகர் கேள்விகளுக்கு ‘டக் டக்’கென சுவாரஸியமாக அவர் அளித்த பதில்கள் அந்த நாட்களில் மிகுந்த அபிமானம் பெற்றிருந்தன.

ஆரம்பத்தில் எக்கச்சக்கமான சிறுகதைகளை எழுதியுள்ளார். ‘அவரது முதலாவது சிறுகதை பூங்காற்றே கேள்! கையெழுத்துப் பிரதியாக அவர் தயாரித்த வசந்தம் சஞ்சிகையில் உள்ளது’ என்று அவரது உற்ற நண்பனான பிரபல எழுத்தாளர் பெரி. சண்முகநாதன் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். யாழ். புதினத்தில் வெளிவந்த ‘அவள் தெய்வம். நீ?’ என்பதே அச்சில் வெளிவந்த அவரது முதலாவது சிறுகதை. ஈழநாட்டில் வெளிவந்த முதலாவது சிறுகதை ‘மொட்டை மரம்’.

1964-ஆம் ஆண்டு ஈழநாடு உதவி ஆசிரியராக நியமித்தது. பக்கம் சாராது பக்கம் பக்கமாக எழுதிக் குவித்தார். காலக்கிரமத்தில் ஈழநாட்டின் இயக்குனர் சபை செங்கதிர், கமலம் போன்ற சஞ்சிகைகளை மேலதிகமாக வெளி யிடத் தீர்மானித்த பொழுது செங்கதிரின் இணை ஆசிரியராகவும் ராஜகோபாலையும் இணைத்துக்கொண்டது. சிறிது காலம் கண்டியிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த செய்தி பத்திரிகையின் யாழ். நிருபராகவும் நட்பு ரீதியில் செய்தி வழங்கினார்.

ஈழநாடு பத்திரிகை அலுவலகத்திற்கு காலுடன் நுழைந்த பல கலைஞர்கள் ராஜகோபாலை சந்தித்த பின் இறகுகளுடன் திரும்பியது பத்திரிகையாளராக அவர் பக்கத்திலிருந்ததில் எனக்கும் தெரியும்.

கலைஞர்களை நெறிப்படுத்தவும் சரிப்படுத்தவும் கூடிய வலுமிக்க சக்தியாக அமைந்தது அவர் எழுதிய நம் நாட்டுக் கலைஞர்கள். அழிக்கும் அவதூறுகளை அள்ளி வீசாத ராஜ கோபாலிடம் ஆளாக்கும் அபிமானம் அதிகரித்திருந்தமையால் பல கலைஞர்கள் ராஜகோபாலின் பார்வையால் தலை தூக்கியதும், ஆக்கம் தரும் எழுத்தாளர்களாக ஆகியதும், நயத்தக்க நாகரிகம்.

அனலைதீவுற்கு அருகே அனாதரவான ஒரு நிலப்பகுதிக்கு உல்லாசப் பயணிகளைக் கவரும் மவுசைப் பெற்றுக் கொடுத்தது அவரது தொடரான பருத்தித்தீவில் ஒரு ராஜா.

தெருவில் யாசகம் பெறுவோரது சுகநலம் விசாரித்து அவர்களது குறைகளை, கஷ்டங்களை கேட்டறிந்து அவற்றை குறைப்பதற்காக, நிவர்த்திப்பதற்காக எழுதிய ஒரே ஒரு பத்திரிகையாளர் இவராகத்தான் இருக்க முடியும். வாழ்க்கை மறுக்கப்பட்டவர்களுக்கு வாழ்வு கொடுத்தது அவரின் இன்னொரு தொடரான யாரை நம்பி நாம் பிறந்தோம்.

அன்பால் அரவணைத்து, ஆதரவு நல்கும் பண்பும், துயரில் ஆறுதல் கூறும் சுபாவமும், சமூகம் மீதான பற்றும் அக்க றையும் அவரை எடுத்துக்காட்டாக எடுத்துக்காட்ட வைத்தன!

இரணைமடு குளத்திற்கு பாடசாலையுடன் சுற்றுலாச் சென்ற ஒரு பிஞ்சு மாணவி பரிதாபமாக அதற்கு பலியாகித் தனது வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்த தகவல் ராஜகோபாலின் அடிமனதை விம்மி விம்மி அழ வைத்ததால், அடுத்த நாள் செய்தி அனைத்து இதயங்களையும் பிசைந்து பிழிய வைத்தது. பலரது இதயத் துடிப்பை நிற்க வைத்து, துடிக்க வைத்ததாக அப்பொழுது பலராலும் பேசப்பட்டது.

ஏழு வயதுச் சிறுமியொருத்தி தனது இளைய சகோதரிகள் மூவருக்கு தாயாய் - தந்தையாய் - உற்றாராய் - சுற்றாராய் இருக்கும் பாழாய் போன வாழ்வு கண்டு கொதித்த ராஜகோ பாலின் பேனா, சாரை சாரையாய் இரத்த அருவி கொட்டி யதால், கவனிப்பாராற்றுக் கிடந்த அந்த ஏழு வயதுத் தாய்க்கு நிவாரணம் கிடைத்தது. ராஜனின் அச் செய்தியின் பின்னர் திரட்டப்பட்ட ஒரு லட்சம் ரூபாய் நிவாரண நிதியினை, 5,000 ரூபாய் காசோலை அனுப்பி ஆரம்பித்து வைத்தவர் அப் போதைய தபால் அமைச்சர் செல்லையா குமாரசூரியர். மர ணத்தைக்கூட மரிக்க வைக்கும் ஆற்றல் ராஜகோபாலிடமி ருந்தது.

இருவருக்கும் ஒரே நேரம் வேலை முடியும் சந்தர்ப்பங்களும் இடைக்கிடை வரும்.

காரியாலயத்திலிருந்து பஸ் நிலையம் பத்து நிமிட நடை தூரம். ஆனால் அவருடன் சென்றாலோ அதுவே பல மணி நேர தூரமாக நீண்டுவிடும். அலுவலக அலுப்பு அதன் கார ணமல்ல! காரில் செல்பவர்கள், எதிர் திசையில் நடந்து வருப வர்கள் நிறுத்தி வைத்துக் கதைப்பார்கள்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர சபை முதல் வர்கள், உள்ளூராட்சி பிரமுகர்கள், ஆணையாளர்கள், அதி காரிகள், பல்கலைகழக வேந்தர்கள், பேராசிரியர்கள், விரிவு ரையாளர்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மருத்துவர், வழக்கறிஞர், காவற்துறையினர், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், வர்த்தகர்கள் என பிரபலங்களிடமும் பிரப லமாக இருந்தவர் ராஜகோபால்.
இதுவரை நான்கு நூல்கள் அவரிடமிருந்து சமூகத்திற்கு கிடைத்தன. மக்கள் பிரதமர் ஸ்ரீ மாவோ அவரது முதலாவது நூல் மட்டுமல்ல ஸ்ரீ மாவோ பற்றி தமிழில் வெளிவந்த முதலாவது நூலும் இதுவே ஆகும். இந்நூலை நேரடியாக பிரதமரிடம் கையளித்த ராஜகோபாலிடம் இன்னொரு பிரதியை கேட்டு வாங்கிய பிரதமர் அதில் தனது கையெழுத்தை வைத்ததுடன் நூறு ரூபாவையும் சேர்த்து ராஜனிடம் வழங்கிய ஞாபகம் எனக்கு உண்டு.

சில வெற்றிகள் கூட விலாசமற்றுப் போய்விடுகின்றன, ஆனால் சில தோல்விகளுக்குக் கூட சரித்திரம் உண்டு என் பதை நன்கு உணர்த்தியது அவரது இரண்டாவது நூலாகிய வி.பியின் சோவியத் பயணக் கதை.

வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள் என்ற அவரது மூன்றாவது நூலை வாசிக்கும் ஆற்றல் மட்டும் பசுபிக் சமுத்திரத்திற்கு இருந்திருக்குமேயானால் என்றோ அது பாக்கு நீரிணையுடன் சங்கமித்திருக்கும்.

சோதனையின் கொம்பு முறித்துச் சாதனை பலதை மனித குலத்திற்கு காட்டிய ஆழிக்குமரன் ஆனந்தனின் செயலாற் றல்கள் அவரது நான்காவது நூலானபொழுது பலர் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி காலம் போற்றும் முத்துகளுடன் மிதந்தனர்.

இலங்கையில் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் அவற்றின் ஆசிரியர்கள் உட்பட சுமார் மூன்று தலை முறை இலக்கியவாதிகளினதும் அரசியல்வாதிகளினதும் வர லாறுகளை ஞாபகத்திலிருந்தே அவர் சொல்வது ஆச்சரியம்.

இயல், இசை, நாடகம், கல்வி, கணிதம், மருத்துவம், சட்டம், காவல், அரசியல், சமயம், சோதிடம், விளையாட்டு, வணிகம், சமூகம், ஊடகம் என எத்துறையிலும் பிர பலமான ஈழத்தமிழர் எவரும் ஒரு தரமேனும் அவருடன் உரையா டாமல் இருந்திருந்தால், அது பேராச்சரியம். தினகரன் பத்திரிகை இவரை 1975-இல் துணை ஆசிரிய ராக்கி கொழும்புக்கு அழைத்தது.



அத்துடன் நாடாளுமன்றுக்கும் நிருபராகியதில் பல அமைச்சர்களுடன் நெருக்கமானார். தினகரனின் முதலாம் பக்கம் முதல் கடைசிப்பக்கம் வரை கவரும் வகையில் அவரது கைவண்ணம் கண்ட வாசகர்கள் பல்கிப் பெருகினர். இதயராகங்கள், கலையரங்கம், சினிமாப்பகுதி எனவும் பிறவுமாக பல தரப்பட்ட விஷயங்களை பக்கம் பக்கமாக எழுதி, தினகரனின் எல்லாப் பக்கங்களும் இரசிக்கத்தக்கவை என்று சொல்ல வைத்தார்.

அச்சடித்த நந்தவனமாக அழகாக மலர்ந்தது தினகரன்.

1975-ஆம் ஆண்டு லண்டன் சென்றுவிட்டேன்.

லண்டனிலிருந்து எனது பல கட்டுரைகள் தினகரனில் வருவதற்கு காரணகர்த்தாவான ராஜகோபால், எப்பொழுதும் என் மனதின் அருகிலிருந்தார்.

ஆறு வருடங்களின் பின் ஈழநாட்டிற்கு மீண்டார்.

1985-ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ். முத்திரை சந்தையடியில் ஆறு மாத இளம் கர்ப்பிணிப் பெண் மீது சிங்கள இராணுவக் காடையர் பலாத்காரம் புரிந்த கொடூரத்தை ஈழநாட்டிலிருந்த ராஜகோபாலால் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பின்னர், இராணுவத்தாலும் ராஜகோபாலை சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

இங்கிலாந்து அவரை அரவணைத்தது.

1993-இல் இங்கிலாந்தில் தமிழன் என்று இவரை சொல்ல வைத்தது தமிழன் பத்திரிகை. தமிழரோடு தமிழில் பேசிய தமிழன் பத்திரிகையால் அவரை கனவானாக்கவும் முடியவில்லை. அவரை தனவானாக்கவும் முயலவில்லை. சமகாலத்திலே ஆசிரியராக ஈழகேசரி பத்திரிகையையும் வெளியிட்டார். ஆனால் அவசர யுகம் அதனையும் ஆட்கொள்ளவில்லை. ஆனால் நீண்ட நாள் கனவுடனும் புதிதாய் தோன்றிய தினவுடனும் 1994-இல் புதினம், மனம் பேசுகிறது ஆகிய பத்திரிகைகளை வர்ணத்தில் வெளியிட்டு நிறைவேற்று அதிகாரியாகவும், பிரதம நிர்வாக ஆசிரியராகவும் வீறுற வீற்றிருந்தவர் ராஜகோபால் என்பதை வரலாறு அடிக்கோடிடும்!

இலக்கிய களஞ்சியமான புதினம் ராஜகோபாலின் புனிதம் என்பார்கள் படித்தவர்கள்.

தமிழ் மக்களின் உயர்வுக்காகவும், நல் வாழ்வுக்காகவும், ஏற்றமுடன் பணிசெய்வதை பணிவோடும், துணிவோடும், முத்திரை பதித்தது புதினம் மாசிகை.

கோகிலா தங்கத்துரை, ஈ.கே.ஆர், ரங்கன் தேசிகன், மகரந்தன், தேனீ, விசாலாட்சி, ராகி, ராகினி, பவானி, பாமா, ஷர்மினி, ஷியாம், ராகிராஜ் என அவரது புனை பெயர்களை கூட புகழ் பூக்க வைத்தார்.

ஈ.கே.ஆர் பப்ளிஷர்ஸ், ஈழகேசரி பப்ளிஷர்ஸ், தமிழன் பப்ளிஷர்ஸ், புதினம் வெளியீட்டகம் ஆகிய பதிப்பகங்களை சொந்தமாகக் கொண்டு இயங்கிய ராஜகோபால் அவற்றின் ஊடாக தனது படைப்புகளுக்கும் வெளியாரின் வேறு சில படைப்புகளுக்கும் நூலுருக்கொடுத்தார்.

ராஜகோபால் சிவப்பு சிந்தனையாளர். பொதுவுடமை கட்சியாளர். அந்த வட்டாரத்தில் விஸ்தாரமான நட்பு இருந்தது. எனினும் மாற்று அரசியலாளருடனும் பேத மற்ற உறவை அவர் பேணியது மனதில் குழப்ப மின்றி குமிழிடுகிறது..

ராஜகோபாலின் வல்வெட்டி வீட்டிற்கோ அல்லது நாவலியில் உள்ள அவரது சிறிய தாயாரின் வீட்டிற்கோ இரண்டொரு தடவை சென்றுள்ளேன். அப்பொழுதெல்லாம் கைகளை பற்றியவாறே உரையாடுவதும் தேநீருடன் எள்ளுருண்டை தந்து உப



சரிப்பதும் ராஜகோபாலின் தாயாரது வழமை. 2024-இன் நடுப்பகுதியில் கனடா வந்திருந்த ராஜகோபால் அவரது தங்கை மாலினி (டொலி) வீட்டில் தங்கியிருந்தார். ராஜகோபால் உரையாடிய விதமும், தங்கை உபசரித்த விதமும் அப்படியே தாயாரை நினைவில் நிறுத்தின.

செய்தி, கட்டுரை, கடிதம் எதுவாகவும் இருக்கட்டுமே! அவர் எழுதும் பாணி அலாதியானது. மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுவதில் அவருக்கு நிகர் அவரே. விடயங்களுக்கு அருமையான விமர்சனங்களையும், கடிதங்களுக்கு அழகான பதில்களையும் உடனக்குடன் எழுதும் உன்னத சுபாவம் அவரிடம் உண்டு.

அவரது பெருமதிப்புக்கும், பெருவிருப்புக்கும் உரிய பத்திரிகையாளர்களாக, ஈழநாட்டின் பிரதம ஆசிரியராகவிருந்த திரு. கே.பி. ஹரன் அவர்களும் தினகரன் பிரதம ஆசிரியராகவிருந்த திரு. ஆர். சிவகுருநாதன் அவர்களும் இதயத்தில் நீடித்து நிலைத்தனர். 'பத்திரிகை உலகில் பலர் வியக்கும் பத்திரிகையாளர்கள் அவர்கள். சில வார்த்தைகளை அல்லது சில வரிகளை அல்லது சில பந்திகளை திருத்தி சுவாரஸியம் சேர்ப்பது பத்திரிகை ஆசிரியர்களின் வழமை. ஆனால் அவர்கள் இருவரும் ஒரு கட்டுரையையே சிறிது நேரத்தில் விறுவிறுவென்று மாற்றி அச்சுக்கு அனுப்பும் ஆற்றல் நிரம்பியவர்கள் என்பது பாரறிந்த உண்மை. இவர்கள் இருவரும் குருநாதர்களாக எனக்குக் கிடைத்தது நான் பெற்ற பாக்கியம் என்பேன்.' என இதயம் மலர என்றுமே சொல்லிக் கொள்வார் ராஜகோபால்.

**செய்தி, கட்டுரை, கடிதம் எதுவாகவும் இருக்கட்டுமே! அவர் எழுதும் பாணி அலாதியானது. மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டுவதில் அவருக்கு நிகர் அவரே. மனசுக்குள் சுளுக்கெடுக்கும் ஆற்றல் பெற்றவை அவரது எழுத்துகள்! இதயத்தைத் துளைத்துத் துளைத்துத் துவாரமிடாத கண்ணியம் மிக்கவை அவரது வார்த்தைகள்!**

பத்திரிகையாளர்களின் அன்றைய - இன்றைய வேறுபாடுகள் எவை? என்று அவரிடம் கேட்டுப்பாருங்கள்.

'தேவையானவற்றை விரல் நுனியில் வைத்திருக்கும் தேவை அன்றிந்தது. விரல் நுனியே தேவையானவற்றை தேடிப்பிடிக்கும் சேவை இன்றுஉளது. கிட்ட இருந்தாலும் சட்டெனத் தொடர்பு கொள்ள முடியாத நிலை அன்று. எட்ட இருந்தாலும் எட்டித் தொடும் சாதனங்கள் இன்று. செய்திகளை கூட்டியும், கதைகள், கட்டுரைகளை குறைத்தும் செதுக்கினர் அன்றைய பத்திரிகையாளர். திருப்பி அனுப்பினால் அவற்றைத் தாமே கவனித்துக் கொள்கின்றார்கள் இன்றைய எழுத்தாளர்கள்! தீபாவளி மலர் தயாரிப்பு ஆறு மாதங்களுக்கு முன்பே ஆரம்பமானது அன்று. ஆறு நாட்களோ ஆறு மணித்தியாலங்களோ போதும் என்ற நிலை இன்று. ஆகக்குறைந்தது நான்கு ஐந்து பேரது உழைப்பின்றி அச்சில் கொண்டு வர முடியாது அன்று. அனேகமாக ஒருவரே முடிக்கின்றார் எவ் வித களைப்புமின்றி இன்று!' என்பதே அவரது பதிலாகும்!

புதிய பத்திரிகையாளர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள் என்றால் 'சொல்லப் போகும் விடயத்தை சுற்றி வளைக்காது நேரே நறுக் என்று சொல்லும் பொழுதுதான் ஆக்கங்கள் மனதைத் தொடும். ஒரு செய்தியின் முக்கிய அம்சத்தை அந்தச் செய்தியின் முதலாவது வாக்கியமாகவே கொடுத்து விட வேண்டும். வாசகர்களை செய்திக்குள் செய்தியை தேடவிடக் கூடாது என்று சொல்வேன்' என்பார்.

'தொடர்ந்து எழுதுங்கள். தொடராக எழுதுங்கள்' என்பதே எழுத்தாளர்களுக்கான அவரது பொதுவான அறிவுரை.

எனது எழுத்துகளுக்கும் களம் தந்து வளம் தந்தது அந்த நல்ல உளம்! அவரது விரல்கள் வேகமாகச் செயற்படுவதுடன் வினோதமாக புரியும் மாயாஜாலம் கண்டு என் புருவங்கள் பாதி நெற்றியை பல தடவைகள் தொட்டுள்ளன. மனசுக்குள் சுளுக்கெடுக்கும் ஆற்றல் பெற்றவை அவரது எழுத்துகள்! இதயத்தைத் துளைத்துத் துளைத்துத் துவாரமிடாத கண்ணியம் மிக்கவை அவரது வார்த்தைகள்!

மக்களின் எண்ணங்களையும், வாழ்வியல் அழகையும், இதயங்களில் பதிய வைத்து முதியவர்களின் அனுபவத்தையும் இளைஞர்களின் ஆர்வத்தையும் இணைத்துக் கொண்டு, தொலை நோக்குப் பார்வையுடன் செயற்படுவதில், வல்லவராகவே வாழ்ந்த அவரது வாழ்வு புதிய பத்திரிகையாளர்களுக்கு நல்லதோர் முன்னுதாரணம்.

தனக்கென ஓர் தனியிடத்தைப்பெற்று தரணி போற்ற வாழ்ந்த ராஜகோபாலின் ஊடக வாழ்வு சாதனை நிறைந்தது. சுவை மிகுந்தது. ஓய்வறியா உழைப்பு பிரமிப்பு ஊட்டுவது.

இதயத்தை ஊடுருவும் ஜனரஞ்சக பத்திரிகையாளரான ராஜ கோபால் எம்முடன் வாழும் அதி மூத்த பத்திரிகையாளர்!

அவரது ஊடக தாகம், அவரது ஊடக அர்ப்பணிப்பு என்பன உச்சக் கட்டமாக அவரை ஊடக அடையாளமாக்கியதில் வியப்பேது?

'ஈழநாடு' பத்திரிகையின் விசாலமான வரலாற்றுப் பக்கங்களில் மதிப்பார்ந்த இடம் அவருக்கு என்றும் உண்டு!

தமிழ் பத்திரிகை உலகின் மதிப்பார்ந்த வரலாற்றுப் பக்கங்களிலும் வியாபகமான இடம் அவருக்கென்று என்றும் உண்டு!

முதுமையை வென்று முனைப்புடன் வாழ ஏதாவது ஒரு வழி இருந்தால் எவ்வளவு நல்லது!



jegatheesan.s@thaiveedu.com



# தமிழுக்கும் தமிழருக்கும் சமிக்கை விளக்கு ஈ.கே. ராஜகோபால்

– சிவபரிமேலழகர்

தனது பாலிய பருவத்தில் இருந்து யாழ்ப்பாணத்து ஈழநாடு பத்திரிகையிலும், தொடர்ந்து கொழும்பு ஏரிக்கரை பத்திரிகையான தினகரனிலும் பணியாற்றிய ஊடகத்துறை அனுபவத்தை அத்திவாரமாகக் கொண்டு, பின்னர் தனது சொந்த முயற்சிகளாக பல வடிவங்களை வெளிக்கொணர்ந்து பரிசோதனை செய்ததுடன் இலண்டனில் புதினம் என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை வெளியிட்டு, தொடர்ந்து பலவிதமான நெருக்குவாரங்களுக்கிடையிலும் எதிர்நீச்சல் போடவேண்டிய காலக்கட்டங்களிலும், களைத்து சளைத்துப் போகாமல் மாதாமாதம் தவறாமல், புதினம் பத்திரிகையை வெளிக்கொணர்ந்தது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

இனி புதினம் பத்திரிகையின் பக்கம் நமது பார்வையினை திருப்பினால், இன்றைய நமது சமுதாயம் சார்ந்த, பலதரப்பட்ட விடயங்களையும் பலதரப்பட்ட மட்டத்திலுள்ளவர்களுக்கும் சென்றடையும் வண்ணம், செய்திகளையும் தகவல்களையும், விளம்பரங்களையும் உள்ளடக்கிய குடும்பப் பத்திரிகையாக பிரசுரிக்கப்பட்டு இலவசமாக தமிழ் மக்கள் செறிந்து வாழுகின்ற பகுதிகளாகிய அனைத்து இடங்களிலும், பெரும்பாலும் தன் கைப்பட வினியோகித்து வருவதன் மூலம், பொது மக்கள் தனது புதினம் பத்திரிகை மீது வைத்துள்ள ஆவலையும் எதிர்பார்ப்புகளையும் நேரடியாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது எனத்தெரிவிக்கின்ற திரு. ஈ.கே. ராஜகோபால், சகல இலவச பத்திரிகைகளை போலவே புதினம் பத்திரிகையும், வினியோகத்தினருக்கும், வாடிக்கையாளர்களாகிய பொதுமக்களுக்கும், புதினம், செய்தித்தாள் என்ற நிலைப்பாடு தாண்டி வேறு பல தேவைகளையும் பூர்த்தி செய்கின்றது என, தனது மனவேதனையை நகைச்சுவையாகவும் நாசூக்காகவும் சொல்வதை நான் அறிவேன்.

புதினம் பத்திரிகை, தமிழர் தமது மண்ணில் இருந்து பிரிந்து பிறத்தியான் மண்ணில் வாழவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளவர்களுக்கு, காலத்தின் தேவை மட்டுமல்ல, காலத்தால் தந்த வரப்பிரசாதமும் ஆகும்.

புதினம் பத்திரிகையின் உள்ளடக்கத்தில் ஆசிரியர் தலையங்கமாக இருந்தால் என்ன, அல்லது மற்றவர்களது பங்களிப்பாக இருந்தால் என்ன, குறிப்பாக ஈழநாட்டினரின் சிந்தனை, சொல், செயல் என்பனவற்றை உள்ளடக்கியதாகவும், அவாக்களையும் அபிலாசைகளையும் பிரதிபலிப்பனவாகவும் அமைந்து விடுவதுடன், மக்கள் மத்தியில் புரையோடிப்போயுள்ள காலத்துக்கு ஒவ்வாத கழித்து விடவேண்டிய விடயங்களை கோடிட்டுக் காட்டுவனவாக இருப்பதுடன், நம்மவரின், குறிப்பாக குழந்தைகள், இளையவர், முதியவர் என பலதரப்பட்ட வயதினரதும் முயற்சிகளும் வெற்றிகளும் பிரபல்யப்படுத்தப்படுகின்ற அதே வேளை அவர்களது வேதனைகளையும் விரக்திகளையும் கூட ஆவணப்படுத்தப்படுகின்றது என்பது பெரிதாக பேசப்படாத நிதர்சனமான உண்மையாகும்.

பிரசுரமாகும் விளம்பரங்கள்கூட தமிழர் சமுதாய வாழ்வியல் மாற்றத்தினை கட்டியம் கூறி நிற்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

உலகில் விஞ்ஞானமாக இருந்தால் என்ன, மற்றைய எந்த துறைசார் கண்டுபிடிப்புகளோ அல்லது படைப்புகளாக இருந்தால் என்ன, அவை எல்லாவற்றினுள்ளும் அவற்றை அளவிடுகின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற, காட்டிக்கொடுக்கின்ற அளவுகாட்டிகளும் அவைகளுக்கென்று அவைக்கே உரித்தான சமிக்கை விளக்குகள், சாதக பாதக விளைவுகளை சுட்டிக்காட்டி எச்சரிப்பனவாகவும் அறிவிப்பனவாகவும் உள்ளதை நடைமுறை வாழ்க்கையில் காண்கின்றோம்.

புதினம் பத்திரிகையானது நமது சமுதாயத்தின் அளவுகோலாகவும், எச்சரிக்கை மணியாகவும் தமிழுக்கும் தமிழருக்கும் சமிக்கை விளக்காக இயங்கிக்கொண்டிருக்கின்றது.

இதன் இயக்குனர் ஈ.கே. ராஜகோபால் அவர்கள்.

இவருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் இவர் சார்ந்த சமுதாயத்தின் நன்றிகளும் வாழ்த்துகளும் உரித்தாகட்டும்.

info@thaiveedu.com



# சுமைதாங்கி!

## வேலா சுப்பிரமணியம்

கனடாவில் மட்டுமல்லாது உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழர்களுக்கெல்லாம் எம்மவர் சார்ந்த செய்திகள் கலை, பண்பாடு, விஞ்ஞானம், தொழில்நுட்பம், அரசியல், மருத்துவம், வீடு போன்ற பல சமூக விழுமியங்களை உள்ளடக்கியதாக வீறுநடை போட்டு ஒரு தரமுள்ள முதற்தர பத்திரிகையாக சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கும் பத்திரிகை ‘தாய்வீடு’ என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அத்தகையதொரு பத்திரிகை, தற்போது லண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கும் புகழ்பெற்ற ஒரு மூத்த பத்திரிகையாளனான திரு. இராஜகோபால் அவர்களை இனங்கண்டு அவர் வாழும் போதே அவரை கௌரவிக்கும் நோக்கோடு இவ்வாண்டு, முதல்மாத பத்திரிகையை சிறப்பிதழாக வெளியிட முன்வந்தமையைப் பாராட்டுவதோடு எமது குடும்ப சார்பில் எமது நன்றிகளை முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. இராஜகோபால் அவர்கள் எனது மைத்துனர். அவரது கடைக்குட்டித் தங்கை டொலியை திருமணம் செய்ததால் ஏற்பட்ட உறவு. அந்த வகையில் நான் அறிந்து கொண்ட தெரிந்து கொண்ட சில பொருத்தமான தகவல்களை, சம்பவங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

முதலில் குடும்பம் சார்ந்த எனது பார்வையை எனது அனுபவ வாயிலாகப் பதிவு செய்கிறேன். ‘எங்கடை அண்ணா எங்களுக்கு கடவுள் மாதிரி. அவர் என்ன சொன்னாலும் நாங்கள் ஒருவரும் திருப்பிக் கதைக்க மாட்டோம்’. இது எனது மனைவியின் வாயில் இருந்து பல காலமாக நான் கேட்டுக் கொண்டிருக்கும் சுலோகம். இத்தகையதொரு பெரிய அந்தஸ்தை இவர் எவ்வாறு சம்பாதித்துக் கொண்டார் என்ற ஆச்சரியத்தில் பல காலத்திற்கு முன்னரே அதுபற்றி விசாரி த்து அறிந்து கொண்டேன்.

1944 டிசம்பர் 25-ஆம் திகதி இயேசு பிரான் அவதரித்த திகதியில் பிறந்த திரு. ராஜகோபால் அவர்கள் தனது இளம் வயதில் தனது தந்தையை 1964-இல் பறிகொடுக்கிறார். விரும்பியோ விரும்பாமேலோ குடும்பப் பொறுப்பு முழுவதையும் தனது பதின்ம வயதின் முடிவில் சுமக்க வேண்டிய நிலை உருவாகிறது. இவரது தந்தையார் திரு. குமாரசாமி அவர்கள் இறக்கும் போது இவருக்கு வயது 20. இவரது கடைசித் தங்கையான டொலிக்கு வயது 5. இவர்களுக்கு இடையில் சந்திரகோபால், பாவனி, பத்மினி, நளினி என மேலும் 4 சகோதரர்கள். இவரது அம்மாவின் வயது 38. இப்போது நினைத்துப் பார்த்தாலே மயிர்க்கூச்செறிகிறது. ஒரு தகப்பன் இல்லாத வீட்டில் ஒரு பதின்மவயது தம்பியாரை







கட்டுப்பாடாக வளர்க்கவும் 4 பெண் சகோதரர்களை மிக்க கட்டுப்பாட்டோடும், பண்போடும், ஒழுக்கத்தோடும் வளர்த்தெடுக்கவும் எவ்வளவு பிரயத்தனம் எடுத்திருக்க வேண்டும். தனது இளமைக் கால சுகபோகங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, தன்னையே அர்ப்பணித்து, சகோதரர்கள் அனைவரையும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வர அரும்பாடுபட்டு வெற்றியும் கண்டு கொண்டார். தனது குறிக்கோளை அடைய பாசமுமள்ள, அக்கறையுள்ள அண்ணனாக மட்டுமன்றி ஒரு கண்டிப்பான தந்தையாகவும் தன்னை மாற்றிக் கொண்டார். தனது சகோதரர்களை மட்டுமன்றி தனது இளவயதில் கணவனை இழந்த தாயாரையும் கண் கலங்கவிடாது இறுதிவரை கூட இருந்து காப்பாற்றிய பெருமைக்குரியவர். எனவே, இவரது குடும்பம் இவரைக் கடவுளாகப் பார்ப்பது இவர் சம்பாதித்த ஒன்றே தவிர சூட்டப்பட்ட பட்டமல்ல என்பதே நான் அறிந்து கொண்ட உண்மை.

1977-ஆம் ஆண்டு நான் அரசாங்க வேலையில் சேர்ந்தபோது எனது சம்பளம் 240 ரூபா அத்துடன் பிரயாணச் செலவாக 75 ரூபாவும் கிடைக்கும். அதனைத் தற்போது நினைத்துப் பார்க்கிறேன். வன்னியில் எங்களுக்கு எத்தகை பெரிய குடும்பம் இருந்தாலும் சாப்பாட்டுச் செலவு பெரிதாக வராது. உறைவிடச் செலவு இலவசம் என்பதால் சமாளித்துக் கொண்டு போகலாம். ஆனால் அப்போது ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய்களைக் காண்பது எல்லாம் எட்டாப் பழமாக இருந்தது. என்னைப் பொறுத்தவரை, அதிலும் 1964 காலப் பகுதியில் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்கிறேன். ஒரு சிறுவனாகப் பத்திரிகைத் துறையில் காலடியெடுத்து வைத்து எவ்வளவை உழைத்திருக்க முடியும்?. 6 பேர் கொண்ட குடும்பத்தை நகர்த்த எவ்வளவு போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.

இவருக்கு இருந்த ஒரே துணையும் பலமும் இவரது தந்தையார் விட்டுச் சென்ற நிலமும் புலமும் என்பதுடன், இவருக்கிருந்த நம்பிக்கையும் துணிவும் பொறுப்பும் தான். 'என் உயிரிலும் மேலான தாய்' என அடிக்கடி இவர் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அத்தகைய பாசம்மிக்க தாயைக் கண்கலங்காது காக்க வேண்டுமென்பதில் குறியாக இருந்தார். தனது சகோதரர்கள் மீது அளவு கடந்த பாசத்தைக் கொட்டி உரிய வேளையில் செய்ய வேண்டியவற்றைத் தனித்து நின்று செய்து முடிந்திருக்கிறார். தன்னை வருத்தி தனக்கென எந்தவித சொத்தையும் சேர்த்துக் கொள்ளாது தனது உறவுகளுக்கும் பிறருக்கும் உதவி செய்வதையே தனது இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டிருக்கிறார். இத்தகைய பண்பு இவருக்குப் பிறவியில் இருந்து வந்திருக்க வேண்டும். இவரது எழுத்துலக வாழ்விலும் இதன் பரிணாமத்தைக் காணமுடிகிறது. 'என்னைப் பொறுத்தவரை இவரை நான் ஒரு 'சுமை தாங்கி' ஆகவே பார்க்கிறேன்.

1971-ஆம் ஆண்டிற்குப் பின்னர் வந்த சுமார் பத்து-பதினைந்து ஆண்டுகளுக்குள் இவர் தனது உறவுகளுக்காக செய்து முடித்த பல நிகழ்வுகளைச் சாதனைகள் என்றே கூறலாம். இது பலரது வாழ்விலும் ஒரு திருப்புமுனைக்குக் காரணமாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. சகோதரி பவானியின் லண்டன் பயணம், சகோதரி பத்மினியின் திருமணம், சகோதரன் சந்திரகோபாலின் லண்டன் பயணம், நடன தாரகை ராகினியை திருமணம் செய்த நிகழ்வு, சகோதரன் சந்திரகோபாலின் மனைவி சரோஜினியின் லண்டன் பயணம், இவரது லண்டன் பயணம், கடைக்குட்டி டொலியின் திருமணம், குடும்பத்துடன் லண்டன் இடப் பெயர்வு, சகோதரி நளினியின் திருமணம் என்பன முக்கியமானவை.

நான் 1982-இல் இவரது சகோதரி டொலியைத் திருமணம் செய்த பின்னர்தான் இவருடைய தொடர்பு ஆரம்பமானது. அதுவும் தாயக மண்ணில் 2-3 வருடங்கள் மட்டும் தான். இந்தக் குறுகிய காலத்திலும் என்னுடன் மட்டுமல்லாது எனது குடும்பம், சகோதரர்களுடன் ஒட்டி உறவாடிய விதம், வைத்திருந்த பிணைப்பு இன்னும் நினைவில் இருக்கிறது. இவர் ஈழநாட்டில் வேலை செய்து கொண்டிருந்த அந்தக் காலப் பகுதியில் எனது இளைய சகோதரன் கனடா வந்து இங்கு நிலைகொள்ளும் விதத்தில் இவர் செய்த உதவிகள் மறக்க முடியாதவை. அது இன்றும் என் கண்முன் நிழலாடுகிறது.

சகோதரர்களுடன் மிகக் கண்டிப்பானவராக நடந்து கொண்டாலும் தனது உறவினர்களுடனும், சுற்றத்தாருடனும் வைத்திருந்த பிணைப்பு, பாசம் என்பன எழுத்தில் வடிக்க முடியாத ஒன்று. நான் நேரில் கண்டு பல தடவை வியந்திருக்கிறேன். ஏற்றத்தாழ்வு பாராது சாதி, மதம் என்ற வேறுபாட்டைக் கடந்து இவர் கட்டி வைத்திருந்த நட்பு வட்டம் மிகப் பெரியது. முக வசீகரமா? பேச்சுவன்மையா? அல்லது எழுத்து ஆற்றலா? அல்லது உதவிக் கரம் நீட்டுவதாலா? எதனால் எல்லோரையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டார் என்பது அறிந்து கொள்ள முடியாத ஒரு மர்மம். அவர் தன்னைச் சுற்றி உறவினர் வட்டம், நண்பர்கள் வட்டம், வாசகர் வட்டம் கலைஞர்கள் வட்டம் எனப் பலவகையானவர்களையும் உள்ளடாக்கியதாக ஒரு சாம்ராஜ்யத்தையே கட்டி வைத்திருக்கிறார். அதற்கும் ஒரு திறமை வேண்டும்.

நாங்கள் கனடாவிற்குக் குடிபெயர்ந்த பின்னர் இவருடன் இருந்த தொடர்பும், பத்திரிகைத் துறைக்கு என்னையும் உள்





வாங்கிக் கொண்டதால் ஏற்பட்ட அனுபவங்களும் மறக்க முடியாதவை. இவர் 90-களின் ஆரம்பத்தில் நண்பன் சிவனடியார் சிறீபதியுடன் முதன் முதல் கனடாவிற்கு திடீரென வருகை தந்தார். அவரை நேரில் காணவும் கலந்துரையாடவும் உறவினர்கள் என்பதைத்தாண்டி அவரது நண்பர்கள் எமது வீட்டை முற்றுகையிட்டவண்ணம் இருந்தார்கள்.

அவர் கனடாவில் நிற்கும் காலப் பகுதியில் எங்களுடன் யாரும் தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியாதவாறு எந்நேரமும் அவருக்கு தொலைபேசி அழைப்பு வந்தபடியே இருந்தது. தற்போது இருப்பது போல் வீட்டிற்கு 4 Cell Phone அன்று இருந்திருந்தால் பிரச்சினையே இருந்திருக்காது.

அவர் இங்கிருந்த காலப்பகுதியில் கனடாவில் தமிழரின் நிலை பற்றி அறிய ஆசைப்பட்டார். நானும் ஒவ்வொரு தமிழ் கடைகளையும், தமிழ் உணவகங்களையும், தமிழ் நிறுவனங்களையும், கொண்டுபோய் காட்டினேன். ஒவ்வொரு இடங்களிலும் பலருடனும் பேசி தகவல்கள் திரட்டுவதையும் படங்கள் எடுப்பதையும், அவதானித்தேன். எனக்கு அப்போது தெரியாது. இவர் தனது பயணக் கட்டுரைக்கு தகவல் திரட்டுகிறார் என்று. லண்டன் சென்றதும் இவரது அப்போதய 'தமிழன்' பத்திரிகையில் 'ஸ்காபுரோ ஒரு குட்டி யாழ்ப்பாணம்' என்ற தலைப்பில் பெரிய கட்டுரை வெளியானது. இது பலரது கவனத்தையும் அன்றைய புலம்பெயர் சூழலில் ஈர்த்த ஒன்றாக இருந்தது.
இவர் கனடாவில் நின்றபோது அமரர் கலாநிதி விஜயகுமாருடன் அறிமுகமாகி கணினிப் பாவனைக்காகத் தமிழ் எழுத்துகளை வாங்கிக் கொண்டு போனதும் பின்னர் தனது பத்திரிகையை மெதுவாக கணினிமயப்படுத்த என்னால் ஆன சில உதவியைச் செய்ய முடிந்ததும் கடந்து வந்த பாதையில் மறக்க முடியாத சுவடுகள். வேலா லண்டனில் இருக்கும் சந்தர்ப்பம் இருந்திருந்தால் நான் எங்கேயோ போயிருப்பேன் என்று அவர் பல தடவை ஆதங்கப்பட்டதை உணர்ந்திருக்கிறேன்.

புகழ் பூத்த மூத்த பத்திரிகையாளர் திரு. ராஜகோபால் அவர்கள் தனது எழுத்துலக வாழ்வை பள்ளிப்பருவத்தில் கையெழுத்துப் பிரதியுடன் தொடங்கியதாக அறிகிறேன். யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இவரது தாய்வீடு. பள்ளியிலிருந்து நேரடியாகவே உதவி ஆசிரியராக நுழைந்து சுமார் 11 ஆண்டு காலம் அங்கு பணி செய்தார். அதன் பின்னர் கொழும்பு 'Lake House' நிறுவனத்தின் 'தினகரன்' நாளிதழில் ஏழாண்டு காலம் துணை ஆசிரியராகப் பணி புரிந்தார். மீண்டும் யாழ் 'ஈழநாடு' இவரை உள்வாங்கி பணி புரிந்து கொண்டிருந்த காலப்பகுதியில் 1985-ஆம் ஆண்டு ஆறு மாதக் கர்ப்பிணி பெண் ஒருவர் விசாரணை என்ற பெயரில் இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டபோது அச் சம்பவத்தை துணிச்சலோடு சொந்தப் பெயரில் கட்டுரையாக வெளி உலகத்திற்கு தெரியப்படுத்திய காரணத்தினால் இராணுவத்தின் கெடுபிடிக்கு உள்ளாகி குடும்பத்தோடு தாய் நாட்டை விட்டு வெளியேறி லண்டனில் தஞ்சம் புகுந்து கொண்டார். காலம் செய்த கோலம். இவரது அத்தியாயம் 1985-க்குப் பிறகு மீண்டும் புதிதாக எழுதப்பட வேண்டியதாயிற்று.

தாய் மண்ணையும் தமிழர்களையும் உயிராக நெஞ்சத்தில் சுமந்தபடி அந்த உணர்வோடு இன்றுவரை வாழ்ந்து வருபரின் பத்திரிக்கைத் துறைப் பணி வேறு ஒரு பரிமாணத்தில் ஆரம்பமானது.

அச்சுக் கோர்த்து பிரசுரம் செய்யும் பாரம்பரிய முறையில் பல வருடங்கள் ஈழநாடு நிறுவனத்தின் அனுபவம் பெற்றிருந்தார். ஆனால் 1985-இல் லண்டனுக்கு இடம்பெயர்ந்த பின்னர் ஒரு பத்திரிகையை நடத்த முற்றிலும் மாறுபாடான வழியை தேட வேண்டி இருந்தது. நான் லண்டன் சென்றபோது நேரில் கண்டவை ஆச்சரியத்தைக் கொடுத்தது. கணினியில் துண்டு துண்டாக Type செய்து எடுத்து, பெரிய மட்டைகளில் வெட்டி ஒட்டி, பின்னர் அதற்கு Plate செய்து பத்திரிகையாக்கும் முறையையும், படுகின்ற கஷ்டத்தையும் பார்த்து ஆச்சரியப்பட்டேன். உடல் உழைப்பு என்பது ஒருபுறம் இருக்க அதற்கு லண்டனில் ஏற்படும் செலவு என்பதும் நினைத்துப் பார்க்க முடியாத அளவில் இருந்தது.

தமிழ் மீதும் தமிழினத்தின் மீதும் இருந்த வேட்கையும் எப்படியாவது புலம்பெயர் தேசத்திலும் பத்திரிகையை வெளிக் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வமும் இவரது பத்திரிகைப் பணியைத் தொடர வைத்தது.

லண்டனில் 'தமிழன்' என்ற பெயரில் தொடங்கிப் பின்னர் 'ஈழகேசரி' வார இதழாக உருவெடுத்து 1993 முதல் 'புதினம்' என்ற பெயரில் Covid19 தொற்றுவரை 20 ஆண்டுகளுக்கு மேலாக லண்டன் மாநகர் முழுவதும் வெற்றி நடைபோட்டது இவரது பத்திரிகை. இது மட்டுமன்றி 'மனம் பேசுகிறது', 'ஈழகேசரி' போன்ற மாதாந்த சஞ்சிகைகளையும் வெளியிட்டு ஐரோப்பிய வாழ் புலம்பெயர் மனங்களில் மட்டுமல்லாது உலக தமிழ் அரங்கிலும் தனக்கென ஒரு பெயரை நிலைநாட்டிக் கொண்டவர் திரு. ராஜகோபால் அவர்கள்.

1993-இல் பத்திரிகை வடிவில் வெளிவந்த ஈழகேசரி, புதினம் உதயம் பெற்ற பின்னர் மாத சஞ்சிகையாக சமகாலத்தில் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 1994-ஆம் ஆண்டு காலப் பகுதியில் (ஆண்டு சரியாக நினைவில் இல்லை) ராஜகோபால் அவர்களின் எழுத்திலும் ஈழுகேசரி பத்திரிகை

யிலும் விருப்பம் மேலிட்ட காரணத்தினால் கனடாவில் இருந்த அன்பர் தீவகம் இராஜலிங்கம் அவர்கள் வாராவாரம் லண்டன் ஈழகேசரியை வரவழைத்து சில மாற்றங்களோடு கனடாவில் 'ஈழகேசரி' கனடா பதிப்பாக வெளியிட்டு வந்தது ஒரு புதிய அத்தியாயமாக அமைந்தது. ஆனால் சில காலங்களின் பின் பல இடர்களின் காரணமாக அது தொடரப்படவில்லை.

பிறந்து தவழ்ந்து அளைந்து எழுந்து விழுந்து சொந்தங்களோடும் பந்தங்களோடும் வாழ்ந்த சொந்த பூமியைப் பிரிந்து ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் அந்நிய நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் ஆசிரியருக்கு பேரும் புகழும் ஈட்டிக் கொடுத்த முக்கியமான நூல்கள் இரண்டு. அதில் முதலாவது 'வல்வெட்டியிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்' இரண்டாவது 'ஆழிக்குமரன்'.

1994-இல் மேற்குறிப்பிட்ட இரண்டு நூல்களும் கனடாவில் 3 இடங்களில் மிக வெற்றிகரமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. ஸ்காபுரோவில் அமைந்துள்ள Woburn Collegiate-இன் கலையரங்கில் முதல் நிகழ்வு ஆசிரியரின் மகளான சர்மினியின் நாட்டிய நிகழ்ச்சியுடன் புத்தக வெளியீட்டு நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டது. பலவித சவால்களுக்கு மத்தியில் நான் இந்த ஒழுங்குகளில் முக்கிய பங்கை எடுத்திருந்தேன். தமிழர் தகவல் ஆசிரியர் திரு. திருச்செல்வம் அவர்களின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. அரங்கம் முற்றாக நிறைந்த, வரலாறு காணாத புத்தக வெளியீடாக இந்நிகழ்வு அமைந்ததில் எனக்கும் பெருமிதம். ஆசிரியருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. இப்படியொரு நிறைவான நிகழ்வைத் தன் வாழ்க்கையில் காணவில்லை என அவர் தற்போதும் என்னிடம் கூறக் கேட்டு இருக்கிறேன்.

தமிழ் ஈழ வீரர்களின் சாதனைகளை சரித்திரமாகப் படைத்து உலகறியச் செய்த காரணத்தால்தான் உங்கள் எழுத்துகளை நேசிக்கிறோம் என்று உணர்ச்சி பொங்கும் வார்த்தைகள் பரிமாறப்பட்டன. வீரத்தின் விளைநிலமான வல்வெட்டித்துறையில் பிறந்த ஆழிக்குமரன் ஆனந்தன் 7 உலக சாதனைகளைப் படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துக் கொண்ட பின்னர் 8-வது சாதனை நோக்கி ஆங்கிலக் கால்வாயை நீச்சலடித்து கடக்க முற்பட்டபோது தனது உயிரை நீக்கவேண்டிய நிலை உருவானது. இந்த உண்மைக் கதை 'தமிழன்' பத்திரிகையில் தொடராக வெளிவந்து பலரதும் பாராட்டைப் பெற்ற பின்னர், நூல்வடிவமாக்கப்பட்டுப் பல நாடுகளிலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இரண்டாவது நிகழ்வு மொன்றியல் மாநகரில் திரு. வீணைமைந்தனின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆசிரியரின் மகளான சர்மினியுடன் மருமகள் கண்ணாவும் இணைந்து வழங்கிய மயில் நடனம் இந்நிகழ்வில் பலராலும் பாராட்டப்பட்டது. ரொறன்ரோவில் இருந்து சென்றிருந்த தமிழர் தகவல் ஆசிரியர் எஸ். திருச்செல்வம், உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஆகியோருடைய பேச்சுகளை உள்ளடக்கியதாக, இங்கும் நூல் வெளியீடு சிறப்பாக நடைபெற்றது.

மூன்றாவது புத்தக வெளியீடு சம காலப்பகுதியில் ரொறன்ரோ கூட்டுறவு இல்ல மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்று முடிந்து பலரது பாராட்டையும் பெற்றது. மொத்தத்தில் கனடாவில் ஒழுங்குசெய்யப்பட்டு மிக வெற்றிகரமாக நடந்து முடிந்த மூன்று புத்தக வெளியீட்டு நிகழ்வுகளும் மனநிறைவுடனும் பண நிறைவுடனும் நடந்து முடிந்தமை ஆசிரியரின் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது பற்றிப் பல சந்தர்ப்பங்களிலும் அவர் கூறக்கேட்டிருக்கிறேன்.

புகழ்பூத்த மூத்த மூத்த பத்திரிகையாளரான திரு. ராஜகோபால் அவர்களுக்கு அவரது திறமையைப் பாராட்டி பல நாடுகளிலும் விருதுகள் வழங்கப்பட்டதும், பாராட்டப்பட்டதும் அவரது உழைப்பிற்கு கிடைத்த பரிசு. அந்த வகையில், தமிழர் தகவல் நிறுவனத்தினால் 2000-ஆம் ஆண்டு 'வாழ்நாள் முழுநேரப் பத்திரிகையாளன்' என்ற விருதும் சி.வை. தாமோரம்பிள்ளை ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கி பாராட்டப்பட்டார். ஈழத்தமிழ் பத்திரிகையாளர் ராஜகோபாலுக்கு அறிமுகம் தேவையில்லை. அவர் வாழ்கின்ற இடந்தான் மாறியிருக்கிறதே தவிர அவரிலோ அல்லது அவரின் பணியிலோ எந்தவித மாற்றமுமில்லை. அங்கும் அவர் முழு நேரப் பத்திரிகையாளராக இருந்தார். புலம்பெயர்ந்து வாழும் மண்ணிலும் அவர் முழு நேரப் பத்திரிகையாளராகவே இருக்கிறார் என அறிமுகம் செய்யபட்டது இன்றும் நினைவில் இருக்கிறது.

ஒரு பொறுப்பு மிக்க பாசமுள்ள அண்ணனாக வாழ்ந்து காட்டி, அண்ணனுக்கு இலக்கணம் வகுத்துக் கொண்ட திரு. ராஜகோபால் அவர்கள் அவரது சகோதரர்களுக்கு மட்டுமன்றி, எல்லோருக்கும் பொதுவான 'அண்ணா'வாக வாழ்ந்து வருகிறார். அதனையும் தாண்டி, தனது மனைவிக்கு ஏற்ற உத்தம கணவராகவும் பாசம் மிக்க தந்தையாகவும் விருப்பத்திற்குரிய மாமனாராகவும் பிரியமுள்ள தாத்தாவாகவும் பரிணமிக்கத் தவறவில்லை.

மறுபுறம் இவரது எழுத்து வன்மையினாலும் வாசகர்களோடு அந்தரங்கமாக உறவாடும் திறமையினாலும் பயனடைந்தோர் பல்லாயிரம். சின்னஞ்சிறு ஏழைச் சிறுமிகள் முதல், அரசியல்வாதிகள், தொழில் முனைவர்கள், டாக்டர்கள், கலைஞர்கள், சட்டவாளர்கள், நகைக்கடை உரிமையாளர்கள் என பலதரப்பட்டவர்களைப் பிரபலமாக்கி அவர்கள் கொண்ட தொழில் துறைகளை உச்ச நிலைக்குக் கொண்டுவந்த இவரது பங்கு மறக்கப்பட அல்லது மறைக்கப்பட முடியாத ஒன்று. அந்த வகையில் இவரது மனைவி திருமதி ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா' லண்டனில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளிலும் புகழோடு கொடி கட்டிப் பறக்கவும் கோலோச்சவும் உறுதுணையாக இருந்தது என்பது எம் கண்முன்னே காணக் கூடியதாக இருக்கின்றது.

இவரது பத்திரிகை ஆழுமையும் எழுத்தாற்றலும், அவரது பேனாவும் அவரிடம் உள்ள பெரிய ஆயுதங்கள். பலரது வெற்றிக்குப் பின்னாலும் இவரது பேனா ஏணிப்படியாக நின்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

முதுமையின் நியதிக்கு யாரும் விதிவிலக்கல்ல. இளைப்பாற வேண்டியதும் காலத்தின் கட்டாயம். அந்த வகையில் எட்டாவது தசாப்தத்தை எட்டிப் பிடித்திருக்கும் திரு. ராஜ கோபால் அவர்கள் சகல செல்வங்களோடும் புகழோடும் ஆரோக்கியத்தோடும் மேலும் பல தசாப்தங்களை எட்ட வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.



velasubramaniam@thaiveedu.com

# நீ
# ஒரு
# சகாப்தம்

- அ. கந்தசாமி -

இதயம் தொட்ட
என் இனிய நண்பனுக்கு

எங்களுக்குள்
எழுதித்தீரா வெற்று
எழுத்தோலைகள் பல..

முனை மழுங்கா
எழுத்தாணிகள் சில
என் வீட்டுப் பறணில்
போட்டது போட்டபடி
இன்றும் அப்படியே!

நீயும் நானும்
கைபிடித்துக் கதைத்துக்
கடந்து சென்ற காற்றடங்கள்
புழுதி போர்த்த தரையில் அல்ல..

வெளியில் எடுத்து
வெட்டிச் சீர்செய்த என்
இதயச் சுவர்களில்
இன்றும் இசை கூட்டும்.

அன்று நீ விட்ட பகிடிகளால்
எனக்குப் புரைக்கேற
நீர் தேடி நீ அலைந்த
கணங்கள் கனவிலும் வரும்
அது ஒரு வரம்.

இன்று,

தென்திசைத் தூதனை
வரவு பார்க்கும் வயது
எனக்கு...
உனக்கும் அது தூரமில்லை.

மூன்றாங் காலாய் நீண்டிருக்கும்
ஊன்றுகோல் துணையுடன்தான்
நகர்கின்றன,
கால்களும் காலங்களும்

விழித்திரை ஓரத்தில்
ஒட்டடையாய் ஒதுங்கும்
காட்சிகள்தான் எத்தனை?

சுருக்கேறிய தோலுக்குள்
நரை தொடா நினைவுகள்
ஆயிரமாயிரம்



kandasamy.a@thaiveedu.com

முன்னால் இடம் இருந்தால்
தோழனுக்கும்
உன் தோள்த் துண்டைப்
போட்டு வை.

யாழ்தேவியின் யன்னலோர
இருக்கையில் இடம் பிடிக்க
காங்கேசன்துறை வரை
காரோடிப்போன காலமடா அது.

உன் சொல் கேட்க
ஏங்கிய என் செவியும்
என் சொல் கேட்க
ஏங்கிய உன் செவியும்
இப்போதும் கூர்மை
குன்றிவிடவில்லை.

உன் வார்த்தை வரத்துக்காய்
காத்திருக்கின்றன என் காதுகள்.

பசி எடுக்கும் போதெல்லாம்
பசிய ஞாபகங்களை
இரை மீட்கும்
கிழட்டுப் பசுக்களாய் நாம்!

வாழ்வு எங்களை
வாழ வைத்துப் பார்க்கின்றது,
எனக்குந்தான்
உனக்கும்தான்.

கடந்துபோன நாட்கள்
கனதியானவை
வாழ்ந்தவை எல்லாம்
வரலாறானவை

எதிர்ப்படும் நாளொன்றில்
விதி மங்கை
கணையோடு வந்து
கதவு தட்டலாம்.

அவள் வரும்போது வரட்டும்

அதுவரை,

என் தோழனே
வாடா
வாழ்ந்துதான் பார்ப்போமே!





# நண்பர் ராஜகோபால் எனது நல்ல வழிகாட்டி

– இரத்தினம் கந்தசாமி

ஈழத் தமிழ் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் குறிப்பாக யாழ். மண்ணில், நாட்டின் உயர்கல்வி நிறுவனமோ அல்லது அதற்கு ஈடான வேறு உயர் கல்வி நிறுவனங்களோ எதுவும் இல்லாத காலத்தில், பெருமைக்குரிய யாழ். ஈழநாடு நிறுவனம் பல்கலைக்கழகமாக - ஊடகத்துறைசார் பல்கலைக்கழகமாக மிளிர்ந்த நாட்கள் ஈழத் தமிழ் ஊடகத்துறை வரலாற்றின் அழிக்க முடியாத பக்கங்கள் என்பதை எவராலுமே மறக்க முடியாது.

யாழ். மண்ணின் மாண்புமிகு கனவான்களாகத் திகழ்ந்து கொழும்பு மாநகரிலும் பிரமுகர்களாக ஊடகத் துறைக்குப் பெருமை சேர்ந்த அமரர் கே.சி. தங்கராசா மற்றும் அவரது சகோதரர் அமரர் வைத்தியர் கே.சி. சண்முகரத்தினம் உட்பட்ட பிரமுகர்களால் ஆரம்பிக்கப்பட்டு தலைசிறந்த ஊடக நிறுவனமாகத் திகழ்ந்த யாழ் ஈழநாடு பண்ணையில்தான் முதன் முதலில் எனது அருமை நண்பர் ராஜகோபலைச் சந்தித்தேன்.

சுமார் 5 ஆண்டுகள் கொழும்பு தினபதி - சிந்தாமணி உட்பட்ட பத்திரிகைகளை வெளியிட்டு வந்த நிறுவனத்தில் பணியாற்றிய பின்னரும் பத்திரிகைப் பயிற்சியாளராக ஈழநாட்டில் இணைந்தபோது ராஜகோபால் அவர்களை எனது ஆசான்களில் ஒருவராகவே சந்தித்தேன்.

தினபதி - சிந்தாமணி பண்ணையில் பெற்றுக் கொண்ட எனது அனுபவத்தை புடம்போட்ட அனைத்துப் பெருமையும் ராஜகோபாலையே சாரும்.

யாழ். ஈழநாடு, ஈழநாடு கொழும்பு பணியகம், பாரிஸ் ஈழநாடு, ரிஆர்ரி வானொலி - தொலைக்காட்சி, ரிரிஎன் தொலைக்காட்சி, ஜிரிவி தொலைக்காட்சி, லண்டன் தீபம் தொலைக்காட்சி என எனது ஊடகப் பணியின் நீட்சிக்கு நண்பர் ராஜகோபால் அவர்களின் அளப்பரிய பயிற்சி ஊடான வழிகாட்டி பேருதவியாக அமைந்தது என்பது வெறும் முகஸ்துதிக்காக அல்ல என்பதை என்னால் உறுதியாகக் குறிப்பிட முடியும்.

இலங்கையில் 1816-ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட நீண்ட வரலாறு கொண்ட TIMES OF CEYLON பத்திரிகை நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக பிற்காலத்தில் பணியாற்றிய அமரர் கே.சி. தங்கராசா அவர்களின் எண்ணத்திலும் கடும் முயற்சியாலும் உருவான ஈழநாடு பத்திரிகை 1959-ஆம் ஆண்டு முதன் முதலில் தனது முதலாவது பதிப்பை வெளியிட்டது.

இலங்கையின் தலைநகரான கொழும்பில் இருந்து மட்டுமே சகல ஆங்கில, சிங்கள, தமிழ் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த காலத்தில் கொழும்புக்கு வெளியே வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்தும் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிவர வேண்டும் என்ற அமரர் கே.சி. தங்கராசா அவர்களின் எண்ணக் கருத்து இன்று யதார்த்தமாகி வடக்கிலும் கிழக்கிலும் இருந்து பல பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருப்பது அவரது தூரநோக்குக்குக் கிடைத்த பெரும் வெற்றி.

இலங்கை வரலாற்றின் முதலாவது பிராந்திய பத்திரிகையான ஈழநாட்டின் பண்ணையில் பயின்ற பல்வேறு பத்திரிகையாளர்கள் தொடர்ந்து கொழும்பு நகரில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் மட்டுமல்லாது ஈழத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் ஊடகத் துறையில் கோலோச்சி வருவது அந்தப் பண்ணைக்கே பெருமை சேர்க்கிறது.

யாழ். ஈழநாடு பத்திரிகையில் பல ஊடகவியலாளர்களை உருவாக்கிய அமரர்கள் கே.பி. ஹரன், என். சபாரத்தினம், எஸ்.எம்.கோபாலரத்தினம், சசிபாரதி சபாரத்தினம் ஆகியோர் மட்டுமல்லாது என் போன்ற பத்திரிகையாளர்களின் வளர்ச் சிக்கு உந்துகோலாக அமைந்த ராஜகோபால் அவர்களும் பெருமைக்குரியவர்களே.

யாழ். ஈழநாடு நிறுவனத்தில் நண்பர் ராஜகோபாலுடன் எனது ஆசான் என்பதற்கு அப்பால் ஆரம்பமான நட்புறவு புலம் பெயர்ந்து நான் பிரான்சிலும் அவர் லண்டனிலும் எமது ஊடகப் பணியைத் தொடர்ந்தாலும் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக எமது நட்புறவு நீடித்து வருவது எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே நான் கருதுகிறேன்.

ஈழநாடு பத்திரிகையில் ஒரு சில தடவைகள் எங்கள் இருவ ருக்கும் இடையே கருத்து வேறுபாடு, கருத்து மோதல் ஏற்பட் டிருக்கிறது. ஆயினும் சில மணி நேரத்திலேயே இருவரும் சகல பேதங்களையும் மறந்து விடுவோம். நமது தூய நட்புக்கு முன்னால் கருத்து மோதல்கள் எதுவும் ஒரு பொருட்டே அல்ல.

1990-ஆம் ஆண்டில் முதன் முதலில் பிரான்ஸ் தேசத்துக்கு புலம்பெயர்ந்த ஓரிரு மாதங்களில் முதல் தடவையாக லண்டன் சென்றபோது ராஜகோபாலின் இல்லத்துக்கே சென்ற வேளையில் அவரது குடும்பத்தினர் என்னை அன்பாக வரவேற்று சில தினங்கள் தமது இல்லத்திலேயே தங்க வைத்திருந்தனர்.

இந்த வேளையில் மற்றும் ஒரு நிகழ்வும் ஞாபகத்துக்கு வருகிறது. முதல் தடவையாக லண்டன் சென்ற வேளையில் அவரது முகவரியை மட்டுமே அவர் தொலைபேசியில் தந்தார். அன்று நான் அவரது வீட்டுக்கு நேரடியாகச் சென்று அவரது கதவைத் தட்டியபோது அவராலேயே நம்ப முடிய வில்லை. பல ஆண்டுகளாக ஒருவரை ஒருவர் சந்திக்க வில்லை. எனினும் எமக்கிடையே இருந்த நட்புரிமையே அவரது இல்லத்தை நோக்கி எதுவித சிரமமும் இன்றி அழைத்துச் சென்றது.

மற்றவர்களுடன் நட்புறவு பாராட்டுவதில் ராஜகோபாலுக்கு நிகராக எவருமே இல்லை என்று துணிந்து கூற முடியும். அறி முகமற்றவரை சந்தித்தால் கூட ஓரிரு சந்திப்பிலேயே இருவரும் நண்பர்களாகி விடுவார்கள். ஒரு காலத்தில் ராஜ கோபாலுக்கு நண்பர்கள் அதிகம், கூடுதலானவர்களுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டும் இருந்ததை மறக்க முடியாது.

ராஜகோபாலுடன் ஒரு தடவை பழகியவர்கள் சகலருமே தொடர்ந்தும் நட்புறவுடனேயே இருப்பார்கள், ராஜகோபாலும் அவர்களுடன் நட்பைத் தொடர்ந்து நீடித்துக் கொள்வார். எனது நண்பர்கள் பலர் என் மூலம் அவரது நண்பர்களாகவே இருக் கின்றர்கள். ஆண்டவன் அவருக்குக் கொடுத்த மற்றும் ஒரு கொடை நட்புரிமை - நட்புறவு. ராஜகோபாலுடன் மட்டுமல்லாது அவரது குடும்பத்தினருடன் நானும், எனது குடும்பத்தினருடன் அவரும் அன்பையும் நட்பையும் தொடர்ந்து பேணி வருகிறோம்.

ஊடகத் துறையில் பணியாற்றும்போது திடீர் திடீரென தேவைகள் உருவாகும் என்பது சகலருக்கும் தெரியும்.



குறிப்பிட்ட கட்டுரை உடனடி யாகத் தேவை என ஆசிரியர் அவரிடம் சொன்னால் போதும் சில நிமிடங்களிலேயே எத் தகைய விடயம் என்றாலும் கட்டுரை தயாராகிவிடும்.

ஈழத்தின் தமிழ் பத்திரிகைத் துறையை குறிப்பாக புலம் பெயர் தமிழ் பத்திரிகைத் துறை வரலாற்றைப் பொறுத்தவரை ராஜகோபால் தவிர்த் துவிட முடியாத அங்கம் என்பது நிச்சயம் மிகையாகாது.

பன்முக ஆற்றலின் சொந் தக்காரரான ராஜகோபால் தமது மாணவப் பருவத்தில் சிறுகதை எழுத்தா ளனாகவே ஊடகத் துறையில் காலடி எடுத்து வைத்தார். ஊடகத் துறையில் சிறுகதை எழுத் தாளர், கட்டுரையாளர், பத்தி எழுத்தாளர், உதவி ஆசிரியர், நிர்வாக ஆசிரியர் உட்பட்ட பல்வேறு பரிமாணங்களைக் கடந்து பத்திரிகை நிறு வனங்களின் தலைமை நிர்வாகியாகவும் ஊடகத் துறைக்கு தம்மை அர்ப்பணித்து செயற்பட்டு வந்தவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ். ஈழநாடு பண்ணையில் என்னுடன் பணியாற்றிய பின்னர் இங்கிலாந்து, நோர்வே ஆகிய நாடுகளிலும் தற்போது கனடாவிலும் ஊடகப் பணி யைத் தொடர்ந்து கொண்டிருக்கும் எனது அருமை நண்பர் இளவாலை எஸ். ஜெகதீசன் பற்றியும் நினைத்துக் பார்க் காமல் இருக்க முடியவில்லை.

யாழ். ஈழநாடு பணியகத்தில் ஒரே நாளில் இணைந்து கொண்ட நண்பர் ஜெகதீசனும் நானும், ராஜகோபாலின் மிகப் பெரிய நட்பு வட்டத்தினுள் போட்டி போட்டுக் கொண்டு உலாவி வந்த நாட்களையும் மறக்க முடியாது.

80-வது அகவையைக் கடந்து 81-வது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கும் எனது இனிய நண்பர் ராஜகோபா லுக்கு எனது வாழ்த்துகளையும் எனது குடும்பத்தினர் சார்பா கவும் இதயம் நிறைந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதில் பேருவகை கொள்கின்றேன்.



ratnamkandasamy@thaiveedu.com



# ராஜன் அண்ணா ஓர் ஆழ்கடல் முத்து

– சரோஜினி சந்திரகோபால்

எழுதவேண்டும் என்ற எண்ணம் நெஞ்சம் நிறைய இருந்த போதும், எனது எழுத்தார்வத்தை இனம்கண்டு, என்னை முன்னின்று ஊக்குவித்து, துணிச்சலுடன் எழுத வைத்த ஒருவரைப் பற்றி எழுதவேண்டும் என்று எண்ணும்போது ஏனோ ஒரு தயக்கம்.

எழுத்துலகில், அரை நூற்றாண்டினைத் தாண்டி, தனக்கென ஒரு தனி முத்திரை பதித்தவரைப் பற்றி எழுதுவதில் தயக்கம் இருந்தபோதும், ஓர் எழுத்தாளருக்கு அதனைத் தவிர்த்து இன்னுமொரு வட்டம் இருக்கின்றதல்லவா? அந்த பெருவட்டம்தான் அவரது குடும்பம்.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்பார்கள். மிக மிகப் பெரிய அங்கீகாரம். குடும்பமெனும் பல்கலைக்கழகத்தில் நானும் ஒரு மாணவி என்ற பெருமகிழ்வுடன் சுழல்கின்றது என் பேனா. பத்திரிகாசிரியர் திரு. ராஜகோபால் என் கணவர் சந்திரகோபாலின் அண்ணா. என் மைத்துனர். என் உடன் பிறவாச் சகோதரர்.

ராஜன் அண்ணா வீட்டில், எப்பொழுது சென்றாலும், பேனாவைக் கையில் பிடித்தபடி வந்து கதவைத் திறப்பார். இது இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள ஒன்று. குறிப்பிட்ட நேரத்தில் பத்திரிகை வெளிவர வேண்டும் என்பதில் உள்ள வெறி.

என்றோ ஒருநாள் அவரிடம் கேட்ட ஞாபகம் 'இந்த வேலையைச் செய்ய உங்களுக்கு அலுப்பாக இல்லையா அண்ணா?' என்று. 'அலுப்பா? எனக்கா? எனக்கு ஒரு பன்னிரண்டு வயசு இருக்கும், நான் வாசிக்கத் தொடங்கியபோது. எழுத்தாளர் தமிழ்வாணன் அவர்களது பரம ரசிகன் நான். கல்கண்டு இதழ் வாசிப்பது எனக்கு கற்கண்டு சாப்பிடுவது போல. ஒவ்வொரு இதழையும் வாங்கி அடுக்கி வைத்துக் கொள்வேன். ஒரு வரி விடாமல் வாசிப்பேன். அவரைப்போல ஒரு பிரபல எழுத்தாளனாக வரவேண்டும் என்று நினைத்து மகிழ்வேன். உலகமே என் எழுத்துத் திறனைக் கண்டு வியப்பதாக கற்பனை செய்து மகிழ்ந்த அந்த நாட்களை நினைக்க எனக்கே சிரிப்பாக இருக்கிறது இப்போது'. இது அண்ணா தந்த பதில்.

இன்னாருக்கு இன்னார் என்று எழுதி வைத்த இறைவன். பேனாவைப் பிடித்து நின்ற ராஜன் அண்ணாவின் கைகளில், கொஞ்சும் சலங்கையின் நாதத்தில் திளைத்திருந்த ராகினியின் கரங்களை இணைத்துவிட்டார்.

பல ஆண்டுகளை முன்னோக்கிச் சிறகடிக்கின்றது என் சிந்தனைப் பறவை. தாயகத்தில், வல்வெட்டி 'கைலாய வாசா' என் புகுந்த வீடு. ராஜன் அண்ணா கொழும்பு Lakehouse 'தினகரன்' பத்திரிகையில் வேலை. எனது கணவர் London-இல். ராகினி இளவாலை கொன்வென்டில் நடன ஆசிரியையாக பணிபுரிந்த போதும் மாலையில் வீடு வந்து விடுவார்.

கைலாய வாசாவில் என் மாமியார், மைத்துனிமார் நளினி, மாலினி, ராகினி, நான்... ஒரு கூட்டில் வாழ்ந்த பொன்னான காலம் அது. கூத்தும், கும்மாளமும் நிரம்பி ததும்பிய அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன்.

ராஜன் அண்ணா லீவில் வல்வெட்டி வரும் நாட்கள், அந்த நாட்களில் நடக்கும் சின்னஞ் சிறு சம்பவங்கள். அண்ணா வந்தால் நவாலிக்கு சின்னம்மா வீடு, சினிமா, இப்படி பல outings.

இந்த இடைவெளிக்குள் அண்ணரும், ராகினியும் தனியாக வெளியில் போக விரும்பும் நேரங்கள்தான் சுவாரஷ்யமாக இருக்கும். இளம் வயதிலேயே தந்தையார் தானத்தில் இருந்து குடும்பப் பொறுப்பை ஏற்று நடந்த பொறுப்புணர்ச்சி, ராகினியுடன் தனியாக போகிறேன் என்று அவரால் தங்கைமாரிடம் கூற சங்கடப்படுவார். அந்த நேரத்தில் சரோஜினியின் சேவை தான் தேவைப்படும். அதாவது நாங்களாக அவர்களை அனுப்பி வைப்பதைப் போல ஒரு நாடகத்தை டைரக்ட் பண்ணுவேன் ராகினியுடன் சேர்ந்து. Gate-இற்கு வெளியில் அவர்கள் போனபின் தான் எனக்கு நிம்மதி.

அண்ணா ஊருக்கு வந்தால் திரும்பிப் போகுமுன் ஆகக் குறைந்து இரண்டு தடவையாவது வீட்டில் பாட்டுக் கச்சேரி நடக்கும். முக்கியமாக அண்ணாவின் ஒரு நெருங்கிய நண்பர், திருமணமாகி சுண்டுக்குழியில் வாழ்ந்த தங்கை பத்மினி அவரது கணவர் கமலகாந்தன் இன்னும் ஓரிரு உறவினர்கள். காந்தன் அண்ணா பாடிய 'போடு போடு லேக்கா போடு ஜோராக', 'முல்லை மலர் மேலே மொய்க்கும் வேண்டும் போலே' இந்த பாட்டுக்களை, இன்று... அண்ணா உட்பட எங்களில் யார் கேட்டாலும், எம்மை அறியாமல் கண்ணீர் வரும். கடந்த வருடம் அவர் மண்ணுலகை நீத்து விண்ணுலகம் சென்றுவிட்டார்.

ராகினியின் ஒவ்வொரு முன்னேற்றத்திற்கும் உந்து கோலாக இருக்கும் அண்ணா, தன் தாயின் மேல் அளவிடமுடியாத அன்பு செலுத்துபவர். அம்மாவின் உடல் நலனில் அதீத அக்கறை கொண்டவர். என் மாமியாருக்கு 'ராஜன்' என்றால் கடவுளுக்குச் சமம். ராஜனுக்குப் பிடிச்ச சாப்பாடு செய்து கொடுத்து, சாப்பிடு ராஜன், வடிவாச் சாப்பிடு என்று பரிமாறுவதைப் பார்த்து, 'என்ன ராகினி, அண்ணா கொழும்பில் சாப்பிடுவதே இல்லை போல இருக்குது' என்று நான் சொல்ல, நாங்கள் எல்லோரும் சிரிப்போம். அண்ணாவுக்கும் சிரிப்பு தான். 'மாமி எங்களுக்கும் கொஞ்சம் மிச்சம் வையுங்கோ' என்று சொல்வேன். 'நீங்களெல்லாம் வீட்டை நல்லாய்ச் சாப்பிடுறியள், கொழும்பில அப்படி சாப்பாடு கிடையாது' பட்டென்று பதில் வரும். என் தாய் பாசம் மிக்க மாமியாரிடம் இருந்து.

என்னை, தன் தம்பியாரிடம் இலண்டனுக்கு அனுப்பி வைப்பதில் மும்முரமாக செயற்பட்டார் அண்ணா. நான் இலண்டன் வந்து சேர்ந்தேன், என் தாய் வீடு, புகுந்த வீடு இரண்டையும் பிரிந்து. சுழன்றோடும் காலச் சக்கரம், மீண்டும் எம் அனைவரையும் லண்டனில் சங்கமிக்க வைத்தது.

அண்ணாவிற்கு ஒரு மகள், மகன், மருமக்கள், 5 பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆண்டுகள் பல தாண்டினாலும், நாம் அனைவருமே நம் குழந்தைகளுடன் வாழ்ந்தாலும், அண்ணரின் உடன் பிறப்புகள் அவரை இன்றும் மதித்து அன்பு காட்டுவதில் இம்மியளவும் பிசகியதில்லை. ராஜன் அண்ணாவும் அதே தந்தை ஸ்தானத்தை விட்டு விலகவில்லை. குடும்பத்தில் யாருக்காவது ஒரு பிரச்சினை, சுகவீனம் என்றால் அவரால் தாங்க முடியாது.

Tooting-இல் உள்ள அவரது இல்லத்திற்குப் போனால், உடன் கடைக்கு ஓடுவார் என் மகளுக்கு விருப்பமான 'சமோசா' வாங்கி வர. அடுத்து இந்தியாவில் இருந்து வாங்கி வந்த 'Special Brew' கோப்பி தன் கையாலேயே தயாரித்துத் தருவதில் அவருக்கு சந்தோசம். இந்த இடைவெளியில் தொலைபேசியும் அலறி, புதினம் ஆசிரியரை அழைத்தபடி இருக்கும். எல்லா Departments-ஐயும் இலாவகமாக கையாளும் முறைகூட 'புதினம்' தான்.


தாயகத்தில் ஈழநாடு, தினகரன், இலண்டனில் தமிழன், ஈழகேசரி, மனம் பேசுது, புதினம் இப்படியாக அண்ணா நடந்து, கடந்து வந்த பாதைகளில் எத்தனை எத்தனை சவால்கள். அனைத்தையும் எதிர்கொண்டு, தன் குடும்பத்திலும் முழு அக்கறை காட்டும் இந்த நல்ல மனிதரைப் பார்த்து வியந்திருக்கிறேன். வேடிக்கையாகப் பேசுவது, குடும்பத்தினரை, நண்பர்களை நேர்காணல் செய்வது என்றால் எனக்கு நிறைய விருப்பம்.


ராஜன் அண்ணாவைப் பற்றி பேசுவதென்றால் என் மாமியாருக்கு கரும்பு தின்பதுபோல. இன்று இறை பதத்தில் இளைப்பாறும் என் மாமியார், என்னிடம் கண்ணீர் மல்க கூறிய ஒரு சில வரிகளை நினைத்துப் பார்க்கிறேன். 'அவர்... அதுதான் உம்முடைய மாமா, எங்களை விட்டிட்டுப் போன நேரம், நான் இடிஞ்சு போனன். ராஜனும் சின்னப் பெடியன். அந்த நேரம் என்ர பிள்ளை ராஜன் தான் குடும்பப் பொறுப்பை ஏற்றவர். இல்லையெண்டால் நான் என்ன செய்திருப்பனோ கடவுளுக்குத் தான் வெளிச்சம். அண்டையில இருந்து இண்டு வரைக்கும், அவர் மாறவில்லை'.

ராஜன் அண்ணாவை ஒரு 'சுமை தாங்கி' என்று என் மனதில் நினைத்துக் கொள்வேன். குடும்பத்தில் அவருக்கு இருக்கும் பற்று, தாயகம், தாய் மொழி, எழுத்துலகில் அவருக்குள்ள நேசம், நண்பர்களுடனான பாசம். உங்கள் அண்ணாவிற்கு பல முகங்கள் உண்டு என்று என் கணவரிடமும் சொல்லிக் கொள்வேன்.


**என்றோ ஒருநாள் அவரிடம் கேட்ட ஞாபகம்**
**'இந்த வேலையைச் செய்ய உங்களுக்கு அலுப்பாக இல்லையா அண்ணா?' 'அலுப்பா? எனக்கா? எனக்கு ஒரு பன்னிரண்டு வயசு இருக்கும், நான் வாசிக்கத் தொடங்கியபோது, எழுத்தாளர் தமிழ்வாணன் அவர்களது பரம ரசிகன் நான், கல்கண்டு இதழ் வாசிப்பது எனக்கு கற்கண்டு சாப்பிடுவது போல, ஒவ்வொரு இதழையும் வாங்கி அடுக்கி வைத்துக் கொள்வேன், ஒரு வரி விடாமல் வாசிப்பேன், அவரைப்போல ஒரு பிரபல எழுத்தாளனாக வரவேண்டும் என்று நினைத்து மகிழ்வேன்.' என்றார்**











பெண்கள் எழுதவேண்டும் என்பதில் அசையா உறுதி கொண்டவர், ராஜன் அண்ணா. படிக்கும் காலத்தில் இருந்தே எனக்கும் தாய் மொழியில் எழுதுவது, பேசுவது என்றால் பேரார்வம். நான் எழுதிய இசையும் கதையும், கவிதைகளை கேட்டு வாசித்த ராஜன் அண்ணா, இலண்டன் வந்த பின்னர் என்னை எழுதும்படி ஊக்குவித்தார். சுற்றி வளைக்காமல், வாசகர்களைக் கவரும் வகையில் எழுதும்படி அறிவுரைகள் கூறுவார்.

பாடசாலை ஆண்டு விழாக்கள், சமூக விசேட தினங்கள், புத்தக வெளியீட்டு விழாக்கள், தனி மனிதர்களின் சிறப்பான முயற்சிகள் இப்படியாக எழுதத் தொடங்கினேன்.

எந்த ஒரு விடயத்தையும் செய்ய வேண்டும் என்ற ஆசை எல்லோர் மனதிலும் இருக்கலாம். ஆனால் எமக்குள் புதைந் திருக்கும் அந்த ஆசையை, இலட்சிய வேட்கையை செயற்ப டுத்த ஒரு தளம் வேண்டும். அந்த தளத்தை உருவகித்து, அனுபவமற்றவர்களை களமிறக்கி, இந்த பூமிப் பந்துக்கு அறிமுகப்படுத்தி ஊக்குவிக்க, ஒரு பண்பட்ட மனம் படைத்த சாணக்கியன் வேண்டும்.

இந்த இடத்தில் தான் என் வழிகாட்டி, ஆசான், ராஜன் அண்ணாவைப் பார்க்கிறேன். எழுதும் ஆக்கங்களை வாசித்து 'நன்றாக இருக்கிறது, இதனை வேறு முறையில் மாற்றி எழுதவேண்டும்' என்றெல்லாம் உற்சாகப்படுத்துவார்.

புலம் பெயர் நாடுகளில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் பற்றி எழுத விரும்புவதாகக் கூறினேன். 'நல்ல ஐடியா சரோ, ஆனால் எழுதத் தொடங்கினால் தொடர்ந்து எழுத வேண்டும்' என்று மகிழ்ச்சியோடு கூறி, தனது பத்திரிகையிலேயே 'புலத் தமிழ் பூங்கா' என்ற தலைப்பில் 40 பாடசாலைகள் வரையில் என்னை தொடர்ந்து எழுத வைத்த அந்தப் பரந்த உள்ளம் படைத்த பெரிய மனிதரை என்றென்றும் நன்றியுடன் நினைத்துக் கொள்கின்றது என் மனம்.

ராஜன் அண்ணாவின் அயரா உழைப்பு, தொழில் பக்தி, அரை நூற்றாண்டைத் தாண்டிய ஆழ்ந்த அனுபவம், எதிர் வரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் துணிச்சல் இவை தான் எழுத்துலகில் இவருக்கு ஒரு நிரந்தர இடத்தை அமைத்துக் கொடுத்துள்ளன.

ராஜன் அண்ணா, உங்கள் வாழ்வில் வந்த சோதனைகள் அனைத்தையும், சாதனைகளாக மாற்றிக் காட்டியவர் நீங்கள். மீண்டும் ஒரு புதிய, விசேட ஆண்டுக்குள் கால் பதிக்கின்றீர்கள்.

எங்கள் குடும்பத்தின் பெரும் சொத்தான நீங்கள், நீண்ட ஆயுள், நிறைவான மகிழ்ச்சி, அளவான செல்வம், அசையாத தன்னம்பிக்கை இவற்றுடன் அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் புடைசூழ பல நூறாண்டுகள் வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை வேண்டி உங்கள் தம்பி சந்திரன், மகள், மருமகன், பேரப் பிள்ளைகள் குடும்பத்தினருடன் இணைந்து வாழ்த்துகின்றேன்.



sarojini.s@thaiveedu.com

# புதினத்தில் புதுமை - ராஜகோபால்

## பொ. சண்முகநாதன்

பாமா ராஜகோபால் என்று எழுத்துலகில் பெருமை பெற்றவர் திரு. ஈ.கே. ராஜகோபால். 'அப்பா என்பதில் உள்ள 'பா'வும் 'அம்மா' என்பதில் உள்ள 'மா'வும் சேர்ந்தாலும் அந்த 'பாமா' வரும்தானே! சும்மா சொல்லக்கூடாது அவர் தமது பெற்றோர்கள் மீது மிகுந்த பாசம் கொண்டவர்.

எனக்கும் நண்பர் ராஜகோபாலுக்கும் வயது வித்தியாசம் சற்று அதிகமாக இருந்தாலும் இன்னொரு வகையில் சமகாலத்தில் எழுத்துலகிற்கு வந்தவர்கள் எனலாம். அப்போதெல்லாம் ஒரு காலத்திலே சுயாவும் அனுசுயாவும் ஈழகேசரியில் போட்டி போட்டுக்கொண்டு எழுதியது போலத்தான் நாங்களும் ஈழநாட்டிலும் சரி, கலைச்செல்வி, புதினம், வெள்ளி, சுதந்திரன் இதழ்களிலும்கூட நானா? நீயா? விட்டேனா பார்? என்றவாறாகத்தான் எழுத்துலகில் நடைபயின்றோம்.

இலங்கை வானொலியில் குறுநாடகங்கள் எழுதத் தொடங்கியதும் அப்படித்தான்.

பின்னர் திரு. ராஜகோபாலுக்கு ஈழநாடு ஆசிரியர் குழுவில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. வாய்ப்பு என்பது ஈழநாட்டுக்கா, ராஜகோபாலுக்கா என்று சொல்லும் அளவுக்கு பிரகாசித்தார்.

பத்திரிகையாளன் இலக்கியம் படைப்பவனாக இருக்க வேண்டியது அவசியமில்லை.

ராஜகோபால் இலக்கியவாதியாக இருந்து பத்திரிகைத் துறைக்கு வந்தவர் என்பதாலும், அதன் பின்னரும் இலக்கியம் படைப்பவராக இருந்ததாலும் அங்கும் அவரால் 'புதுமை' செய்ய முடிந்தது.

எழுத்திலே ஒருவித கலைத்துவமும் சொல்ல வேண்டியதை சுவையாக எழுதுவதும் அவரது தனித்துவம் எனலாம்.

ஈழநாட்டை அடுத்து அவருக்குத் தினகரனில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

அங்கும் அவரது மேதா விலாசத்தையும் முத்திரைகளையும் கண்டோம். எந்தப் பத்திரிகையும் அவரை வலிய (வருந்தி) அழைத்துத் தம்முடன் சேர்த்துக்கொள்ளும் அளவிற்கு அவரது புகழ் பரவிவிட்டது.

அக்கரைச் சீமையிலும் அதுதான் கதைபோல் இருக்கிறது. முதலில் அங்கு ஈழகேசரி இதழை நடத்தி வந்தார். அந்த இதழ்களில் சிலவற்றில்கூட எனது கட்டுரைகள் இடம் பெற்றன.

சில நிர்வாகப் பிரச்சினைகள் காரணமாகவோ என்னவோ அதிலிருந்து விலகி 'புதினம்' பத்திரிகையை அவர் தொடங்க வேண்டி வந்தது. இத்துறையில் போதிய அனுபவமும் ஆற்றலும் அவரிடம்தான் இருக்கிறதே. பிறகென்ன?

நண்பன் ராஜகோபால்... ஆம், கொள்கை அளவில் எமக்கிடையே சில முரண்பாடுகள் இருந்தபோதிலும் இன்றளவும் நாம் நண்பர்கள்தான்.

அவர் இடதுசாரி எண்ணம் கொண்டவர். இலக்கிய உலகைப் பொறுத்தவரையில் அவர் முற்போக்கு... நான் தமிழரசுக் கட்சி ஆதரவாளனாக இருந்தபோதிலும், எமது நட்பு நாகரிகமாகத்தான் இருந்தது.

அவரும் சரி, நானும் சரி சந்திக்கும்போது இணக்கமான கருத்துகளைத்தான் பரிமாறிக்கொள்வோம். முரண்பாடான கருத்துகளை வெளியிடுவதை நாசூக்காகத் தவிர்த்துக்கொள்வோம்.

அவருக்குப் பிடிக்காத முறையில் நான் நடந்துகொண்டால் அல்லது எழுதினால் ஆக மிஞ்சிப்போனால் 'ஏன் ஐசே உமக்கு உந்த வேலை' என்பதுடன் நிறுத்திக்கொள்வார்.

மேற்கொண்டு பேசமாட்டார். நானும்தான். என்னுடைய வீரமெல்லாம் எழுத்தளவில்தான்.

முற்போக்காளர்களைக் கிண்டல் செய்யும் வகையில் 'யதார்த்த எழுத்தாளன்' என்ற கதையினை நான் எழுதிய போதும், இலங்கை வானொலி சன்மானமாக அனுப்பிய சிங்களக் காசோலையை நான் திருப்பி அனுப்பியபோதும் அவர் என்னுடன் அப்படித்தான் நடந்துகொண்டார்.

எம்மிடையே உள்ள அந்த நயத்தக்க நாகரிகம்தான் எமது நட்பு இன்னமும் நீடித்து வருவதற்கு காரணமாக இருக்க வேண்டும்.

சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர் அங்கும் கலை, இலக்கியம், பத்திரிகை என்று செலவழித்துக் கொண்டுதான் இருக்கிறார். எல்லாவற்றையும் மனிசிக்காரியின் வருமானத்தை வைத்துத்தான் சமாளித்து வருகின்றார்.

ஆனால், புதினத்தைப் பார்க்கின்றபோது, அது வெற்றிநடை போடுவதை கவனிக்கும்போது, எனக்கு அப்படித் தோன்றவில்லை. அவர் 'நன்றாக' வாழ்வதாகவே தெரிகின்றது.

நிறைவாகக் கூறுகின்றேன். அவர் எனக்கு நண்பனாக இருப்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

# நட்புக்காக நல்லதைச் செய்யும் ராஜகோபால்

உடுவை

எஸ். தில்லைநடராசா



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சிறு வகுப்பு களிலிருந்து என் இனிய நண்பன் சந்திரன் என சுருக்கமாக அழைக்கப்படும் சந்திரகோபால்.

சந்திரனின் நட்பு பற்றி வீட்டில் தெரிவித்தபோது சந்திரனின் தங்கை பவானி தன் வகுப்பில் படிப்பதாகவும் தனது சிநேகிதி எனவும் என் தங்கை பாரதி சொன்னாள்.

கிராமப்புறங்களில் இது சர்வ சாதாரணம். சந்திரனும் நானும் சிறு வயது முதல் உயர் வகுப்பு வரை class mates.

அப்படியே சந்திரனின் தங்கை பவானியும் என் தங்கை பாரதியும் class mates.

அது மட்டுமல்ல, உடுப்பிட்டிக் கிராமத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருந்த சிறு நகர், வல்வெட்டி. கிராமத்தில் வாங்க முடியாத பொருட்களை வாங்க எனது தாயார் வல்வெட்டித் துறை செல்லும்போது சந்திரனின் தாயாரைச் சந்திப்பார். கதைப்பார்.

இடையிடையே சந்திரனின் தாயாரும் எங்கள் வீட்டுக்கு வருவார். இப்படி, இரண்டு குடும்ப பெற்றேர்-பிள்ளைகள் நட்பு.

இருப்பினும் சந்திரனின் நட்பால் அவரது அண்ணா ராஜ கோபாலுக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட நட்பு வித்தி யாசமானது, என்னைவிட இரண்டொரு வயது தான் கூட, ஆனால் வயதுக்கு மீறிய அறிவு, அபார திறமை, அசாத்திய துணிச்சல். கலை இலக்கியம் தொடர்பாக அவர் தெரிவிக்கும் தகவல்கள் கருத்துகளால் அவரது நட்பை வளர்த்துக் கொள்ள விரும்பினேன்.

சிறிய சிவப்பு நிற துவிச்சக்கரவண்டி ராஜகோபாலை வல்வை யிலிருந்து உடுவை வரை சுமந்து வரும் வாகனம்.

அக்காலத்தில் மாணவர்கள் சைக்கிள் வைத்திருப்பது அபூர்வம்.

நான் சைக்கிள் ஓட்டப் பழகினதே க.பொ.த. வகுப்புக்கு வந்த பின்னர் தான்.

பள்ளி மாணவர்களில் பலர் ராஜகோபாலின் சைக்கிளைப் பார்ப்பதில், தொட்டு மகிழ்வதில், இரண்டொரு நிமிடம் இரவல் வாங்கி ஓடுவதில் ஒரு வகை சுகம் காண... எனது கவனமெல்லாம் அவரது கைகளில் காணப்படும் புத்த கங்களின் மேல்தான்.

அறுபதுகளின் ஆரம்பத்தில் ‘சமஷ்டி ஏன்?’ என்ற புத்தகத்தை அவரிடமிருந்து வாங்கிப் படித்த நினைவு. அந்தப் புத்தகத்தை அதிகாரத்தில் உள்ளவர்கள் அப்போதே புரிந்து ஏற்றுக்கொண்டிருந்தால் உயிரிழப்புகள், சொத்திழப்புகள், அவலங்கள் ஏற்பட்டதைத் தவிர்த்திருக்கலாம்.

கல்லூரி மாணவர் தேர்ச்சிச்சங்கம், கூட்டங்கள், நாடகம், விவாத அரங்கு என நுழையும் வேளை ராஜகோபால் அமைதியாக அவற்றை அவதானித்து ஆழமான ஆக்க பூர்வமான அபிப்பிராயம் சொல்லுவார்.

சந்திரனாக அறிமுகமான ராஜகோபால், பள்ளிப் பருவத்திலேயே எனக்கு க.தா. சிவகுருநாதன், நா. யோகேந்திரநாதன் போன்றவர்களின் நட்பைத் தேடித்தந்தார்.

தந்தையார் தந்த ஆதரவு, வழிகாட்டல், இவர்கள் நட்பு கலை, இலக்கியத்துறையில் எனது ஈடுபாட்டை அதிகரித்தது.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தவை மூன்று பத்திரிகைகள் -

1.தினசரியாக மலர்ந்த ஈழநாடு, 2. எல்லோரும் படிக்கக்கூடிய பல்சுவை அம்சம் நிறைந்த வாரப்பத்திரிகை புதினம், 3. வசனக் கவர்ச்சிகளால் இளைஞர்களைக் கிளர்ந்தெழ வைத்த இருவாரமொருமுறை வந்த தீப்பொறி.

அதிக விற்பனை, அதிக வாசகர் கொண்ட புதினத்தில் ராஜகோபால் 'பாமா ராஜகோபால்' என்னும் பெயரில் எழுதிய சிறுகதையை வெளியிட்ட வரதர், ராஜகோபாலைப் பாராட்டி அவரது கைப்பட ஒரு கடிதமும் அனுப்பியிருந்தார்.

அக்கடிதத்தை ஆகக்குறைந்தது 50 தடவைகளாவது நான் படித்திருப்பேன் என எண்ணுகின்றேன். விளைவு ஈழநாடு, சுதந்திரன், வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் சிறுவர் பகுதிகளை விட்டுவைக்கவில்லை.

ராஜகோபால் எழுதிய நடிகையும் காதலும் நாடகப் பிரதியை இலங்கை வானொலி ஒலிப்பதிவு செய்த போது, ஒத்திகை, ஒலிப்பதிவு ஆகியவற்றை பார்க்க வருமாறு அழைப்புக் கடிதத்துடன் புகையிரத ஆணைச்சீட்டையும் அனுப்பி வைத்திருந்தனர்.

ஒவ்வொரு தகவல்களையும் முதலில் பெறுபவனாக நான். எனது எழுத்துகளை முதலில் படித்து ஆவன செய்பவராக ராஜகோபால். நட்பு வளர்ந்தது. எழுத்தும் மலர்ந்தது.

தீடீரென ராஜகோபாலுக்கும் எனக்கும் சஞ்சிகை நடத்தவேண்டுமென்ற ஆசை பிறந்தது.

இந்நிலையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் சில மாதம் படித்துவிட்டு கொழும்பு சென்று ஒரு கடிதம் அனுப்பினார்.

1962-இன் நடுப்பகுதியாக இருக்கலாம்.

'தில்லை, எப்பிடியும் ஒரு 600 ரூபா தேடு. மாதமிருமுறை மலரும் சஞ்சிகையாக வெளியிடுவம். முதலாவது இதழ் அச்சிட 300 ரூபா போதும். இரண்டாவது இதழ் அச்சிட 300 ரூபா. முதலாவது இதழ் விற்பனைக்காசில் மூன்றாவது இதழ் அச்சிடலாம். எனது எழுத்தாள நண்பர்கள் matters தருவார்கள்.'

இக்கடிதம் பல தடவை வாசித்ததும் வீட்டில் போராட ஆரம்பித்தேன். சஞ்சிகை நடத்த காசு தராவிட்டால் படிக்க மாட்டேன் சாப்பிட மாட்டேன் என்று அடம் பிடித்தேன்.

அம்மாவின் சமாதானம் 'தம்பி 10 - 15 ரூபா எண்டால் தரலாம். 600 ரூபாவுக்கு எங்கை போறது ?

ஒரு நேரம் சாப்பாடு பிந்தினாலும் அழுகிற வயிறு எவ்வளவு நேரத்துக்கு தாக்கு பிடிக்கும்.

வீட்டாருடன் சமாதானமாகி சாப்பிட்டாலும், படித்தாலும் உள்ளுக்கு சஞ்சிகை நடத்தும் ஆசை கூடிக்கொண்டே வந்தது.

அப்படிக் கொஞ்சம், இப்படிக் கொஞ்சம் என்று தேடிய பணத்துடன், தெரிந்தவரின் திருவிழாக் கடையில் இராப்பகல் வேலை மூலம் மொத்தம் 200 ரூபாவுக்குக் கொஞ்சம் கூட.

ராஜகோபால் மூலம் அறிமுகமான நா. யோகேந்திரநாதன் (சங்கிலி), ஜோ.ஏ.எம். தாஸ் ஆகியோரின் எழுத்துகளுடன் 1962-இல் வெளியான 'மாணவன்' சஞ்சிகையின் ஆசிரியர், நான்.

14-வது வயதில் க.பொ.த (சா.த) இரண்டாம் ஆண்டில் கல்வி பயின்ற மாணவனான என்னை, எனக்கு கல்வி கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர்களே 'ஆசிரியர்' என அழைக்கும் படி உயர்த்தி வைத்தவர் ராஜகோபால்.

ஆனால் முதலாவது இதழ் விற்பனைப் பணத்தில் மூன்றாவது இதழ் அச்சிடலாம் என ராஜகோபால் சொன்னது, 'அந்தக்காலத்தில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பென்ஸ் கார் விழும் என எதிர்பார்த்து 50 சதம் சுவீப் டிக்கட் எடுத்தவனின் கனவுக் கதையானது'.

மாணவன் இரண்டு இதழ்கள் ஓஹோ என்று வெளியாகின.

கல்லூரி மாணவனாகிய நான் படிக்க வேண்டும் என விற்பனையாளர் வாசகர்கள் விரும்பியதால், இரண்டு இதழ்களுக்கு மேல் வெளியிடக்கூடிய சந்தர்ப்பத்தை யாரும் உருவாக்கவில்லை.

இருந்தாலும் வேகமாக எழுத ஆரம்பித்தேன். ராஜகோபால் என்னைவிட வேகமாக, மிகவிவேகமாக எழுதினார். அந்த எழுத்தாற்றல் அவரை 'விவேகி' சஞ்சிகை ஆசிரிய பீடத்தில் அமர்த்தியது. வீட்டுப் பொறுப்புகளையும் சுமக்க வேண்டிய ராஜகோபால் எழுத்தின் மூலம் தொழில், அந்தஸ்து, சிறிதேனும் வருமானம் பெறவேண்டிய தேவையால் ஈழநாடு பத்திரிகையின் பணியாளர் ஆனார்.

அவர் யாழ். ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றும் போது, நான் யாழ். இந்துக்கல்லூரி க.பொ.த(உ.த) படித்துக் கொண்டிருந்தேன்.

நட்புக்காக நல்லதைச் செய்யும் ராஜகோபால், நான் பங்கு பற்றும் பள்ளி நிகழ்ச்சிகளைப் பார்க்க வந்து விடுவார்.

நினைவில் இரு சம்பவங்கள்:

அக்காலத்துக்கேற்ப விவாத மேடையில், 'சீதனம் வாங்குவது நல்லதா கூடாதா?' என்ற தலைப்பில் கூடாது எனப் பேசும் அணித்தலைவனாக நான். ஆயத்தம் செய்து நன்றாகப் பேசியதால் பயப்படாமல் தீர்ப்பு கூறிய நடுவர் என்னை ஆதரித்தார். தீர்ப்பைக் கேட்டு கைதட்டிய ராஜன் என் காதில் போட்டார், 'மைச்சான் சீதனம் வாங்கக்கூடாது எண்டு பேசு, பாராட்டுவம் எழுது. பத்திரிகையிலை போடுவம். ஆனால், சீதனம் வாங்கு'.

யாழ். இந்துக்கல்லூரி வைர விழாவில், சொக்கன் தயாரித்த 'ஞானக்கவிஞன்' நாடகத்தில், கம்பன் பாத்திரமேற்ற கணபதிப்பிள்ளைக்கு நாமம் வைத்து ஆழ்வாராக ஒப்பனை.

தேவன்-யாழ்ப்பாணம் தயாரித்த தெய்வீக்காதல் நாடகத்தில் கம்பன் பாத்திரமேற்ற எனக்கு வீபூதி சந்தன திலகத்துடன் வேறு விதமான ஒப்பனை.

ஒப்பனையை மாற்ற ஆசிரியர் சொக்கன் முயன்றபோதும் நான் மறுத்துவிட்டேன்.

நாடகம் பார்த்த ராஜகோபால் என் ஒப்பனைக் குறைபாட்டை சுட்டிக்காட்டி ஆசிரியரிடம் மன்னிப்பு கேட்க வைத்தார்.

1967-இல் கொழும்பில் எனக்கு அரசாங்கத்தில் நிரந்தர வேலை கிடைத்த போது, என்னை விட மகிழ்ந்தவர் ராஜ கோபால்.

விடுமுறையில் யாழ்ப்பாணம் செல்லும்போது எங்கள் சந்திப்பு கட்டாயம் இடம்பெறும். பலரை அறிமுகம் செய்வார். எழுதத் தூண்டுவார்.

எந்த ஒரு சிறிய விடயத்தையும் சுவையாக எழுதும் ஆற்றல் அவருக்கு இயல்பாக வரும். எல்லோரையும் வளைத்துப் போடும் அவருக்கு யாரோடும் கொழுவத் தெரியாது.

நுவரெலியா சென்ற சில தினங்களுக்குள் கலைவிழா நடத்தக்கூடிய வாய்ப்பும், விழா மலர் வெளியிடக்கூடிய வசதியும் எனக்கு கிடைத்ததும், 'சபாஷ் தில்லை' என என்னைப்பற்றி எழுதி பலர் என்னைப் பாராட்ட வழி செய்தார்.

வவுனியாவில் சாதாரண எழுதுநராக கடமையாற்றிய வேளையில், தன் நண்பர் மாலியுடன் வந்து என் கலை, இலக்கிய முயற்சிகளை தினகரன் வார மலர் மூலம் முழு இலங்கையும் அறியச்செய்தார்.

வவுனியாவிலிருந்து மீண்டும் கொழும்புக்கு இடமாற்றம் கிடைத்த போது, அவருக்கு தினகரனில் உதவி ஆசிரியராகும் வாய்ப்பு கிடைத்தது.

கணேசபிள்ளை, கே.எஸ். பாலச்சந்திரன், யேசுரட்ணம், கந்தசாமி போன்ற பிரபலங்களுடன் அசட்டு மாப்பிள்ளை நாடகத்தில் நான் நடித்தபோது நல்லதொரு விமர்சனம் எழுதினார்.

வழமையாக விமர்சனம் எழுதியவரின் பெயரை அடியில்தான் பத்திரிகையில் போடுவது வழக்கம். ஆனால் தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன், அசட்டு மாப்பிள்ளை என்ற தலைப்பைத் தொடர்ந்து பாமா ராஜகோபால் எனப் போட்டு ராஜகோபாலையும் என்னையும் அசட்டு மாப்பிள்ளை களாக்கிச் சிரித்தார்.

அக்காலகட்டத்தில்தான் ராஜனும் நானும் மாப்பிள்ளைக் கோலத்தில் மணவறைகளில் அமர்ந்து கொண்டோம். திருமதி. ராகினி ராஜகோபாலும் திருமதி. தேவமலர் தில்லைநடராசாவும் பல நாள் பழகியவர் போல இணை பிரியா சிநேகிதிகளானார்கள்.

இதனால் அடிக்கடி சந்திப்புகள், விருந்துண்ணல், கருத்துப் பரிமாறல்.

சாதாரண எழுதுநராக கடமையாற்றிய எனக்கு போட்டிப் பரீட்சையின் பெறுபேறாக நிர்வாகசேவை அதிகாரியாக வரும் அதிர்ஷ்டம் கிடைத்தது.

கடமைகளுக்கிடையே நிறைய எழுத வேண்டுமென்று நண்பர் எதிர்பார்த்தார். தூண்டி களம் பல அமைத்துத் தருவதாகவும் ஊக்குவித்தார்.

ஏற்கனவே எழுத்தாற்றலுள்ள நிர்வாக சேவை உத்தி யோகத்தர் பாதிக்கப்பட்டதால் பேனாவைத் தொடவும், கற்பனைக் குதிரையைத் தட்டி விடவும் பின்வாங்கினேன்.

தில்லையைக் காணவில்லை என ராஜகோபால் தினகரனில் ஒரு செய்தித் தலைப்பில், பழையதைச் சொல்லி பலரை என்னுடன் தொடர்பு கொள்ள வைத்து, மீண்டும் எழுத வைத்தார்.

நாட்டு நிலைமைகள் காரணமாக ராஜகோபால் குடும்பத்துடன் லண்டன் புகுந்தார். அரச சேவையில் என் நிலை படிப்படியாக உயர்ந்தது.

நேரடித் தொடர்பு சிரமமாக இருந்தபோதும் எனது எழுத்துகளை தேடி சிறப்பான குறிப்புகளுடன் அவர் வெளியிட்ட 'ஈழகேசரி', 'மனம் பேசுது', 'புதினம்' பத்திரிகைகளில் பிரசுரித்தார்.

இதனால் லண்டன், சுவிஸ், கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு கல்வி, கலை, இலக்கிய சுற்றுலா செல்லும் வாய்ப்பும் கிடைத்தது.

லண்டனுக்கு பல தடவைகள் செல்லும் அதிர்ஷ்டம். என்னை அழைத்து விருந்து தந்து. பழையதைப் பகிர்ந்துகொள்வதில் ராஜகோபாலுக்கு குதூகலம்.

இந்தக் குதூகலத்தில் ராஜகோபால் - ராகினி மட்டுமல்ல, அவர்கள் வாரிசுகள் ஷியாமும் ஷர்மினியும் களிப்புடன் கலந்து கொள்வார்கள்.

நீண்ட இரவுகளில் பழைய பரவசங்களை மீட்டி சுகானுபவம் பெற்ற பின், நான் செல்ல வேண்டிய இடங்களுக்கு வாகனத்தைச் செலுத்துவது நண்பரின் மகன் ஷியாம்.

நாமிருவரும் படித்த, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க லண்டன் கிளை 'வானவில்' நிகழ்வில் கலந்துகொள்ள ஒருமுறை இலங்கையிலிருந்து சென்றேன்.

விமான நிலையத்தில் என்னை வரவேற்க வந்திருந்த ராஜகோபாலுடன் முக்கிய பிரமுகராக வந்திருந்தவர், அவர் பேத்தி -ஷர்மினியின் மகள்.

ராஜகோபாலிடம் நினைவாற்றல் இருந்தது. தன்னம்பிக்கை இருந்தது. திட்டமிடல் இருந்தது. ஊக்குவிக்கும் மனப்பான்மை இருந்தது. திறமைகளை அடையாளம் கண்டு வெளிப்படுத்தும் திறன் இருந்தது. அதனால் அவரது ஊடக வாழ்வும் சுவை மிகுந்திருந்தது.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக தொடரும் நட்புக்கு இலக்கணமான நண்பன் ராஜகோபாலை இதயத்தால் வாழ்த்துகின்றேன்.



thillainadarasa.s@thaiveedu.com





# அண்ணாவும் நானும்



– பவானி ரவீந்திரன்

ஓம் என்பது இந்துக்களின் மந்திரம். அண்ணா என்பது எனது மந்திரம். எனக்குள் தற்போது ஒரு பிரச்சினை உருவாகிறது, என் நினைவுகளிலிருந்து எதை எழுதுவது எதை விடுவது என்று?

அண்ணா தனது இருபது வயதில் காலடி எடுத்து வைத்த மறுநாள், எமது தந்தையார் விண்ணுலகிற்கு ஆராய்ச்சி செய்யப் போய்விட்டார். அப்போது எமது அம்மாவுக்கு 38 வயது. கள்ளங்கபடமற்ற, ஒருவரிலும் குறை காணாத, எவருக்கும் இல்லை என்று சொல்லாத எமது தாயர் இடிந்து போய்விட்டார்.

நாங்கள் மொத்தம் 6 பிள்ளைகள். 2 அண்ணன்மாரும் 3 தங்கைமாரும். அண்ணா ராஜகோபால் தாய்க்கு தலைமகன். ஒரு குறையுமில்லாமல் வளர்ந்த அண்ணாவுக்கு தனது இளமைப் பருவத்தை அனுபவிக்க முடியாமல் போய்விட்டது. அவர் அதையிட்டு வருந்தியதுமில்லை.

பாட்டன் பாட்டிகளின் உதவியுமில்லை, வழிகாட்டலுமில்லை. குடும்பச் சுமையை சுமக்கத் தொடங்கினார். எங்கள் 5 பேருக்கும் (சகோதரர்களுக்கு) தகப்பனாக மாறினார். அம்மாவை ஒரு குழந்தைபோல பார்த்துக்கொண்டார்.

இல்லை என்று வருபவர்களுக்கு உதவுவது மட்டுமன்றி, அண்ணா தனது தாய், சகோதர்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தார் - செய்தார்.

எனது பள்ளிப் பருவத்தில் அடிக்கடி நோய்கள் என்னைப் பிடித்துவிடும். சில காலங்களில் கடுமையாகவும் இருந்திருக்கிறேன். எனது தந்தை இறந்தபின் என்னை சுகமாக்க அண்ணா எடுத்த முயற்சிகள் பல, தகப்பனுக்கு மேலாக செய்தார். இயமன் வந்திருந்தால் கூட போராடி வென்றிருப்பார். ஒவ்வொரு மாதமும் 18 வயதான என்னை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போய் நோய் வராமல் தடுப்பு ஊசிகள் ஏற்றுவிப்பார். டாக்டர்களும் அண்ணாவுக்கு பயம் என்று நான் நினைப்பது உண்டு.

பள்ளிப் பருவத்தில் நான் ஒரு தடவையாவது தனியாக பஸ்ஸில் பிரயாணம் செய்தது கிடையாது. பெரும்பான்மையான நேரத்தில் ஏதோ விதமாக நேரம் ஒதுக்கி என்னோடு பஸ்ஸில் வருவார். அண்ணா சொல்லும் இருக்கையில் தான் பஸ்ஸில் இருப்பேன். எப்படித்தான் ஈழநாடு பத்திரிகை அண்ணாவுக்கு லீவு கொடுக்கிறது என்று யோசிப்பேன். எனக்கு தனியாகவோ, கூட்டமாகவே போகும் என் சிநேகிதிகளைப் பார்த்து பொறாமை. ஊரில் இருக்கும்வரை சிநேகிதிகளோடு பஸ்ஸில் போகவேண்டும் என்ற ஆசை நிறைவேறவே இல்லை.



மகன், தனது தாய்க்குத் தாயாக மாறினார். சிவபெருமான் தாயாக மாறி பிரசவம் பார்த்த கதைதான் ஞாபகம் வருகிறது. 90 வயது அம்மாவை அவர் பார்த்துக் கொண்டதை கண்ட வர்கள் பலரும் வியப்படைந்தார்கள்.

அந்தக் காலத்தில் அரசர்கள் அரண்மனையைச் சுற்றி அகழி வெட்டி தங்கள் வாரிசுகளுக்கு பாதுகாப்பு வழங்கினார்கள். அதே போல எங்கள் வீடு வல்வெட்டியில் மாப்பாணர் வளவில் 40 பரப்பு காணியின் நடுவில் இருந்தது. காணியைச் சுற்றி மதில் போட்டதுமல்லாமல் வேலிக்கு மேல் வேலி போட்டு எந்த விதமான இடரும் நேராமல் செய்தார். ஒரு இரா ஜங்கமே நடத்தினார். அவரைக் கேளாமல் காற்றுக்கூட நுழைந்திருக்கமுடியாது.

முதன் முதலில் எனது கணவர் எங்கள் வீட்டுக்கு வந்தபோது இதுதான் ராஜகோபால் கட்டிய கோட்டையா? என்றார். தற்போதைய என்னுடைய திருப்திகரமான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அண்ணா ஒரு பெரும் காரணம்.

அண்ணாவின் பொறுப்பும் பாசமும் எங்களோடு மட்டும் முடிந்து விடவில்லை. தன்னுடைய பெறாமக்கள் மருமக்கள் அனைவரிடமும் பெரும் பாசம் கொண்டவர். அவர்கள் அனைவரது அன்பையும் மதிப்பையும் தக்கவைத்துக் கொள்ள அவர் தவறவில்லை.

எனது பதினான்கு வயதில் தந்தையார் எம்மை விட்டுப் பிரிந்து நெருப்போடு கலந்த அன்று, என்னால் சாப்பிட முடிய வில்லை. அண்ணா சாப்பிடு, சாப்பிடு என்று வலுக்கட்டா யமாக இடியப்பத்தை ஊட்டி விட்டதையும், நான் அழுத படியே சாப்பிட்டதையும் நினைத்துப்பார்க்கிறேன். ஒவ்வொரு நாளும், அவரின் அதே கைகள் பாலில் Sanatogen-ஐ கரைத்து நான் லண்டன் வரும் வரை (1971-ஆம் ஆண்டு வரை) ஊட்டியது மறக்க முடியாத நினைவுகள். நான் சில வேளைகளில் அவரை ஏமாற்றிவிட்டு முற்றத்தில் அதனைக் கொட்டியதையும் மறக்க முடியாது.

எமது தங்கை சில வருடங்களுக்கு முன்பு நோய்வாய்பட்டு இருந்தாள். அதை அறிந்த அண்ணா 300 மைல் தொலைவில் இருந்த என்னிடம் தொலைபேசியில் அழைத்து என் தங்கை யின் உடல் நிலைமையைச் சொல்லி அழுதார். நான் உயிரோடு இருக்கும்போது அவளுக்கு இந்த நிலை வந்தி ருக்கக்கூடாது. என்னால் தாங்க முடியவில்லையே என்று கலங்கினார். அவரின் ஆசியோடு தற்போது என் தங்கை நல்ல ஆரோக்கியத்தோடு நன்றாக வாழ்ந்து வருகிறாள்.

அம்மா சுகவீனமுற்று அண்ணா வீட்டில் இருந்த காலத்தில் அவவுக்கு ஊசி போடுவது, மருந்துகள் கொடுப்பது தொடக்கம் பலதையும் செய்தார். அவை மட்டுமல்ல அம்மா தனியாக படுக்கப் பயப்பட்டவர் என்பதால், அம்மாவோடு ஒரே கட்டிலில் நித்திரை கொள்வதையும் தனது பழக்க மாக்கிக் கொண்டார்.

அண்ணாவுக்கு உறுதுணையாக இருப்பவர் அவருடைய மனைவி - பிரபல நடன ஆசிரியை ராகினி இராஜகோபால். அவர்களது 2 பிள்ளைகளும் மருமக்களும் பேரப்பிள்ளை களும் அவருக்கு பெரும் மகிழ்வைக் கொடுக்கிறார்கள். அவரது மகள் வழிப்பேரன் யாதவன் அண்ணா மாதிரி கலைத் துறையில் கெட்டிக்காரன், யாதவனிடம் கேட்டால் கலைத் திறமை எல்லாம் தாத்தாவிடம் இருந்து வந்தது என்பான். லண்டனில் மருத்துவக் கல்லூரியில் 3-ஆம் ஆண்டில் படிக் கிறான். அண்ணாவுக்கு பெருமையும் புகழும் சேர்க்கிறான்.

எங்கள் குடும்பம் நல்லாக இருப்பதற்கு அண்ணா மட்டுமே காரணம். Covid 19 காலத்தில் அம்மா லண்டனில் ஆஸ்பத்தி ரியில் இருந்தபோது அண்ணாவையும் மனைவியையும் மட்டுமே அம்மாவைப் பார்க்க அனுமதித்தார்கள். 94 வயதில் அம்மா அண்ணா, அண்ணா, என்று சொல்லியபடியே கடைசி மூச்சையும் விட்டார்.

அண்ணா, அண்ணனுக்கு இலக்கணமாக வாழ்கிறார். அவர் ஈழத்து சரித்திரத்தில் இடம்பெற வேண்டியவர். அவர் விருப் பப்படி, அவரது ஆசிகளோடு நாங்கள் எப்போதும் அவரோடு வாழ்வோம்.

இன்னும் பல ஆண்டுகள் அவர் ஆரோக்கியத்தோடும் சகல செல்வங்களோடும் வாழ நானும் இறைவனைப் பிரார்த்திக் கிறேன்.



bhavani.r@thaiveedu.com



# மறுமலர்ச்சிக் காலத்தில் முகிழ்த்த ஊடகப் பேராசான் ராஜகோபால்

**- எல்.எம். வரதராஜன்**

ஈழத்து இலக்கிய வரலாற்றின் மறுமலர்ச்சிக் காலத்தில் அரும்பிய ஊடகர் எங்கள் மதிப்பிற்குரிய ஈ.கே. ராஜகோபால் அவர்கள் என்று எனது குறிப்பை ஆரம்பிக்கலாம் என்று எண்ணுகிறேன்!

அழகான, சுவையான தலையங்கங்களை அக்காலத்தில் இட்டு, செய்திகள், கட்டுரைகள், செய்திக் கட்டுரைகள் அனுப்பும் இளையவர்களான எமக்கு ஓர் ஊக்க மருந்தான, ஊடக ஆசானாகத் திகழ்ந்த ஒருவர் எம் மதிப்புக்குரிய ராஜ கோபால் அண்ணர் அவர்கள்.

'சாவே உனக்கு சாவு வராதா ?' என்று ஒரு காலத்தில் பேசப் பட்ட தலையங்கத்திற்குச் சொந்தக்காரர் அவர்.

'ராஜகோபால் நல்ல தலைப்புகள் இடுவார், அதில் ஒரு கலை யம்சம் இருக்கும்' என்று மூத்த எழுத்தாளர் அன்ரனி ஜீவா சொல்வார்.

தினகரன் வார மஞ்சரியை அக்காலத்தில் அழகூட்டிய ஒருவர் ராஜகோபால் என்று 'ஈழத்துச் சோமு' - சோமகாந்தன் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார்.

எழுத்தாளர்கள், கலைஞர்களை தமது பத்திகள், பேட்டிகள் மூலமாக தினகரனில் அமைதியாக இருந்து அரங்கேற்றியவர் பாமா என்று சொன்ன சோமகாந்தன், எங்களது பத்திக ளுக்கும் முன்னோடி ராஜகோபால் தான் என்றார். சின்னச் சின்ன வசனங்களாக சிறு சிறு பந்திகளாக பாமா எழுதுவார். அப்படி எல்லாராலும் எழுத முடியாது என்றார்.

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் சோமகாந்தன் தினகரன் வாரமஞ்சரியில் கலை இலக்கிய நிகழ்வுகள் பற்றிய பத்தி ஒன்றை எழுதிவந்தமை குறிப்பிடத்தக்கது.

எண்பதுகளில் தினபதி, சிந்தாமணி இதழ்களின் பிரதி ஆசிரியர் அமரர் கே.கே. இரத்தினசிங்கம் அவர்கள் யாழ்தே வியில் பயணித்துக் கொண்டிருந்தபோது, வவுனியாவுக்கு அருகில் குறுக்குப்பாதையில் சென்ற ட்ராக்டர் வண்டி ஒன்றுடன் மோதியபோது அதன் பெட்டி திரும்பி ரயில் வண்டி யுடன் மோதியதால் யன்னலோரத்திலிருந்த இரத்தினசிங்கம் அவர்களின் கையில் காயம் ஏற்பட்டுவிட்டது. அவரை உடன டியாக யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பியிருந்தார்கள்.

இந்தச் செய்தி ஈழநாட்டில் மறுநாள் வந்திருந்தது. அந்த வேளையில் நான் தினபதி, சிந்தாமணி இதழ்களின் உடுப்

பிட்டி நிருபராக கடமையாற்றியதால், ஈழநாடு அலுவலகத்துக்குச் சென்ற வேளையில் ராஜகோபால் அண்ணர் 'வாருமன் போய்ப் பார்ப்போம் அவரை' என்று கேட்டார்.

இரத்தினசிங்கம் அவர்களுடன் தொலைபேசியில் பேசி மட்டும்தான் பழக்கம். அவர் நான் போய்ப் பார்க்க என்ன நினைப்பாரோ தெரியாது என்று சொல்ல, 'என்ன வரதன்? அவர் உங்களுடைய ஆசிரியர் அவர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார். எனக்கும் அவர் பழக்கமில்லை. ஆனாலும், அவர் ஒரு பத்திரிகையாளர். போய்ப் பார்த்தால்தான் என்ன. வாரும் நீர் என்னுடன்' என்று கூறி அழைத்துச் சென்றார்.

இரத்தினசிங்கத்தார் கட்டிலில் படுத்திருந்தார். யாரும் அருகில் இல்லை. நாங்கள் அருகில் போய் அவருக்கு எம்மை அறிமுகம் செய்தோம். ராஜகோபால் அண்ணர் தான் எம் இருவரதும் அறிமுகத்தைச் செய்தார்.

இரத்தினசிங்கத்தார் 'அப்படியா வாங்கோ' என்று சொல்லித் தமக்கு நடந்ததைச் சொன்னார்.

ராஜகோபால் அண்ணரிடம் 'உமது எழுத்துகளை வாசிப்பேன். எனக்கு எல்லாம் வாசிக்க நேரம் இல்லை. ஆனால் உமது எழுத்துகள் வசனங்கள் எங்கள் நடை போல கொஞ்சச் சொற்கள்' என்றார்.

தினபதியில் ஒரு வசனம் ஆறு அல்லது ஏழு சொற்கள் கொண்டதாக இருக்க வேண்டும் என்பது நிருபர்களுக்கு வழங்கப்படும் ஆலோசனைகளில் ஒன்று.

காலையில் வேலைக்குப் போகிற ஒருத்தர், எடுத்தவுடன் வாசிச்சு, வாசிச்ச வசனம் மறக்காமல் அடுத்த வசனம் வந்துவிட வேண்டும்' என்று இரத்தினசிங்கத்தார் கட்டிலில் இருந்தபடி சொன்னார்.

இரத்தினசிங்கத்தாரிடம் தொலைபேசியில் பழகியது போல, ராஜகோபால் அண்ணரிடமும் ஊடகத்துறையில் நான் பயின்ற விடயங்கள் சில உள்ளன.

நான் கரவெட்டி ஈழநாடு நிருபராக நியமனம் பெற்ற பின்னர், செய்திகள் அனுப்பி சில வாரங்களின் பின்னர், அலுவலகத்திற்குச் சென்றபோதே அவரைச் சந்தித்தேன்.

எனது எழுத்தைப் பாராட்டினார். 'நன்றாக எழுதுகிறீர் நான் வெட்டுவதில்லை' என்றவர், சனசமூக நிலையங்களில் கலை நிகழ்ச்சிகளில் அரசியற் பிரமுகர்கள் பேசினால் முதற் பந்தியில் அன்றைய அரசியல் நிலையுடன் தொடர்பாக என்ன பேசினார் என்பதை முதற் பத்தியாகவும் பின்னர் தொடரும் பந்தியில் அந்தச் சனசமூக நிலையம், கலைஞர்கள் பிரமுகர்கள் பற்றிச் சொன்னதையும் எழுதினால் செய்தி எல்லோரும் வாசிக்கக் கூடியதாக அமையும் என்று சொன்னது ஞாபகம்.

மூத்த ஊடகர் தில்லைநாதன் தமக்கு எப்படி ஒரு மரண விசாரணையை எழுதுவது என்பதையும் நீதிமன்ற விசாரணையின் படிமுறைகளையும் அவற்றை எப்படி எழுதுவது என்பதையும் சுவைபட விளங்கியவர் ராஜகோபால் என்றார்.

எனது சகோதரர் ரூபன் யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிக்கொண்டு ஈழநாடு இதழுக்குச் சுண்டிக்குழி நிருபராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அலுவலக நிருபர்கள் பலர் செய்யவேண்டிய பணியை அவர் அந்த நிருபருக்கான பதவிக்குரிய பகுதிப்பெயருடன் செய்துகொண்டிருந்தார். அந்த வேளையில் 1985-இல் 'ஈழமுரசு' என்ற புதிய நாளிதழ் வெளிவந்தது.

இரண்டு தசாப்தங்களாக ஒரேயொரு பிராந்திய நாளிதழான ஈழநாடு வெளிவந்துகொண்டிருந்த காலம் அது. ஈழமுரசின் வருகை பேசப்பட்ட வேளையில் அதன் எதிர்பார்ப்பு வாசகர் வட்டங்கள், ஊடகர்கள், கல்விமான்கள் மத்தியிலான ஊடாட்டங்களில் பெரிதும் பேசப்பட்ட பொருளாயிருந்தது.

தினகரனில் பணியாற்றிக் கொண்டிருந்த மூத்த ஊடகர் எஸ். திருச்செல்வம் அவர்கள் அதன் ஆசிரியராக வருகிறார் என்பதும் பிரபல நிதி நிறுவனம் ஒன்றின் அதிபர் ம. அமிர்தலிங்கம் அதற்கு முதலிடுவதும் அத்தகைய எதிர்பார்ப்புகளுக்கு முக்கிய காரணமாயமைந்தது.

**இளையவர்கள் பலரை ஊடகத்துறைக்குள் இணைய ஊக்குவித்தவர் அவர், படைப்பாளியாகவும் படைப்பாளிகளை வளர்த்து ஊக்குவித்த பத்திரிகையாளராகவும் பரிமாணம் பெற்றிருந்தார், அவரது தோற்றத்தில்கூட ஒரு கலைத்துவம் மிளிர்ந்திருந்தது.**

அந்த வேளையில், எனது சகோதரரிடம் ராஜகோபால் அண்ணர் 'உப்படி ஒவ்வொன்றாக எழுதி அனுப்பிப் பகுதிநேர நிருபராக இருப்பதைவிட உமக்கு ஆர்வமான ஊடகத்துறையில் முழுநேரமாக ஈடுபடும். இப்போதைக்கு ஈழநாடு அலுவலகத்துக்கென்று ஆட்களை எடுக்கப்போவதில்லை, அப்படி எடுக்கும் நிலையும் இல்லை' என்று சொல்லி, அவரை ஊக்கப்படுத்தி, 'நான் திருவிடம் சொல்கிறேன்' என்று அவரை இணைத்து விட்டவர் ராஜ கோபால் அண்ணர். எனது சகோதரரை மட்டுமன்று, இளையவர்கள் பலரை அப்படி ஊடகத்துறைக்குள் இணைய ஊக்குவித்தவர் அவர்.

மூத்த கலைஞரும் கவிஞருமான ஶ்ரீதர் பிச்சையப்பா தம்முடைய கவிதை ஒன்று தினகரனில் வருவதற்கு காரணமானவர் ராஜகோபால் என்று சொல்லக் கேட்டுள்ளேன். தமது தந்தையார் பிச்சையப்பாவுடனும் அவர் காலத்துக் கலைஞர்களுடனும் ராஜகோபால் நட்புடன் பழகியவர் என்று சொல்லியுள்ளார்.

கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், அரசியலாளர்கள் என்று பல நட்பு வட்டங்களையும் கொண்ட ஓர் ஊடகராக அவர் திகழ்ந்தார். அவரது கலாரசனைக்குரியவராக அவரது துணையும் கிடைத்ததும் அவர் பெற்ற வரமே.

அவரது தோற்றத்தில்கூட ஒரு கலைத்துவம் மிளிர்ந்ததை நான் மட்டுமல்ல, அன்றைய ஊடகர்களும் பேசிக்கொள்வதைக் கேட்டுள்ளேன்.

> புலம்பெயர்ந்த பின்னரும் அவரது ஊடகப் பணி தமிழன் என்ற இதழாக ஆரம்பித்து லண்டன் புதினம் இதழாக மலர்ந்து அவரது ஊடக வாசனை லண்டன் முதல் ஐரோப்பிய நாடெங்கும் வீசியமை ஈழத் தமிழ் ஊடக வரலாற்றில் மாபெரும் சாதனையென்றே கொள்ளப்படவேண்டும்!

அண்மையில் மூத்த பத்திரிகையாளர் தில்லைநாதன் அவர்களிடம் இப்படி ஒரு கட்டுரை எழுதப்போகிறேன் என்றவுடன், நான் மேலே குறிப்பிட்ட 'சாவே உனக்கு சாவு வராதா' என்ற தலையங்கம் போல பல அருமையான தலைப்புகளை இட்டவர் ராஜகோபால் என்று சொன்னதுடன், அவரது புனை பெயர்களில் உள்ள கதைகளையும் சொன்னார்.

எழுத்தாளர்களின் பின்னால் ஒவ்வொரு கதை இருக்கும். அதுபோல அவர்கள் இடும் புனை பெயர்களுக்கும் கதைகள் இருக்கும். பாமா ராஜகோபால், ஈ.கே. ராஜகோபால், ஈ.கே.ஆர், ராகி என்பன அவர் தமது ஆக்கங்களில் இட்ட பெயர்கள்.

ஈழநாடு அலுவலகத்துக்கு நாம் போகும் போது ராஜகோபால் அண்ணர் சேட்டின் நீண்ட கையைக் கொஞ்சம் மடித்து நிற்பதும் அவரது இன்முகமும் நினைவில் நிற்பவை.

அது உண்மையே. ஈழநாடு அலுவலகத்துக்கு அக்காலத்தில் பிராந் திய நிருபர்களாகிய நாங்கள் போகும்போது ஆசிரிய பீடத்தில் பணியாற்றியவர்கள் மிகவும் 'சீரியஸாக' பணியாற்றிக்கொண்டிருப்பதே வழக்கம்.

ராஜகோபால் அண்ணரிடம் இவர்களைவிட ஏதோவொரு வித்தியாசம் இருந்தது. அந்த கலாவசியம் பற்றி தில்லைநாதன், ஜெயக்குமார், எனது சகோதரர் ரூபன் ஆகியோர் குறிப்பிடுகையில், 'தமாஷாக, அன்போடு குடும்ப நலன் எல்லாம் விசாரித்துப் பழகும் ஒருவர் ராஜகோபால்' என்றனர். அத்துடன் 'எழுதுங்கோ', 'தொடர்ந்து ஏதாவது எழுதுங்கோ' என்று ஊக்கப்படுத்தும் ஒருவர் என்றனர்.

ஈழநாட்டில் பிரதி ஆசிரியராயிருந்தவேளை வட மராட்சியின் இசை, நாடகக் கலைஞர்களைப் பேட்டி கண்டு எழுதும்படி என்னை ஊக்குவித்தார். அவ ரும், வடமராட்சியின் வல்வெட்டியைச் சேர்ந்தவர் என்பதாலும், நான் கரவெட்டி நிருபராயிருந்ததாலும் எனக்கு ஆலோசனை வழங்கி, என்னை ஊக்குவித்து அதனை ஒரு தொடராக ஆக்கலாம் என்பது அவரது ஆவலுக்குக் காரணமாயிருக்கலாம்.



தொடராக வந்த பின்னர் அவற்றைத் தொகுத்து ஒரு நூலாகவும் பதிப்பிக்கலாம் என்றும் சொன்னார். நூல் பற்றிய யோசனை எம்போன்றவர்களிடம் அரும்பாத காலம் அது. அவர் நூல் வெளியிடுவதில் ஆர்வ மாக இருந்தார். பதிப்பியல் மீதான அவரது ஆர்வம் புலம்பெயர்ந்த நாட்டிலும் தொடர்ந்ததை நாம் அவரில் கண்டோம்.

அவர் எழுதி வெளிவந்த வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள் என்ற நூல் வெளியீட்டில் ஈழநாடு நிருபர்கள், உள்ளூர்ப் பத்திரிகை நிருபர்கள் எனத் திரளானோர் கலந்தது நினைவு. தினகரன் பிரதம ஆசிரியர் அமரர் ஆர். சிவகுருநாதன் அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிற்காலத்தில் தினமுரசு வார இதழில் தொடராக அது வந்த போதும், இன்று அதனை வாசிக்கின்ற போதும் அவருள்ளேயிருக்கும் சமூகப் பிரக்ஞையும் வரலாற்றுப் பற்றும் தெரிகிறது.

படைப்பாளியான ஓர் ஊடகவியலாளருக்கு, தமது படைப்பின் மீதான தூர நோக்கும் சமூகப் பயன்பாடும் தெரியவேண்டும் என்பதை, அவரின் அந்த நூல் மூலம் அவரிடம் நாம் கற்றுக்கொள்ள முடிகிறது.

அவருடைய எழுத்துப் பிரதியைப் பற்றி பலரும் சிலாகிக்கக் கேட்டுள்ளேன். தானா, தீனா, தூனா, லூனா, தீயன்னா போன்ற எழுத்துகள் வித்தியாசமானவையாக ஓவியங்கள் போல இருக்கும். சில உதவி ஆசிரியர்களினதும் அலுவலக நிருபர்களினதும் எழுத்துகளைச் சில அச்சுக்கோப்பாளர்களே உடனடியாக விளங்கிக் கொள்வர். ஆனால், ராஜகோபாலின் எழுத்தை இலகுவாக விரைவாக விளங்கிக் கொண்டு அச்சுக் கோர்க்க முடியும் என்று அக்காலத்தில் அச்சுக்கோப்பாளர்களாகவிருந்த வேலுப்பிள்ளை அண்ணர், விக்ரர் அண்ணர் சொல்லக் கேட்டுள்ளேன்.

இலங்கையிலிருந்து லண்டன் போயிருந்த அவரது பாடசாலைத் தோழர் உடுவை தில்லைநடராஜாவிடம் எனக்கு பரிசுப் பொருளுடன் அவர் கொடுத்திருந்த கடிதத்தில் அவரது எழுத்தைக் காணலாம்.

மேலே ஒரு பந்தியில், நாங்கள் அனுப்பும் செய்திக ளுக்கு அழகாக சுவையாக எளிமையாகத் தலையங்கம் போடும் ஓர் உதவி ஆசிரியராகத் திகழ்ந்தார் என்றேன்.

இதனை நான் சொன்னபோது நகைச்சுவையாகவும் தலை யங்கம் போடுபவர் ராஜகோபால் என்று ஈழ நாட்டின் மூத்த நிரு பர்களில் ஒருவரான எஸ்.ஜே. ஜெயக்குமார் சொன்னார்.

ஜெயக்குமார் அண்ணருடன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் படித்த இருவர் அவர் உள்ளூர் நிருபராகப் பணி யாற்றிய இதழ்களின் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றிய வர்கள். ஒருவர் சிந்தாமணி க.தா. சிவகுருநாதன் மற்றவர் ஈழநாடு ஈ.கே. ராஜகோபால்.

அங்கு க.தா. சிவகுருநாதன், ஈ.கே. ராஜகோபால், கொடகே விருது பெற்ற எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் ஆகி யோர் ஒரு வகுப்பிலும் ஜெயக்குமார், இந்துமாமன்ற முன்னாள் தலைவர் கந்தையா நீலகண்டன், முன்னாள் அரச அதிபரும் பணிப்பாளருமான உடுவை தில்லைநடராஜா, வில்லிசைக் கலைஞரும் இலங்கை மின்சார சபை உதவிப் பொது முகா மையாளருமான முத்து இரத்தினானந்தன் ஆகியோர் ஒரு வகுப்பிலும் படித்துள்ளனர்.

கல்லூரி நாட்களில் சஞ்சிகைகள் வெளியிடுவதிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதிலும் இவர்கள் ஆர்வமுடன் பணியாற் றியதை நினைவு கூர்ந்த ஜெயக்குமார் அண்ணர், ராஜ கோபால் அவற்றில் சிறுகதைகளை எழுதுவார் என்று குறிப் பிட்டார்.

செங்கை ஆழியான் தமது சிறுகதை வரலாற்று நூலில், ராஜகோபால் பற்றிக் குறிப்பிடுவதை இங்கு தருதல் பொருத் தமாகும். அதில் அவர், அறுபது எழுபதுகளில் சிறுகதை களைப் படைத்தவர்களில் ராஜகோபாலையும் விதந்து குறிப் பிட்டுள்ளார். ராஜகோபாலின் 'சரன்' என்ற சிறுகதை முக்கிய மாகப் பேசப்பட்ட ஒன்று என்கிறார். மறுமலர்ச்சிக் கால எழுத் தாளர்களில் ஒருவரான சிற்பி சரவணபவன் 'கலைச்செல்வி' என்ற சஞ்சிகையை வெளியிட்டபோது ராஜகோபாலின் எழுத்து வகிபாகம் பற்றி செங்கை ஆழியான் குறிப்பிடுகிறார்.

ராஜகோபாலுடன் எழுதியவர்களாக செங்கை ஆழியான், செ. யோகநாதன், செம்பியன் செல்வன் (அவர் பெயரும் ராஜ கோபால்) பெனடிக்ற் பாலன், பொ. சண்முகநாதன், தெணி யான் ஆகியோரை அவர் குறிப்பிட்டுள்ளார்.

1960-களில் வரதரால் வெளியிடப்பட்ட 'புதினம்' வார இதழில் ராஜகோபால் அவர்கள் எழுதி வந்துள்ளார். இதனை மறும லர்ச்சிக் காலம் என்பதுடன் ஈழத்துச் சிறுகதையின் முற் போக்குக் காலம் என்றும், 1961 முதல் 1983 வரை ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் புத்தெழுச்சிக் காலம் என்றும் செங்கை ஆழியான் குறிப்பிடுகிறார்.

ஈழத்தின் முதற் தமிழ் இதழான ஈழகேசரியுடன் ஆரம்பமான மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களின் வரிசையில் தம்மையும் இணைத்துக் கொண்ட ராஜகோபால் அண்ணர், இதன் முதற் பகுதியில் படைப்பாளியாகவும் இரண்டாம் பகுதியில் படைப் பாளிகளை வளர்த்து ஊக்குவித்த பத்திரிகையாளராகவும் பரிமாணம் பெறுவதைக் காணலாம்.

அதனாலேயே மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்களின் படைப் புலகத்தில் வலம் வந்த ஊடகர் என்ற பெருமை அவருக்கு ரியது என்று எனது இப்பதிவை ஆரம்பித்தேன்.

புதினத்தில் எழுதி வந்த அவர் அறுபதுகளில் ஈழநாடு தொடங்கப்பெற்றபோது அதில் உதவி ஆசிரியராகச் சேர்கிறார்.

பழம்பெரும் பத்திரிகை ஆசான் கே.பி. ஹரன் ஆசிரியராக, எஸ்.எம். கோபாலரத்தினம் (கோபு) செய்தி ஆசிரியராக, அ.செ. முருகானந்தன் உதவி ஆசிரியராக, ம.வ. கானமயில் நாதன் உதவி ஆசிரியராக, இராஜ. அரியரத்தினம் உதவி ஆசிரியராக, எஸ். திருச்செல்வம் அலுவலக நிருபராக என, ஈழத் தமிழ் ஊடக வரலாற்றின் ஊடகச் சிகரங்களின் அரியா சனத்தின் சரியாசனத்தில் அமர்ந்து பணியாற்றும் வரத்தைப் பெற்ற ஒருவர்!

ஈழத்தின் ஊடக ஆசான்கள், ஊடக விண்ணர்கள் மூத்த ஊட கர்கள் என்று போற்றுதற்குரிய இ. சிவகுருநாதன், த. சபாரத் தினம், என். சபாரத்தினம், கே.ஜி. மகாதேவா, சசிபாரதி, எஸ்.எஸ். குகநாதன், இ. கந்தசாமி, மகாலிங்கசிவம், எஸ். பெருமாள், பா. அனந்தகிருஷ்ணன், ஐயா. சச்சிதானந்தம், வெற்றிவேலுப்பிள்ளை, சூரியகாந்தன், பெரி. சண்முகநாதன், கணேசலிங்கம் எனப் பலருடன் பணியாற்றவும் ஊடாடவும் கிடைத்த பெருமைக்குரியவர். (என் நினைவுக்கு, உடன் வந்த பெயர்களே அவை).

புலம்பெயர்ந்த பின்னரும் அவரது ஊடகப் பணி தமிழன் என்ற இதழாக ஆரம்பித்து லண்டன் புதினம் இதழாக மலர்ந்து அவரது ஊடக வாசனை லண்டன் முதல் ஐரோப்பிய நாடெங்கும் வீசியமை ஈழத் தமிழ் ஊடக வரலாற்றில் மாபெரும் சாதனையென்றே கொள்ளவேண்டும்!

இலங்கையில் தமிழன் என்றொரு பத்திரிகை வரவேண்டும் என்று தமக்கு ஓர் ஆசை என்று அடிக்கடி பேசும்போது சொல்வார்.

அவரது கனவு இப்போது நனவானதாக எண்ணுகிறேன்.

வல்வெட்டித்துறையிலிருந்து கப்பலோட்டிய தமிழர்கள் உரையாடலாக வரவேண்டும் அதாவது உரை ஓவியமாக வர வேண்டும் என்று நான் கேட்டபோது, அவருக்கும் அந்த விருப்பம் இருந்தது.

பல கலைஞர்களின் பங்கெடுப்புடன் அக்காலத்துக்குரிய கடல், புயல், போர்ச் சூழல் சார்ந்த உத்திகள் கலந்த, சிறந்த தொழில்நுட்ப வளத்துடன், அதனைக் கேட்கும் செவிப்புலச் சுவைஞர்களை அக்காலத்திற்கு அழைத்துச் செல்லும் வகையில், அது தயாரிக்கப்படவேண்டும்.

'தாய்வீடு' அந்தப் பணியைச் செய்தால் மிகச் சிறப்பான வர லாற்றுப் பணியாக அமையும் என்று நம்புகிறேன்.



varatharajan.m@thaiveedu.com



# பழகுவதற்கு இனிமையான ராஜகோபால்

## – நவஜோதி ஜோகரட்னம்

சமூகத்தின் இயக்கத்தோடு இணைந்து மொழியும் இயங்குகின்றது. சமூக விளைச்சல்களில் ஒன்றான இந்த மொழியை அரசியல், பண்பாடு மற்றும் சமூக வாழ்வியல் நடவடிக்கைகளுடன் இணைத்து பத்திரிகை மூலம் வெளிப்படுத்தி வந்தவர் ‘புதினம்’ ராஜகோபால் அவர்கள்.

ராஜகோபாலின் ‘புதினம்’ பத்திரிகை என்பது இலண்டன் போன்ற நாடுகளில் தமிழ் பத்திரிகை வளர்ச்சியில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய அம்சமாகும்.

இலவசமான பத்திரிகை விநியோகம் விளம்பரதாரர்களை மட்டுமே நம்பியிருக்கவேண்டிய நிலைமை. அச்சிட்டும் செலவுகளில் ஏற்படும் கஷ்டங்கள், பத்திரிகைகளை இலவசமாகக்கூட விநியோகிப்பதில் உள்ள இடர்பாடுகள், அத்தனைக்கும் மத்தியில் அயராது தளராது புதினம் பத்திரிகையைச் சிறப்பாக நடத்திய ராஜகோபால் அவர்களின் துணிச்சலையும் மன உறுதியையும் பாராட்டியாக வேண்டும்.

ராஜகோபால் அவர்கள் ஈழத்தில் பத்திரிகைத் துறையில் நீண்டகால அனுபவம் கொண்டவர். ஈழநாடு பத்திரிகையின் பின்னணியில் உருவான ராஜகோபால் அவர்கள், பின்னர் தினகரன் நாளேட்டிலும் ஆசிரியர் குழுவில் பங்காற்றி தனது பத்திரிகை அனுபவத்தைச் செழுமைப்படுத்திக் கொண்டவர். பத்திரிகைத் துறையே அவரது ஜீவநாடியாக இருந்திருக்கிறது.

இலண்டனுக்குப் புலம்பெயர்ந்த பின்னரும் பத்திரிகையாளராகவே தன்னை அடையாளம் கண்டுகொண்ட ராஜகோபால், நீண்ட காலமாகப் பத்திரிகைத் துறையில் கால் பதித்து நின்றமை விதந்துரைக்கப்பட வேண்டும் என்பதில் ஐயமில்லை.

பத்திரிகையாளராக மட்டுமன்றி ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் அனைவரோடும் நெருங்கிய அன்பும் பரிவும் கொண்ட ராஜகோபாலிடம் இருக்கும் இலக்கியப் பரிச்சயம் குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்றாகும். ஈழத்து எழுத்தாளர்கள் யாரின் பெயரைக் கூறினாலும் அவர் பரிச்சயம் கொள்ளாத எழுத்தாளர் யாருமே இல்லை என்றே கூறிவிடலாம்.

முற்போக்கு மூலவர்களில் ஒருவராகக் கருதப்படும் எஸ். அகஸ்தியரின் புதல்வியாகப் பிறந்தது என் பேறாகும். ஆனைக்கோட்டையிலும் கீரிமலையிலும் நாங்கள் வாழ்ந்த காலங்களில் எங்கள் இல்லத்திற்கு வந்து சென்ற அரசியல் பிரமுகர்களை, இலக்கிய ஆளுமைகளை, கலைஞர்களை

நானும் சந்தித்திருக்கிறேன் என்பது பெருமிதத்தை ஊட்டும் ஒன்றாகும்.

இலங்கை கொம்யூனிஸ்ட் தலைவராகத் திகழ்ந்த பீற்றர் கெனமன், வி. பொன்னம்பலம், தேசாபிமானி பி. ராமநாதன், சுகந்தன், சில்லையூர்ச் செல்வராஜன், டாக்டர் நந்தி, கலையரசு சொர்ணலிங்கம், பூந்தான் யோசேப்பு, முகத்தார் யேசுரட்னம், பி.ஏ. கந்தசாமி, கே. டானியல், டொமினிக் ஜீவா, செ. யோகநாதன், பெனடிக்பாலன், சி. வைத்தியலிங்கம், கவிஞர் முருகையன், வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்), காவலூர் ஜெகநாதன், கவிஞர் சேரன், கவிஞர் ஆதவன் இவர்கள் போன்ற பல ஆளமைகளும் மற்றும் பல மலையக, முஸ்லிம், சிங்கள நண்பர்களும் என் தந்தையாரோடு உரையாடுவதையும் விருந்துண்டு சென்றிருப்பதையும் நான் அறிவேன்.

அந்த எழுத்தாளர் குழுவில் 'பாமா' ராஜகோபால் என்று அறியப்பட்ட ராஜகோபால் அவர்களும் எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே வந்து பழகிச் சென்றிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

ஈழநாட்டில் அப்போது பணி புரிந்த கே.ஜி. மகாதேவாவும் ராஜகோபாலுடன் பலமுறை எங்கள் இல்லத்திற்கு வந்திருக்கிறார்.

இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நான் பயின்று கொண்டிருந்த போதுதான் அவரது மனைவி ராகினி ராஜகோபால் நடன ஆசிரியையாக முதல் நியமனம் பெற்று எங்கள் கல்லூரிக்கு வந்திருந்தார். நடன ஆசிரியைகள் பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெறுவது அதுவே முதல் தடவையாக இருந்திருக்கக்கூடும் என்று நம்புகிறேன்.

அவர் மிகுந்த ஆர்வத்தோடும். பேருழைப்போடும் நடனம் பயிற்றுவதில் காட்டிய அக்கறையை கல்லூரிக் காலங்களில் நான் பார்த்திருக்கிறேன். இளவாலை கன்னியர்மடக் கல்லூரியின் கலைவிழாக்களில் அவர் ஒழுங்கு செய்த நடன நிகழ்வுகள் மாணவர்களினதும் பெற்றோர்களினதும் பெரும் பாராட்டைப் பெற்றன.

அந்த நடன ஆசிரியை, தொடர்ந்தும் இலண்டன் வரை நடனக் கலையைப் பயிற்றுவித்து வருவது போற்றுதலுக்கு உரியதொன்றாகும்.

அவர் பங்கேற்றுச் செயற்படும் 'சாஸ்வதம்' போன்ற நிகழ்ச்சிகளில் நான் மேடை அறிவிப்பாளராகச் அவரைச் சந்தித்தமை பெருமிதம் தரும் விடயமாகும்.

இலண்டனில் வாழும் 33 தமிழ்ப் பெண்மணிகளின் நேர்காணல் தொகுப்பான 'மகரந்தச்சிதறல்', எனது தந்தை அகஸ்தியரின் இருபதாவது நினைவு தினத்தில் நூல் வடிவமாக்கியிருந்தேன்.

ராகினி ராஜகோபால்: மொழி கடந்த பரதப் பயிற்சி எனத் தலைப்பிட்டு அவரது நேர்காணலும் அந்நூலில் இடம் பெற்றிருந்தமையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இருவரது அறிமுகமும் பரீட்சயமும் எங்கள் வாழ்வில் மிக முக்கிய சந்திப்புகளில் ஒன்றாகும்.

இத்தகைய குடும்ப உறவுகள் எனது தந்தை பாரிஸில் வாழ்ந்த காலத்திலும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

என் தந்தைமீது, அவரது எழுத்தின்மீது, அவரது முற்போக்கு சிந்தனைகள் மீது ராஜகோபால் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார்.

ராஜகோபால் அவர்கள் எழுதி 1991-ஆம் ஆண்டு வெளியிட்டிருந்த 'வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்' என்ற அரிய நூலுக்கு என் தந்தை அணிந்துரை வாழங்கி அந்நூலுக்குச் சிறப்புச் சேர்த்தார்.

இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் என் தந்தை என்றுமே முன்னணியில் இருந்திருக்கிறார். எழுத்தாளர்களோடு உறவாடுவதும் சம்பாஷிப்பதும் அவருக்கு எப்போதும் சுகானுபவம் தருவதாகவே இருந்திருக்கிறது.

இலண்டனில் மீண்டும் ராஜகோபால் அவர்களை நான் சந்தித்ததிலிருந்து ஒரு குடும்ப உறவுபோல் அந்த உறவு துளிர்த்தது. அவரது புதினம் இதழ்களில் நான் எழுதிய ஆக்கங்களை அவர் ஆர்வத்தோடு வரவேற்றார்.

எனது தந்தையின் நினைவு தினங்களை நினைவு கூர்வதோடு மட்டுமன்றி, இலண்டனில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள், சமூகக் கூட்டங்கள் போன்றன பற்றி நான் எழுதிய கட்டுரைகளை அவர் அக்கறையோடு பிரசுரித்து எனக்கு உற்சாகம் தந்தார் என்பதை நான் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

அத்தோடு இலண்டன் புதினம் பத்திரிகையின் 20-ஆவது நிறைவு (2016)- இல் இடம்பெற்ற சிறுகதைப் போட்டியில் 'சாதலும் புதுவதன்று' என்ற எனது சிறுகதை பரிசு பெற்றமையையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

ராஜகோபாலின் எழுத்துத் திறமை தனித்துவமானது. பழகுவதற்கு இனிமையானவர்.

இலண்டனில் சரித்திரம் படைத்திருக்கும் அவர் பணி நீடிக்க மரியாதையோடு வாழ்த்துகின்றேன்.



navajothy@thaiveedu.com

# அரிது! அரிது!! அண்ணாவை போன்றோரை காண்பது அரிது!!!

**- ஆர். தியாகராஜன்**



அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது...

இது ஔவையின் வாக்கு.

மானிடராய் பிறந்த நாம் ஔவையின் வாக்குப்படி மன நலத்துடனும், உடல் நலத்துடனும் வளமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஔவை பாட்டி இப்போது நம்மிடையே இருந்தால்....
குறையின்றி வாழ்ந்தாலும்,
பொருளீட்டி... பொருளாதார நிறைவு பெற்று....
கடன் இன்றி வாழ்தல் அதனிலும் அரிதென்று பாடியிருப்பாள்.

நாடும், வீடும், குடும்பமும், தனி மனிதர்களும், கடன் என்னும் அசுரனின் பிடியில் சிக்கிக் கொண்டு தத்தளிப்பதை உலகெங்கும் காணலாம். Credit card என்னும் கடன் அட்டை இல்லாத மனிதரே உலகில் இல்லை என்ற தற்போதைய பொருளாதார நிலையே இதற்கு சான்று.

இப்படிப்பட்ட தற்போதைய உலக சூழலில் ஒருவர் கடனின்றி வாழ முடியுமா என்பது மிகவும் அரிதானதே.

அவ்வாறு காண்பதற்கு அரிதான மனிதர் தான் ‘அண்ணா’ என்று அன்போடு நான் அழைக்கும் லண்டன் புதினம் பத்திரிகையின் ஆசிரியர் திரு. E.K. ராஜகோபால் அவர்கள்.

கடனற்ற கண்ணியமான பெருவாழ்வு வாழ்ந்து வரும் நல்ல மனிதர். பிறர் பொருள் மீது சிறிதும் நாட்டம் கொள்ளாதவர். சிக்கனமான சீரிய வாழ்க்கை வாழ்பவர். கடன் பெற்று ஆடம்பரம் செய்வதை ஒருபோதும் விரும்பாதவர். எல்லோருக்கும் தாராளமாக உதவும் நல்ல மனம் கொண்டவர். நல்ல குருவாக எனக்கு வழிகாட்டுபவர்.

சில விஷயங்களை, தகவல்களை, தரவுகளை சான்றுகளுடன் கூறுவது நம்பிக்கையூட்டும்.

கடந்த 2016-ஆம் ஆண்டு லண்டன் மாநகரில் சிறப்பாக நடைபெற்ற 'புதினம்' பத்திரிகையின் இருபதாம் ஆண்டு விழா நிகழ்ச்சியில் வெளியிட்ட 'புதினம் இளமை இருபது' சிறப்பு மலரில் ஆசிரியர் திரு. E.K. ராஜகோபால் அவர் களைப் பற்றி நான் எழுதிய 'குருவாக வந்தவர்' என்று தலைப் பிட்ட கட்டுரையை ஆதார ஆவணமாக உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

குருவாக வந்தவர்...

சமீபமாக நான் வாசித்த தத்துவப் புத்தகத்தில், கேள்வி பதில் பகுதியில், 'ஒரு நல்ல குரு எப்படிக் கிடைப்பார்? அவரை எப்படித் தேடிக் கண்டுபிடிப்பது?' என்ற கேள்விக்கு அந்த ஞானி அளித்த பதில் 'குருவை நீங்கள் தேடிப் போக வேண்டியதில்லை. அவரே உங்களைத் தேடி வருவார். அதற்கான விண்ணப்பமும், பிரார்த்தனையும் மட்டுமே நீங்கள் செய்ய வேண்டியது.'

மேலே குறிப்பிட்ட பதிலுடன், 2002-ஆம் ஆண்டில், லண்டனில் கவுன்சிலோவில் என் வாழ்வில் நடந்த ஒரு சந் திப்புக் குறித்து மிகவும் ஆச்சரியத்துடன் அசை போடக்கூடி யதாக இருந்தது.

பதினான்கு வருடங்கள் கடந்து, அந்த உறவு மேலும் மேலும் செழுமையாகிக் கொண்டே செல்கிறது.

ஆம், 2002-ஆம் ஆண்டு, லண்டன் கவுன்சிலோவில், STAINES ROAD-இல், ஒரு விடுதியில் தங்கி இருந்தபோது, ஒரு இனிய மாலைப் பொழுதில் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

என்னைத் தேடி வந்தார், அந்த மனிதர். அவர்தான் அன்புக் குரிய ராஜகோபால் மிகவும் ஆச்சரியமான சந்திப்பு. சந் திப்பின் முன், தொலைபேசியில் உரையாடிய போது, அவர் ஒரு பிரபலமானவர் என்றோ, பத்திரிகை ஆசிரியர் என்றோ எந்த விதமான 'பந்தா'வுமின்றி மிகவும் எளிமையுடன் உரை யாடினார்.

அந்தக் காலகட்டத்தில், லண்டனில் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருந்த ஒரே தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த அவர், மக்கள் மத்தியிலும் மிகவும் பிரபலமாகவும், உயர்வாகவும் மதிக்கப்பட்டார்.

அப்படிப்பட்ட ஒரு மனிதர் நான் தொலைபேசியில் அழைத்துத் தொடர்பு கொண்டபோது, ஓரிரண்டு வார்த்தை களிலே மிகவும் எளிமையாக அந்த உரையாடலை முடி வுக்குக் கொண்டு வந்தார்.

'நாளை உங்களைச் சிந்திக்கிறேன்' என்பதோடு முடித்து விட்டார்.

எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பே அளிக்கவில்லை. மறுநாள், பகல் 3 மணி 'நான் ராஜகோபால் கவுன்சிலோ ஸ்டேசனுக்கு வெளியே நிற்கிறேன்' என்ற அவரது தொலைபேசிச் செய்தி, அடுத்த 10 நிமிடங்களில் நேரடிச் சந்திப்பு. முதல் சந்திப் பிலேயே மிகவும் அன்புடன், அந்நியோன்யமாக உரையாட ஆரம்பித்தார். நான் அவரைவிட வயதில் இளையவராக இருந்தாலும், மிகவும் நீண்ட நாள் பழகியவர் போல, நெருக் கமாக, வயது வித்தியாசம் பாராது, தோழமையுடன் பேச ஆரம்பித்தார். எனது விடுதிக்கு மூன்று நான்கு நண்பர்கள் வந்தார்கள். அவர்கள் அனைவரும் ராஜகோபால் மீது காட்டிய மரியாதையும், அன்பும், பரிவும் மேலும் மேலும் யோசிக்கவும், ஆச்சரியப்படவும் வைத்தது.

அன்று தொடங்கிய எனது ஆச்சரியம் இதுவரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அவருடைய விஸ்வரூபம் யாரும் அள விட்டுக் காணமுடியாதது. அவருடைய எளிமையான 'விஸ்வ ரூபமே' பெரும்பாலோருக்குக் காணக் கிடைப்பது.

பதினான்கு வருடங்கள் என்பது இராமாயண பெரும் காப்பி யத்தின் முக்கிய காலகட்டம் அதுபோல, 2002 தொடக்கம் 2016 வரை பதினான்கு ஆண்டுகள் என்னுடைய வாழ்விலும் முக்கிய காலகட்டம்.

ராஜகோபால் அவர்களை 'சார்' என்று நான் அழைத்த போது, அவர் மிகவும் தன்னை அவ்வாறு பெருமைப்படுத்தி அழை க்கத் தேவையில்லை, அண்ணா என்று அழைத்தாலே தனக்குப் பெரும் மகிழ்ச்சி தரும் என்று கேட்டுக் கொண்டார். அன்று தொடக்கம் 'அண்ணா' என்று அழைக்கத் தொடங் கியது இன்றுவரை தொடர்கிறது.

குடும்பத்தில் மூத்த மகனான அவருக்குக் கீழ் இளைய சகோ தரர்கள், மற்றும் மனைவி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவருமே என்னை அன்புடன் ஒரு குடும்ப உறுப்பினராக ஏற்றுக்கொண்டார்கள்.

அவரது குடும்ப உறுப்பினர் அனைவர் மீதும் 'அண்ணா' கொண்டுள்ள அன்பும், அக்கறையும், பொறுப்பும், பாசமும் மேலும் அண்ணா மீது காட்டும் மதிப்பும், மரியாதையுமே என்னையும் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு ஒரு முக்கிய காரணம் எனலாம். தொடர்ந்தும் நடந்து கொண்டு வரும் எத்தனையோ விஷயங்கள் அவர்மீது வைத்திருக்கும் அன் பிற்கும், மரியாதைக்கும் மேலும் மேலும் உயிர்ப்பூட்டிக் கொண்டே செல்கின்றன.

எனக்கு தனிமனித வழிபாடோ, துதி பாடுவதோ உடன்பாடு இல்லாத விஷயம். இருப்பினும், ஆசிரியர்கள் நல்ல விஷயங் களைக் கற்றுத் தரும் குருவானவர்கள், நாம் போற்றி மதிப்ப ளிக்க வேண்டியது நல்லது என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன்.

அண்ணாவைச் சந்தித்த முதல் சந்திப்பிலேயே என்னுடைய வீட்டிலேயே வந்து தங்கலாம் என்று அன்புக் கட்டளை யிட்டார். அவருடைய அன்பை ஏற்று கடந்த பதினான்கு வரு டங்களாக ரூட்டிங்கில் அவரது இல்லத்தில் இருந்து வரும் நான் இந்த வாழ்க்கையை ஒரு குருகுல வாசமாகவே கழித்து வருகிறேன்.

ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு மணித்தியாலமும், ஒவ்வொரு நாளும் எண்ணற்ற வாழ்க்கை அனுபவங்களை அவர் மூலம் படித்துக் கொண்டே வருகிறேன்.

அவர் எதையும் சொல்லிக் கொடுப்பதில்லை. அவர் நடந்து கொள்ளும் விதம், வாழும் வாழ்க்கையே ஒரு பாடம். ஏதாவது சந்தேகங்கள் கேட்டால் மட்டும் விளக்கம் சொல்லுவார். இவ்வுலகில், பலரும் தங்களுக்குத் தெரிந்த, தெரியாத விஷயங்கள் குறித்து தங்களுடைய மேதாவித்தனத்தை பறைசாற்றும் முகமாக, எந்த நேரமும் ஏதாவது ஒன்றைப் பேசிக் கொண்டும், மறுத்துக் கொண்டும், உளறிக் கொண்டும், பிதற்றிக் கொண்டும் இருப்பதையும் காண்கிறோம்.

இதுதான் உலகநடப்பு. ஆனால் இந்தச் சூழலில், அண்ணா, பல கடுமையான பிரச்சினைகளுக்கு எளிமையாகத் தீர்வுகளைச் சொல்லிவிட்டுப் போய்விடுவார். அவரின் நீண்ட அனுபவ அடிப்படையிலேயே அந்தத் தீர்வுப் பதில் வரும்.

கடந்த 14 வருடங்களாக 'புதினம்' பத்திரிகையை தொடர்ந்து வாசித்து வரும் ஒரு வாசகன் என்ற முறையில், புதினம் ஒவ்வொரு இதழிலும் ஒரு வார்த்தை கூட அர்த்தமில்லாமல் அச்சிடப்படவில்லை என்பதை உறுதியாக என்னால் சொல்ல முடியும்.

'புதினம்' ஒவ்வொரு இதழையும் அவர் மிகுந்த ஈடுபாட்டுடன் ஒரு கைதேர்ந்த சிற்பி சிற்பத்தை செதுக்குவது போல, அவர் மிகுந்த நுணுக்கத்துடன் உருவாக்குவதை அருகில் இருந்து, கண்டு பிரமித்திருக்கிறேன்.

'புதினம்' பத்திரிகையின் தலைப்புச் செய்தி எந்தப் பத்திரிகையிலும் இல்லாத தனித்துவம், அது அண்ணாவின் தூரப் பார்வை.

ஒரு ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாக விளங்குவது ஊடகத்துறை அதைச் செவ்வனவே செய்கிறது. 'புதினம்' அண்ணாவின் அர்ப்பணிப்பின் முழுமையே புதினத்தின் வெற்றியின் இரகசியம்.

பிரபலமான மனிதர்களுடன் தாராளமாகவும், நெருக்கமாகவும் பழகக் கூடிய எண்ணற்ற வாய்ப்புகள் எனக்குக் கிட்டி உள்ளது.

பொதுவாக, ஒரு மனிதர் ஏதாவது ஒரு துறையில் மிகவும் உயர்வாக, பிரபலமாக இருந்தால், அவர்களின் ஏனைய விஷயங்களில் 'நேரமின்மை' மற்றும் ஈடுபாடு குறைவு போன்ற காரணத்தினால், பிரகாசிக்கமாட்டார்கள், நான் அறிந்த பிரபல அரசியல்வாதிகள், புகழ் பெற்ற நடிகர்கள், தலை சிறந்த எழுத்தாளர்கள்கூட தங்களது குடும்ப வாழ்க்கையில் பெரும் நெருக்கடிகளையும் தோல்வியையும் சந்தித்ததை அறிவோம்.

'அண்ணா' பத்திரிகைத் துறையில் பிரகாசித்ததைவிட அவர் குடும்பத்தில் மிகவும் பிரகாசமாக இருந்து கொண்டு வருகிறார் என்பதை நான் நேரில் பார்த்தும் கேட்டும் ஆச்சரியத்துடன் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

குடும்பத்தில் மூத்த உறுப்பினரான அண்ணாவின் தாயார் தனது 90-ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார். அவரது தாயார் முதல், இளைய உறுப்பினர் ஏழு வயது நிரம்பிய அவரது பேரக் குழந்தை சுருதி வரை மற்றும் சகோதர சகோதரிகள், அவர்களது சந்ததியினரும் அண்ணாவிடம் காட்டும் ஈடுபாடும், அன்பும், மரியாதையும் மிகவும் பிரமிப்பான விஷயம்.






அண்ணாவின் 20-வது வயதில் தந்தையை இழந்த போது, அவரது ஐந்து வயதுக் கடைசிச் சகோதரி உட்பட ஐந்து சகோதர சகோதரிகளையும் மிகவும் பொறுப்புடன் வளர்த்து இன்று அனைவருமே உயர்ந்த நிலையில் நிறைவாக வாழும் வாழ்க்கையே அவரது குடும்பப் பொறுப்பை உணர்வதற்குச் சாட்சிகளாக விளங்குகிறது.

'நான், என் மனைவி, என் பிள்ளைகள்' என்று சுருங்கி வாழும் கலியுகத்தில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கு உதாரணமாக அனைவரையும் சமமாகப் பாவித்து இரத்த சொந்த பந்தங்கள் மட்டும் இல்லாது என்னையும் உடன் பிறந்த சகோதரனாக நினைத்து சகல வளர்ச்சியிலும் உறுது ணையாக இருப்பதே அவருடைய அக்கறை மிகுந்த பாச உணர்வுக்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம்.

மேலும் ஒரு சம்பவம் என் மனதில் நிழலாடுகிறது. அதனைப் பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சில வருடங்களுக்கு முன், கனடாவில், ஸ்காபுளோவில் வசிக்கும் அவரது கடைசித் தங்கையின் 25-வது வருட திருமண வெள்ளி விழா நிகழ்ச்சி அழகான மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் லண்டனிலி ருந்து சகோதர சகோதரிகள் சென்று சிறப்பித்தனர். நிகழ்வின் உச்சகட்டமாக விழா மேடையிலேயே கடைசித் தங்கை தங்களுடைய வாழ்வின் அனைத்து உயர்வுக்கும் காரணமாக எனது அண்ணா என்று கண்ணீர் மல்கக் கூறி, காலில் விழுந்தது அங்கு கூடியிருந்த அனைத்து மனங்க ளையும் நெகிழ வைத்துவிட்டது. குடும்பத்தின் உயர்வுக்காக ஈடுபாட்டுடன் அயராது உழைத்தமைக்கு இதைவிட வேறு என்ன நற்சான்றிதழ் கிடைக்க முடியும்? இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நான் அவரை அண்ணா என்று அழைப்பது மிகுந்த அர்த்தமுள்ளதாகப் பெருமிதமாகக் கருதுகிறேன்.

அண்ணாவின் வெளிவட்டார பழக்க வழக்கங்கள், நட்பு விஷ யங்கள், நண்பர்கள் வலயம் விரிவானது; மிகவும் பெரியது.

அவரின் ஒரு வார்த்தைக்கே பெரும் மதிப்புக் கொடுத்து, அவரது நண்பர்கள் பலரும் பல நாடுகளுக்கு நான் சென்றபோது என்னை அவர்கள் அன்போடும், உயர் மதிப் போடும் கவனித்துக் கொண்ட அனுபவங்கள் ஏராளம்.

லண்டனிலுள்ள தமிழர்களால் அண்ணா எப்படி மதிக்கப் பட்டார் என்பதற்கு ஒரு சம்பவம்: ஒரு நாள் மாலைப் பொழுதில் கொலியேஸ்வூட் வரை சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். ஒரு தமிழரது வீடியோ கடையைக் கடக்கிறபோது, அதன் உரிமையாளர் 'டாக்டர்' என்று அன்போடு அழைத்தார். அங்கு மாலை நேரத்தில், பிர பலமான மனிதர்கள் அக்கடையில் கூடி பேசி மகிழ்வது வழக்கம்.

கடையின் உரிமையாளர் என்னை அங்கிருந்த தனது நண்பர் களுக்கு பின்வருமாறு அறிமுகப்படுத்தினார்.

'இவர் டாக்டர் தியாகராஜன். தமிழ் நாட்டிலிருந்து இங்கு அடிக்கடி வருவார். இங்கு 'புதினம்' ராஜகோபால் வீட்டில் தங் கியிருக்கிறார். ராஜகோபால் வீட்டில் தங்கியிருக்கிறார் என்றால், இவரைப் பற்றிப் புரிந்து கொள்ளுங்கள்' அந்த நொடி எனக்கு அண்ணாவின் நட்பு வட்டாரத்தில் அவருக்கு இருந்த உயர்ந்த மதிப்பைத் தெளிவாக உணரமுடிந்தது.

அண்ணா மட்டுமன்றி, அவரது மனைவி மிகப் பிரபலமான நடன ஆசிரியை. நான் அவர்களை குருவுக்கு ஏற்ற குரு பத்தி னியாக பலமுறை பார்த்து அதிசயித்து இருக்கிறேன். இருவரும் உழைப்பில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்க ளல்ல. அவர்கள் நேரம் காலம் பார்க்காத கடும் உழைப்பை மேற்கொண்டு, இன்று லண்டன் தமிழர்கள் மத்தியில் ஒப்புயர் வற்ற உயரத்தை எட்டியிருக்கிறார்கள்.

அவர்கள் மகள் ஷர்மினி கண்ணன் நடன ஆசிரியையாகவும் குடும்பத் தலைவியாகவும், சிறந்த முறையில் மூன்று பிள்ளை களுடன் முன்னேறிக்கொண்டு வருகிறார்.

மகன் ஷியாம்ராஜ் சிறந்த நிர்வாகி. ஒரு அரச பாடசாலையில் பணியாற்றுகிறார். பிரதமர் வாசஸ்தலமான 10. Downing Street, அனைவரும் லண்டனில் அறிந்த ஒரு இடம்: 38, Moffat Road, அதற்கு இணையான என்னை மேலும் செம்மைப்ப டுத்திக் கொள்ள ஆதரவாக இருக்கும் குருகுலம், அங்கு குருவாக அண்ணா.

2016-ஆம் ஆண்டிற்கு பிறகு, கொரோனா பேரிடர், உலக பொருளாதார வீழ்ச்சி, எதிர்காலம் குறித்த பெரும் அச்சம்... இவ்வாறு ஏராளமான நெருக்கடிகளை கடந்து 2024-ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றோம். காலம் எவ்வளவோ விஷ யங்களை நமக்கு கற்றுத் தருகின்றது. ஒவ்வொரு நாளும் இயற்கையும், நடைமுறை விஷயங்களும், நம்மோடு வாழும் மனிதர்களும் நமக்கு எண்ணற்ற விஷயங்களை கற்றுக் கொடுக்கின்றார்கள். சக மனிதர்களிடம் அரிதாக நாம் பெறும் வாழ்வியல் அனுபவங்கள் நமக்கு பெரும் நன்மைகளை பெற்றுத் தருகின்றது.

இந்த வகையில் நல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையும் 'அண்ணா' அவர்களுடன் 2002-ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 22 ஆண்டுகள் தொடர்ச்சியாக பயணித்துக் கொண்டி ருக்கும் பேரனுபவம் எனக்கு கிட்டியது இறைவன் திருவருள். டிசம்பர் 25 கிறிஸ்து அவதரித்த, கிறிஸ்துமஸ் நன்னாளில் பிறந்த ராஜகோபால் அண்ணா அவர்களின் வாழ்க்கை நல்ல நலமுடனும், மன மகிழ்வுடன், நிறைவுடனும் நீண்ட நெடுங் காலம் தொடர பிரார்த்திக்கின்றேன்.

***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்***
***தெய்வத்துள் வைக்கப் படும்.***

என்னுடைய இதய மலர்களை அண்ணாவுக்குக் காணிக்கை யாக்குகிறேன்.



r.thyagarajan@thaiveedu.com



# நினைவுகளின் பாதையில்...

**- ஏ.கே. ராஜகோபால்**

எனக்கு வேறு வழி தெரியவில்லை. 1985-ஆம் ஆண்டு மே மாதம். முதல் வாரம் என்று நினைக்கிறேன்.

அரசின் கைப்பொம்மையாக இயங்கிக் கொண்டிருந்த கொழும்பு 'லேக்ஹவுஸ்' நிறுவனத்திலிருந்து வெளிவந்த 'தினகரன்' பத்திரிகை உதவி ஆசிரியர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு, மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி வந்து 'ஈழநாடு'-வில் சேர்ந்து கொண்ட காலம்.

என்னைப் பெற்று வளர்த்த வல்வெட்டிக்கு சிலகாலம் போக முடியாத சூழ்நிலை.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில், ஆறுமாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர், விசாரணை என்ற பெயரில் கற்பழிக்கப் பட்டாள். எனது பெயரோடு அச்சம்பவத்தை செய்திக் கட்டு ரையாக 'ஈழநாடு' நாளிதழில் எழுதினேன். ராணுவ உயர் அதி காரியின் பார்வைக்கு இக்கட்டுரை 'எட்டப்பர்'களினால் கொண்டுவரப்பட்டது. அவர் 'ஈழநாடு' அலுவலகத்துக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அப்படி எதுவும் நடக் கவில்லை என்று மிரட்டினார்.

இதன் பின்னர் அலுவலகத்துக்கு வந்த அதிகாரி, பிரதம ஆசிரியரைச் சந்தித்து, விசாரித்து உள்ளார். எனது முகவ ரியைக் கேட்டிருக்கிறார். இதன் பின்னர் எனது மனைவியின் ஊரான மானிப்பாயில், உறவினர் ஒருவரது அறையில் தங்கி யிருந்த இல்லத்துக்கு ராணுவம் சென்றிருக்கிறது. நாங்கள் எவரும் அங்கிருக்கவில்லை. அந்த வீட்டில் எங்கள் அறை யையும், மேலும் அவ்வீட்டின் மற்றைய அறைகளையும் அக்குவேறு ஆணி வேறாகச் சோதனை செய்தது இராணுவம்.

இதன் பிறகு அலுவலகத்துக்கு போவதைத் தவிர்த்துக் கொண்டு, சிலநாட்கள் எனது தாயாரின் பூர்வீக இல்லமான நவாலி போன்ற இடங்களில் மறைந்து வாழ்ந்தோம்.

வல்வெட்டி எனது ஊர். அது வல்வெட்டித்துறைக்கு அடுத்த ஊர். எங்கள் தலைவனின் சொந்த மண் என்பதால், ராணு வத்தின் அட்டகாசம் கட்டுக்கடங்காத காலம்.

என் மனைவியையும் கைக்குழந்தைகளையும் பார்த்தேன். அவர்கள் மானத்தோடு அந்த மண்ணில் வாழ முடியாது என்ற முடிவை எனது மனதைக் கல்லாக்கிக்கொண்டு எடுத்தேன்.

என் உயிரான அம்மாவைப் பார்க்க வேண்டும், அவர்களைப் பராமரித்துக் கொண்டிருந்த சகோதரிகளைப் பார்க்க வேண்டும்.

பிறந்து, தவழ்ந்து, அளைந்து, விளையாடி மகிழ்ந்த சொந்த மண்ணில் உறவுகள், உற்றவர்களுடன் உருத்தோடு பழகிய அந்தச் சுகங்களை எல்லாம் நினைத்துப் பார்த்தபோது அழுகைதான் வந்தது.

நான்கு வயதுச் ஷர்மினியையும், ஒரு வயது ஷியாமையும் நாங்கள் இருவரும் தூக்கிக்கொண்டு வல்வெட்டிக்கு பஸ்ஸில் போனோம். அழகான அந்தக் கிராமம் சின்னாபின்னமாக்கப் பட்டிருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்னர் சிங்கள ராணு வத்தின் வெறியாட்டத்தினால், வீடுகளைச் சுற்றி அடைக்கப் பட்டிருந்த வேலிகள் எரிக்கப்பட்டு, கருகிக் கிடந்த பசுமையான மரங்களின் கோலங்கள் எம்மைப் பதறவைத்தது. எங்கள் வீட் டிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள வல்வெட்டித்துறை - ஊரணி ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள சுடலையில் அமைந்த சிறு மண்டபத்துக்குள், முதல் நாள் உயிரோடு

பிடித்த எங்கள் சொந்தங்கள் துடிக்கத் துடிக்கக் கொன்றொழிக்கப்பட்ட செய்தி இருதயத்தைப் பிழந்தது. மாபெரும் தலைவன் பிறந்த மண்ணின் வல்வெட்டித்துறைச் சந்தியில், வரிசையாக வைத்துக் கொல்லப்பட்ட கொடூரத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

என் குழந்தைகளை இறுக்கமாக அணைத்துக் கொண்டேன். எனது மனைவியைப் பார்த்தேன். இவர்களை இந்தக் கொடூரர்களுடன் வாழ என்னால் அனுமதிக்க முடியாது.

எங்கள் அம்மாவையும், சகோதரிகளையும் கட்டி அணைத்து கண்ணீர் விட்டபடியே, பிரிய மனமில்லாமல் பிரிந்தோம்.

இள வயதில் என் தந்தையைப் பிரிந்து, இளமையான அம்மாவுக்காகவும், உடன்பிறப்புகளுக்காகவும் சந்தித்த துயரங்களையும், என் தந்தை எங்களுக்குத் தந்த வீடு, காணி எல்லாவற்றையும் விட்டு, உயிரான அம்மா, உடன்பிறப்புகளைப் பிரிந்து, ஏதோ கையிலிருந்த உடுப்புகளோடு யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை பஸ்ஸில் போனோம். அப்போது வவுனியா வரை ரயில் சேவை இல்லை. எங்கள் பஸ்ஸைப் பணயமாக வைத்து பின்னால் ராணுவ டிரக்குகள் வர, வழியில் பஸ்ஸை மறித்து, எங்களை எல்லாம் இறக்கி சோதனை செய்ய, சின்னஞ்சிறு குழந்தைகளோடு அனுபவித்தவை எல்லாம் இன்றும் பயங்கரக் கனவுகளாக வந்து போகின்றன.

வேகமாகக் காட்சிகள் மாறுகின்றன.

கொழும்பிலிருந்து, விசா இல்லாமல் நாங்கள் நால்வரும். விமானத்தில் பயணம் செய்து, லண்டன் 'கீத்றோ' விமான நிலையத்தில் இறங்கிய எங்களை 'காமன்ஸ்வெல்த்' அகதிகள் முகாமில் 20 நாட்கள் வைத்திருந்தார்கள். எங்களை உறவினர்கள் யாரும் வந்து தமது சொந்தப் பிணையில் கூட்டிச் செல்வதை நான் விரும்பவில்லை. மூன்று தடவைகள் விமான நிலையத்துக்கு கூட்டிச் சென்றார்கள். என்னையும், எனது மனைவியையும் தனித்தனியாக அதிகாரிகள் விசாரித்தார்கள். இரண்டொரு நாளில் நாங்கள் தங்கியிருந்த முகாம் அதிகாரி, எங்களை அழைத்து அரசியல் தஞ்சம் அளித்திருப்பதைத் தெரிவித்து, அதனை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் எம்மிடம் தந்தார்கள். அன்று முதல் லண்டன் தெருக்களில் சுதந்திரமாக உலவ அனுமதித்தது பிரிட்டிஷ் அரசு. இதனைப் பத்திரிகையாளன் ஒருவனுக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகவே கருதினேன்.

லண்டனுக்குள் அகதியாக தஞ்சம் அடைந்து, முதல் ஓராண்டும், சுறுசுறுப்பாக என்னை இயங்க வைத்த பத்திரிகைத் தொழிலை விட்டு, அந்நிய தேசத்தில், தாயையும், தாய் மண்ணையும், உறவுகளையும், நெருங்கிப் பழகிய நண்பர்களையும் நினைத்து மௌனமாக அழுதிருக்கிறேன். விரக்தியின் எல்லைக்கே போயிருக்கிறேன். என் மனைவி எனக்கு ஆறுதலாக இருந்திருக்கிறாள்.

கொழும்பு 'தினகரன்' பத்திரிகையில் எனக்கு பிரதம ஆசிரியராகவிருந்த அமரர் ஆர். சிவகுருநாதன் லண்டனுக்குப் போகிறதைப் பற்றி போனில் அவசரமாகச் சொன்னபோது, 'இவ்வளவு நாளும் நீ ஒரு 'ஜெர்னலிஸ்ட்' என்று மதிக்கப் பட்டாய்! டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன்ற் என்பதுபோல, இதுவும் ஒரு துறையில் பட்டம் பெறாமலே ஒரு தகுதியை பெற்றிருக்கிறாய். லண்டனுக்குப் போய் என்ன செய்யப் போகிறாய்? கோப்பை கழுவித்தான் பிழைக்க வேண்டும்!' என்றார். 'நான் என் மனைவி பிள்ளைகளின் உயிரைக் காக்கப் போகிறேன். அங்கு போய்ப் பார்ப்போம்' என்று அவருக்குப் பதில் சொன்னாலும், லண்டனில் அகதி அந்தஸ்துக் கிடைத்து, அரசியல் தஞ்சம் பெற்ற பின்னரும் அவரது வார்த்தைகள் சவாலாக அமைந்தன.

எங்கள் உறவுகளும் லண்டனுக்கு அகதிகளாக வந்து குவியத் தொடங்கினார்கள்.

பணம் சம்பாதிப்பதற்கு சீமையிலே பல வழிகள் இருந்தாலும், பத்திரிகைத் தொழில் என் முழு நேர வாழ்வாகி விட்டது. அது என்னோடு இரண்டறக் கலந்து, இதயத்தோடு வாழ்கிறது.

தாயகத்தில் இருபது வருடங்கள்... பள்ளியில் இருந்து நேராக 'ஈழநாடு'-க்குள் நுழைந்தேன். பதினெட்டு வயதுகூட ஆகாத வயது அது. இங்கும் முப்பத்தெட்டு வருடங்களைக் கழித்து விட்டேன்.

'தமிழன்' சில நல்ல இதயங்களை அணைத்து, ஆசிரியராக இருந்து சில காலம் லண்டனில் மாதமிருமுறை வெளியிட்டு, வாசகர்களின் அபிமானத்தை பெற்றேன். மிகுந்த ஆதரவு பெற்றாலும், தொடர்ந்து என்னால் நடத்த முடியாமல் போய் விட்டது! கூட்டு முயற்சி எனக்குச் சரிவரமாட்டாது என்ற பாடத்தை புகட்டியதால், புதிய பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கிறபோது தனியொருவனாக இயங்குவதென்ற முடிவை எனக்குள்ளே எடுத்துக் கொண்டேன். தமிழீழ விடுதலையை நோக்கிய மாபெரும் தலைவனின் லட்சியப் பயணத்துக்கு என்னாலான பங்களிப்பை வழங்க வேண்டுமென்ற நோக்கத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கும், முரண்பாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கும் தயாரானேன்.

'ஈழகேசரி' பத்திரிகை மாதமிருமுறை முழுக்க முழுக்க என் உழைப்பிலே, என் பத்திரிகைக்கான கொள்கைகளுடன் ஓரிரு நண்பர்களின் ஆதரவோடு பவனிவரத் தொடங்கியது.

'ஈழகேசரி'-யின் முதல் இதழ் 15.01.1993 அன்று வெளியானது. 32 பக்கத்தில், இப்பத்திரிகை வந்தது.

'இது உங்கள் பத்திரிகை' என்ற தலைப்பில், ஆசிரிய தலையங்கம் எழுதியிருந்தேன். அது வருமாறு:

சொந்தங்களோடும் பந்தங்களோடும் வாழ்ந்த அந்தத் தாய் மண்ணை உலக அரங்கில் பெருமைப்படுத்த, அம்மண்ணுக்கு சமர்ப்பணம் 'ஈழகேசரி'.

நாற்பதாம், ஐம்பதாம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம் - சுண்ணாகம் திருமகள் அழுத்தக உரிமையாளர் நா. பொன்னையா பிரசுரித்த வார இதழ் அது.

வயது முதிர்ந்தவர்களுக்குத் தெரியும் அப்பத்திரிகை ஏற்படுத்திய தாக்கம்.

**Covid 19 தொற்று இவ்வுலகில்**
**பலரது வாழ்க்கையையும், தொழில்களையும் புரட்டிப்போட்டுவிட்டது.**
**நானும் அதற்கு விதிவிலக்கல்ல.**
**அடுத்தது என்ன? சூழல்கள் கனிந்து வருமா? காலம் பதில் சொல்லும்!**

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கையில் புதிய எழுத்தாளர் பரம்பரை ஒன்றை அது உருவாக்கியது. ஈழத் தமிழகத்தில் தமிழ் உணர்வை ஏற்படுத்தியது.

அதே வழியில் செல்வது எமது நோக்கம்; திட்டம். அதேவேளை, ஈழகேசரி காலத்துக்கும், இன்றைய காலகட்டத்துக்கும் உள்ள வேறுபாடுகளையும் கவனத்தில் எடுப்போம்.

அன்றைய தேவை இன, இலக்கிய, கலை உணர்வுகளைத் தட்டி எழுப்புவது. இன்று அதே உணர்வுகளைக் கொண்ட பரம்பரையினர் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர்.

அந்த உலகத் தமிழருக்கும் ஈழத்துக்கும் பாலம் அமைக்க வேண்டியது 'ஈழகேசரி'-யின் தலையாய பணி. அடுத்தது வெவ்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களிடையே உணர்வுப் பாலம் அமைப்பது.

வீடு நெருப்புப் பிடித்து எரியும் வேளையில் வீட்டுக்கு நெருப்பு வைத்தது யார்? நண்பரா பகைவரா? சரியா பிழையா? என்பது போன்ற ஆராய்ச்சியில் 'ஈழகேசரி' தனது காலத்தை வீணாகக் கழிக்காது. வேகமாகத் தண்ணீர் கொண்டு ஊற்றி, நெருப்பை அணைக்க முற்படும். கிராமத்தவரோடும் ஊர் மக்களோடும் வாலிப வீரர்களோடும், 'ஈழகேசரி' சேர்ந்து கொண்டு தன் பணியினை ஆற்றத் தயங்காது. 'ஊர் ஓடினால் ஒத்து ஓடு; ஒருவன் ஓடினால் கேட்டு ஓடு' என்பது 'ஈழகேசரி' அறியாததல்ல. தமிழர்கள் தலை தாழ்ந்து அடிமைகளாக வாழக்கூடாது. அதேவேளையில் அவர்கள் தலைக்கனம் கொண்டவர்களாகவும் வாழக்கூடாது.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பொது நோக்கே 'ஈழகேசரி' பத்திரிகையின் அடிப்படை நாதமாக அமையும். உலகத் தமிழ் மக்களின் உயர்வே குறிக்கோள். இது அத்தருணத்தில் நான் எழுதிய முதல் பணிவான கருத்துக்கள்.

ஐரோப்பிய நாடுகள் எல்லாம் நல்ல வரவேற்பைப் பெற்ற இப் பத்திரிகை சில வருடங்கள் வெற்றிகரமாக வெளிவந்த போதிலும், அதனை மாதமிருமுறையாக நடத்துவதில் இருந்த நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, 'ஈழகேசரி'-யை மாத சஞ்சிகையாக வெளியிட ஆரம்பித்தேன்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் வெற்றிக்குப் பக்கபலமாக, அக்கருத்துகளை பகிர்ந்துகொள்கின்ற வகையில், ஈழ விடுதலைக் குரலாக சில காலம் ஒலித்த அச்சஞ்சிகையைத் தொடர்ந்து நடத்த முடியாமல் போய்விட்டது என்பதை விட, வேறு சொன்னால் என்ன சொல்ல முடியும்?

ஐரோப்பிய நாடுகள், லண்டன் உள்ளடக்கி வெளியிடப்பட்ட 'ஈழகேசரி' நிறுத்தப்பட்டபோது, ஆதரவுக் கரம் நீட்டி, 'தொடர்ந்து நடத்துங்கள்' என விடுக்கப்பட்ட அன்பான வேண்டுகோள்களை என்றும் நெஞ்சம் மறவாது.

ஒரு பத்திரிகை ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து நடத்துவது என்பது மிகச் சிரமமான பணி. அந்த வகையில் மீண்டும் 'புதினம்' மாத இதழை 1996-ஆம் ஆண்டு ஆரம்பித்தபோது, இங்கிலாந்து தேசத்தின் தமிழர்களை மனதில் கொண்டு, அந்த எல்லைக்குள் மாதமிருமுறை இதழாக வெளியிடத் தொடங்கினேன். விளம்பரங்களை முழுக்க முழுக்க நம்பி நடத்தப்படுகிற இப்பத்திரிகைக்கு, கிடைத்த நல்ல ஆதரவை நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.

2006-ஆம் ஆண்டு 10-வது ஆண்டு விழாவை விளம்பரதாரர்கள், வாசகர்கள் திருவிழாவாகக் கொண்டாடியபோது, ஆயிரமெனத் திரண்ட பெரும் கூட்டத்தைக் கண்டு பிரமித்து மெய்சிலிர்த்தேன். கலைகளின் சங்கமமாக மிளிர்ந்தது அந்த விழா. அதனைத் தொடர்ந்து மற்றுமொரு பத்தாண்டுகள் கழிந்து, இருபதாவது ஆண்டு நிறைவை 'புதினம்' கொண்டாடியதென்றால், அதற்கு முழுமையான காரணமாகத் திகழ்ந்தது வாசகர்களும், விளம்பரதாரர்களுமே! அவர்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை.

'Facts are sacred; Comment is Free'. இந்தப் 'பத்திரிகை தர்மத்தின்' கோட்பாட்டை வைத்துத்தான் எனது பத்திரிகைப் பயணம் தொடர்கிறது. 'புதினம்' இதழின் இனிய வெற்றிக்கு இதுவே தாரக மந்திரம்.

'பிறர் மனம் நோகும்படியான எதையும் பத்திரிகையில் எழுதக் கூடாது. எழுதுவதற்குக் களம் வைத்துக்கொண்டு, பதில் எழுதுவதற்கு வாய்ப்பு இல்லாதவர்கள் பற்றி அவதூறு எழுதக் கூடாது'.

யாழ் 'ஈழநாடு'-வில் அதன் பிரதம ஆசிரியராக இருந்த அமரர் கே.பி. ஹரன் என்னிடம் ஒரு தடவை 'கண்டிப்போடு' சொன்ன மேற்படி வரிகள், இப்போதும் என் நெஞ்சில் எதிரொலிக்கின்றன, அவை இன்றும் வழிகாட்டுகின்றன.

பணிவோடும், பண்போடும் - ஆனாலும் துணிவோடும், துடிப்போடும் தமிழ் மக்களின் உயர்வுக்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஏற்றமுடன் பணி செய்ய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். Covid 19 தொற்று இவ்வுலகில் பலரது வாழ்க்கையையும், தொழில்களையும் புரட்டிப்போட்டுவிட்டது. நானும் அதற்கு விதிவிலக்கல்ல. அடுத்தது என்ன? சூழல்கள் கனிந்து வருமா? காலம் பதில் சொல்லும்!



info@thaiveedu.com























# பத்திரிகைத் துறை ராஜகோபாலுக்குக் கைவந்த கலை

– சசிபாரதி

நெஞ்சம் மறக்காத அந்த நினைவுகள்...

பள்ளிப் பையனொருவன் அரைக்காற்சட்டையுடன் 'ஈழநாடு' அலுவலகத்துக்கு வந்து ஒரு கடிதத்தை நீட்டுகிறான்.

எனது முக்கிய நண்பர்களில் ஒருவரான 'தாழையடி' சபாரத்தினம் கொடுத்த கடிதம் அது.

பிரித்துப் படிக்கின்றேன்.

'இக்கடிதம் தரும் தம்பி எழுத்துத் துறையில் பிரகாசிக்க விரும்புகிறார். அவருக்கு ஆதரவு அளிக்க வேண்டும்' என்று எழுதியிருந்தார். கடிதத்தைப் படித்து முடிக்கவும், இன்னொரு என்வலப்பை நீட்டுகிறான் பொடியன்.

அது ஒரு சிறுகதை. பெயர்: 'மொட்டை மரம்'

அடுத்த வாரமே அந்தச் சிறுகதை 'ஈழநாடு' வார மலரில் வெளியானது.

விட்டானா பின்னே ?

சிறுகதை, கட்டுரை என்றெல்லாம் எழுதித் தள்ளினான்.

படித்துக் கொண்டு இருக்கும்போதே 'விவேகி' என்ற சஞ்சிகையின் பொறுப்பை ஏற்றார். ராஜகோபாலின் வேகத்துக்கு 'விவேகி' ஈடு கொடுக்காது போகவே (விவேகி மாத ஏடு) 'ஈழநாடு' ஆசிரியர் குழுவில் ஒருவராகச் சேர்ந்து கொண்டார்.

செய்திகளை எடுப்பதிலும், செய்திகளைத் தயாரிப்பதிலும் அவரிடம் ஒரு தனித்துவம் இருந்தது.

'ஈழநாடு' வாரமலர் ஆசிரியராக இருந்த எனக்கு உதவியாக இருந்து கலையரங்கம் பகுதியைச் செய்தார். 'நம் நாட்டுக் கலைஞர்கள்' என்ற அவரது வாரா வாரம் வெளிவந்த பகுதியினால், தலை நிமிர்ந்தார்கள் ஈழக் கலைஞர்கள்!

எந்த எந்தச் செய்தியை எப்படி எப்படி எழுத வேண்டும் என்ற வித்தை கைவரப்பெற்ற பத்திரிகையாளர் ராஜகோபால். வாசகர்களோடு அந்தரங்கமாக உறவாடும் சக்தி அவர் பேனாவுக்குண்டு.

அவர் எழுதிய ஒரு செய்தி, என்னை ஒரு பெண்ணைப் போலக் கேவிக் கேவி அழவைத்துவிட்டது! அந்தச் செய்தி குறிப்பிட்ட சம்பவத்தை என் நெஞ்சம் இறுக்கமாகப் படம் பிடித்துவிட்டதால், இன்றும்கூட அதனை நினைக்கும்போது என் கண்கள் கலங்கும்.

இரணைமடுக்குளத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த அந்தப் பிஞ்சுச் சிறுமி பலியாகிவிட்டாள். கடைசியாக நீரின் மேல் அவளது ஒரு கையின் விரல்கள்

தெரிகின்றன. இது அழியாத காட்சியாக என் மனதில் பதிந்து விட்டது. அந்தச் செய்தியைப் படித்த அத்தனை பேரும் அந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் ஆத்ம இளைப்பாறுத லுக்காக நிச்சயம் வேண்டுதல் செய்திருப்பர்.

தமிழ் அமைச்சர் ஒருவர் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்த காலம் அது.

'ஏழுவயதில் தாய்' என்ற தலைப்பில் 'ஈழநாடு' வாரமலரில் அவர் எழுதிய உணர்ச்சிவசமான உண்மைச் சம்பவம் என் நினைவில் இன்னமும் நிற்கிறது.

தாய், தந்தையை இழந்த மூன்று சின்னஞ்சிறு அனாதைப் பெண் குழந்தைகள்... மூத்தவளுக்கு வயதோ ஏழு... உறவினர் வீட்டில், ஒரு குடிசைக்குள்... அந்த ஏழு வயதுச் சிறுமியே தாயாக இருந்து, தன் சகோதரங்களைப் பேணும் காட்சியை... ஓ! இந்தக் 'கதை'யின் இறுதியில் ஒரு கேள்வி: கருணையே வடிவாக, ஈவிரக்கமுள்ளவர்களாகப் 'போட்டோ வுக்குப் போஸ்' கொடுக்கின்ற அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், வறுமையோடு போராடும் இந்த அனாதைச் சிறுமியர்களுக்கு உதவுவார்களா?'


அடுத்த நாளே தமிழ் அமைச்சர், குறிப்பிட்ட அனாதைச் சிறுமிக்கு நிதி உதவி ஒன்றை ஆரம்பிக்கும்படி கேட்டு. 'செக்' ஒன்றை 'ஈழநாடு'க்கு அனுப்பியிருந்தார். ராஜகோபாலின் எழுத்து அந்த நிதி மூலம் அனாதைச் சிறுமிக்கு பெருந்தொ கையைச் சேர்த்துக் கொடுத்தது.

'ஈழநாடு' நிர்வாகிகளோடு, அவர் கருத்து வேறுபாடு கொண்டு வெளியேறியபோது நான் மட்டுமல்ல, அங்கு பணியாற்றிய அத்தனை பேரும் கண்கலங்கிவிட்டார்கள்! கொழும்பு 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் 'தினகரன்' பத்திரிகையில் திரு. ஆர். சிவகுருநாதனின் கீழ் துணை ஆசிரியராகச் சேர்ந்து பல புதிய அம்சங்களைச் செய்தார்.

ஆறு ஆண்டுகள் அங்கு பணியாற்றிய அவர் விடுமுறையில் 1980-ஆம் ஆண்டு லண்டனுக்குச் சென்று ஒரு வருடத்தின் பின் நாடு திரும்பினார். அதன் பின் மீண்டும் 'ஈழநாடு' அவரை அணைத்துக் கொண்டது. எந்தக் கருத்து வேறுபா டுகள் ஏற்பட்ட போதிலும், மறைந்த தமிழ்ப் பெரியார். 'ஈழநாடு' நிர்வாகி உயர்திரு. கே.ஸி. தங்கராஜா அவர்கள் ராஜகோபாலின் திறமைக்கு மதிப்புக் கொடுத்தவர் என்பதைப் பலரும் அறிவார்கள்.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தைப் பகுதியில் ஆறுமாத இளம் கர்ப்பிணிப் பெண் ராணுவ வெறியர்களால் கற்பழிக் கப்பட்ட போது, வெகுண்டு எழுந்து தன் பேனாவால் போர் தொடுத்தார். இதனால் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தொடர்ந்து 1985 மே மாதம் குடும்பத்தோடு லண்டனுக்குத் தப்பிப் போனார். இவருக்கும், இவரது குடும்பத்துக்கும் பிரிட்டிஷ் அரசு அரசியல் புகலிடம் அளித்தது.

'கடலையும், கடற்கரையையும் தரையையும் கட்டி ஆண்ட வர்கள். எவரையும் அடிமைப்படுத்தாமல், யாருக்கும் அடி மைப்படாமல், தன்மானத்தோடு வாழ்ந்தவர்கள் வல்வெட் டித்துறை மக்கள். வீரத்தின் விளைநிலம் அது. அந்த மண்ணின் அயல் கிராமமான வல்வெட்டியில் பிறந்தவன்



நான்!' என்று ராஜகோபால் நண்பர்களிடம் சொல்லிப் பெரு மைப்படுவார்.

அவ்வப்போது 'ஈழநாடு', 'தினகரன்' பத்திரிகைகளில், வல் வெட்டித்துறை கப்பலோட்டிகள் பற்றிப் பல கட்டுரைகள் எழு தியுள்ளார். ஆனால், இப்போது அவர் செய்துள்ள பெரும் விஷயம் லண்டனிலிருந்து சரித்திரம் படைத்திருக்கிறார்.

பரந்துபட்ட பசுபிக் சமுத்திரத்தைத் தாண்டிப் பனை உயரத் துக்கு மேலாக, அலை அடித்து எழுந்து கொந்தளித்துக் கொண்டிருக்கும் 'அத்திலாந்திக்' சமுத்திரத்தினூடாக ஐந்து மைல் ஆழமுள்ள தண்ணீருக்குள் வீரசாகசப் பயணம் செய்த அந்த வரலாற்று நாயகர்களின் 'கதை'யைப் படிக்கும் போது மெய் சிலிர்க்கிறது.

ராஜகோபாலின் எழுத்துத் திறமை தனித்துவமானது.

பத்திரிகைத் துறை ராஜகோபாலுக்குக் கைவந்த கலை.



# ஈ.கே. ராஜகோபால் ஒரு சாதனையாளர்!

## - எஸ்.எம். கோபாலரத்தினம் (கோபு) -

பதினெட்டு வயதிலேயே பத்திரிகையைத் தனது வாழ்வாகத் தேர்ந்தெடுத்தவர், வெள்ளையரின் லண்டன் மாநகரில் தமிழ்ப் பத்திரிகையின் இருபதாவதாண்டு நிறைவைக் கொண்டாடியவர், ராஜகோபால்.

சிறுவன் என்று அலட்சியப்படுத்த முடியாமல், இளைஞன் என்று உற்சாகப்படுத்த முடியாமலுமுடைய தோற்றத்தில் முதல் தடவையாக ராஜகோபாலை நான் சந்தித்தேன்.

இவர் ராஜகோபால், வல்வெட்டியிலிருந்து வருகிறார். படிக் கும்போது விவேகியில் வேலை பார்த்தவர். இது இவருக்குத் திருப்திப்படவில்லை. தினசரிப் பத்திரிகையில் பணியாற்ற வேண்டுமென்ற துடிப்பில் ஈழநாடு பத்திரிகைக்கு வந்திருக் கிறார் என்று நண்பர் சசிபாரதி சபாரத்தினம் இவரை ஒரு நாள் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஈழநாடு இப்போது தினசரிப் பத்திரிகையாக பல சிரமங் களைச் சுமந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் இவருக்குச் சம்பளமும் கொடுத்துப் பத்திரிகைப் பயிற்சி அளிப்பதற்கு நிர்வாகம் தயாராக இருக்குமா? என்று தெரியவில்லை என எனது சந்தேகத்தை வெளியிட்டேன்.

அதைப் பற்றிய கவலை வேண்டாம். ஈழநாடு நிர்வாக இயக்கு நரான டாக்டர் கே.சி. சண்முகரெத்தினம் இவரை பத்திரிகைப் பயிற்சிக்கு எடுப்பதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டார் என்று சசிபாரதி சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் புளுறிபன் என்றொரு ஹோட்டலை நவீன முறையில் பாலசிங்கம் என்பவர் துணிச்சலுடன் தொடங்கியி ருந்த சமயம் அது. இந்த பாலசிங்கம் ஒரு சட்டத்தரணியு மாவார்.

இவர் ஒரு இடதுசாரி அரசியல் சார்புடையவராகவுமிருந்தார்.

அதே போக்குடைய டாக்டர் சண்முகரெத்தினமும் இவரும் நண்பர்கள்.

ராஜகோபால் ஈழநாடு பத்திரிகையில் சேர்ந்து பத்திரிகை பயிற்சி பெறலாம். முதல் மூன்று மாதங்களுக்கு வேதனம் எதுவும் வழங்கப்படமாட்டாது. போக்குவரத்து செலவும்கூடக் கொடுக்கப்பட மாட்டாது. மூன்று மாதங்களுக்கு பின் சிறிது அலவன்ஸ் வழங்கப்படுவது பற்றி இவரது பயிற்சியில் திருப்தி கண்டால் ஆலோசிக்கப்படும் என்று நிர்வாகம் தெரி வித்தது.

ராஜகோபாலும் சம்மதம் தெரிவித்துச் சேர்ந்து கொண்டார்.

புளுறிபன் பாலசிங்கம் ராஜகோபாலுக்கு உறவினர் என்று அறிந்தேன்.

சில வாரங்களின் பின்னர் நிர்வாக ஆசிரியர் ஹரன் அவர்க ளுடன் பேசுகையில் இராஜகோபாலுக்கு போக்குவரத்து செலவாக ஏதாவது கொடுத்தால் நல்லது என்று சொன்னேன்.

அவரே சம்மதித்து வந்து கொண்டிருக்கிறார். டாக்டர் அதைப் பற்றி பார்த்துக் கொள்வார் என்று ஹரன் ஐயா சொல்லி விட்டார்.

ஈழநாடு ஆசிரிய பகுதியில் ராஜகோபாலும் ஒருவராகப் பணி யாற்றத் தொடங்கியிருந்தார். அது ஒரு குடும்பம் போல சுக துக்கங்களில் ஒவ்வொருவரும் பங்கெடுத்துக்கொள்வார்கள். வேலைகளும் கலந்து செய்துகொள்வர்கள்.

சந்தேகங்கள் வரும்போது நான் வழிகாட்டுவேன். நிர்வாக ஆசிரியர் ஹரன் ஐயாவுடனும் கலந்தாலோசனை செய்து கொள்வோம்.

அலுவலகத்தின் உள்ளே சிறு சிறு மொழிபெயர்ப்பு வேலைகள் செய்வதுடன் வெளியே நடக்கும் அரசியல் கட்சிக் கூட்டங்கள், இலக்கிய, சமயக் கூட்டங்களுக்கும் சென்று செய்தி எடுத்துவருவதற்கும் உதவி ஆசிரியர்களாகப் பணி யாற்றும் ஆசிரிய குழுவினர் சென்று வர வேண்டும்.

இவைத்தவிர உள்நாட்டுப் பிரமுகர்கள், வெளிநாட்டிலிருந்து வருபவர்களைச் சந்தித்துப் பேட்டி கண்டும் பத்திரிகையில் வெளியிட வேண்டும். ராஜகோபாலும் இதனைச் செய்தார்.

ராஜகோபால் பழகிய வட்டாரங்களும் படித்த புத்தகங்களும் எவரையும் அமெரிக்க முதலாளித்துவவாதி என்ற சந்தேகக் கண்கொண்டே பார்க்கச் செய்தது.

எவரையும் துருவி ஆழமாகப் பார்க்கும் சக்தியுடன் சந்தேகப் பார்வையும் அதிகம் இவரிடம் இருந்தது.

தன்னை ஒரு தேர்ந்த இடதுசாரியாகவே கருதினார். இதற்கு 'ஈழநாடு' நிர்வாக சபையில் இருந்த சிலரின் போக்கும் சாதகமாக இருந்தது. அன்றைய யாழ்ப்பாண அரசியல் போக்கிற்கு சற்று மாறாகவும் இருந்தது.

தமிழ், தமிழ் அரசு என்ற கோஷம், சத்தியாக்கிரம், சாத்விக போராட்டம் மொஸ்கோவைப் பின்பற்றிய இடதுசாரிகளுக்கு வெறுப்பாக இருந்தது. தமிழ், தமிழரசு, சாத்வீக போராட்டம் பைத்தியக்காரத்தனம் என்று அவர்கள் கருதினர்.

ராஜகோபாலுக்கும் இதே கருத்து இருந்தாலும், ஈழநாடு பத் திரிகையில் அதைத் திணிக்க முயலவில்லை.

ஆனால், தமிழர்களின் சாதனைகளை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதில் ராஜகோபால் தீவிரமாக இருந்தார். குறிப்பாக வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு போன்ற வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் நிகழ்த்திய சாதனை களை உலகறியச் செய்ய வேண்டுமென்பதில் பெரும் ஈடு பாடு காட்டினார்.

வரலாற்றில் முதல் தடவையாக பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நவரத்தினசாமியின் சாதனையை அச்சமயம் ஆட்சியி லிருந்த சேர். ஜோனின் ஐக்கியதேசியக் கட்சி வலதுசாரி அர சாங்கம் அதிக அக்கறை செலுத்தி உலகறியச் செய்ய வில்லை என்பது ராஜகோபாலின் கவலை.

இதன்பின் பாக்கு நிரிணையை நீந்திக் கடந்த ஆழிக்குமரன் ஆனந்தனின் சாதனையை, பாக்கு நீரிணையை நீந்தி கடந்த சாதனை மட்டுமல்ல, ஆனந்தன் பிரஞ்சுக் கால்வாயை நீந்திக் கடக்க முயன்று உயிரைப் பலி கொடுத்ததுவரை நிகழ்த்திய சாதனைகளை ராஜகோபால் பல கட்டுரைகளைப் பல்வேறு ஊடகங்களிலும் வெளியிட்டு உலகறியச் செய்து திருப்தியடைந்தார்.

இவை எல்லாவற்றையும் விட இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் தூத்துக்குடியிலிருந்து வெள்ளையருக்கு எதிரா கக் கப்பல் விட்டு வரலாறு படைத்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. என்ற சிதம்பரம்பிள்ளை பற்றி ம.பொ.சி. என்ற அறிஞர் நூல் எழுதி உலகறியச் செய்திருந்தார்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம்பிள்ளைக்கு முன்னரே வல்வெட்டித்துறையிலிருந்து தம்பிப்பிள்ளை என்ற தண்டை யல் தமது சகாக்களுடன் இன்றும் படுபயங்கரமாகக் கருதப் படும் அத்திலாந்திக் சமுத்திரத்தையும் தாண்டி அமெரிக்கா வுக்கு பாய்க் கப்பலில் போய்ச் சேர்ந்து சாதனை படைத்த வரலாற்றை ராஜகோபால் ஈழநாடு இதழ்களில் தொடராகவும் பின்னர் நூலாகவும் எழுதி வெளியிட்டு கப்பலோட்டிய வல் வெட்டித்துறை வரலாற்று வீரர்களை உலகறியச் செய்தார்.

ஈழத்தின் சாதனையாளர்கள் சிலரை உலகம் அறிந்து போற்ற வேண்டும். தமிழன் என்ற காரணத்தினால் இவர்களின் சாதனைகளை மறைக்கவும் மறக்கவும் கூடாது என்று எடுத் துக்காட்டியவர் ராஜகோபால்.

வாலிபத் துடிப்பும் அவர் பழகிய வட்டாரங்களும் ஆரம்ப காலத்தில் சர்வதேசவாதியாகச் சிந்தித்த ராஜகோபால் இலங் கையில் இனவாதம் பொதுவுடமைத் தத்துவத்தையே மாசுப டுத்திவிட்டதென்பதைப் பின்னர் உணர்ந்தார். அதே சமயம் மொஸ்கோவும் மாயை என்பதையும் அறிந்துகொண்டார்.

இன்று தமிழ்த் தேசியத்துக்காக உறுதியுடன் குரல் கொடுத்து உலக வரலாற்றிலேயே தமிழ்த் தேசியத்தையும் தமிழ்த் தேசியப் போராட்டத்தையும் எடுத்துக்காட்டிச் சாதனை செய் பவராக ராஜகோபால் விளங்குகிறார் என்று சொல்வது மிகையாகாது!

'கப்பலோட்டிய தமிழர்கள்' என்று வல்வெட்டித்துறையிலி ருந்து அமெரிக்காவுக்குப் பாய்க்கப்பலில் முதன்முதலாக அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து சென்று சாதனை நிகழ்த்திய தண்டையல் பற்றியும் அவரது சகாக்கள் பற்றியும் ராஜகோபால் எழுதி வெளியிட்டிருக்கும் நூல் வரலாற்றாய்வா ளர்களுக்கு வழிகாட்டியாக அமையலாம்.

ஈழத்தமிழர்களின் சாதனைகளை இனியும் புறக்கணிக்காமல் ஈ.கே. ராஜகோபால் அவர்களின் இந்நூலை ஆதாரமாக வைத்து வரலாற்றாய்வாளர்கள் கப்பலோட்டிய தமிழர்கள் பற்றி விரிவான வரலாற்றைப் படைக்க முன்வர வேண்டும்.

இதே சமயம் ராஜகோபால் அவர்களின் சாதனையையும் அங் கீகரிக்க வேண்டும் என்பதே எனது பேரவா!



info@thaiveedu.com